GOKULAM நவம்பர் '96 ரூ. 5/

கோகுலம்



கை நிறைய மத்தாப்பு
முகம் நிறைய புன்சிரிப்பு!



JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering 6 books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 6 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these. I promise to accept the V.P. every month.

NAME ____________

ADDRESS ____________

____

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ____________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

DIAMOND HOROSCOPE 1997 (Forecast & Weekly Predictions for each Rashi) Price Per Rashi Rs. 15/-

DIAMOND COMICS PVT. LTD. X-30 OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd (Branches Madurai & Coimbatore **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

1996
நவம்பர்
மலர் : 14
இதழ் : 9

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும் - பாரதியார்.




அருமைச் சிறுவர் சிறுமியரே,

அன்பு வணக்கம்.

அனைவருக்கும் அன்பான தீபாவளி, குழந்தைகள்தின வாழ்த்துகள்.

சுதந்திர பெற்ற நவீன பாரதத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்டவர் நேருஜி. உலக மக்கள் போர் அபாயம் இன்றி அமைதியாக வாழ வேண்டும் என்று அயராது உழைத்தவர். இந்தியாவை உலக நாடுகளுக்கிடையே தனிப் பெருமையும் முக்கியத்துவமும் கொண்ட நாடாக்கிக் காட்டினார். ஒற்றுமை உணர்வு கொண்டு, மத, மொழி, இன வேறுபாடுகளைக் களைந்து புதிய உலகத்தை உருவாக்கும் வல்லமை பெற்றவர்கள் எதிர்காலக் குடிமக்களாகிய இன்றய குழந்தைகளே என்று அவர் உறுதியாக நம்பினார். அதனால்தான் அவர் குழந்தைகளிடம் அளவில்லாத ஈடுபாடு கொண்டிருந்தார். படிக்கும் வழக்கம் குழந்தைகளிடையே வளர வேண்டும், அவர்களுக்காக அருமையான புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்ற இலட்சியம் அவருக்கிருந்தது.

மத்திய அரசின் சிறந்த சிறுவர் புத்தகங்களுக்கான என்.சி.ஈ.ஆர்.டி. விருது நேரு காலத்தில் தொடங்கப்பட்டதே. நேருவின் பெருமைகளைக் கூறும் பகுதிகள் இந்த இதழில் வெளியாகின்றன.



நல்ல நூல்களைக் குழந்தைகள் படிக்கும்படி செய்ய வேண்டும் என்ற நேருவின் இலட்சியங்களுக்கு உதவி செய்யும் வகையில் "என்னைக் கவர்ந்த புத்தகம்" என்ற புதிய பகுதி ஒன்றைத் தொடங்க இருக்கிறோம். இதில் உங்களைக் கவர்ந்த, சிறுவர்க்கான புத்தகங்களின் பெருமைகளைப் பற்றி நீங்கள் எழுதலாம். இது பாட்டுப் புத்தகமாகவும் இருக்கலாம், சிறு கதைத் தொகுதியாகவும் இருக்கலாம், நாவல் அல்லது நாடகமாகவும் இருக்கலாம். எழுதியவர் பெயர், வெளியிட்ட பதிப்பகத்தின் பெயர் முகவரி, பக்கங்கள், விலை போன்ற தகவல்களையும் தர வேண்டும். இதை ஒரு அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்பலாம்.

கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியரான குழந்தைக் கவிஞரின் பிறந்த நாளும் இந்த மாதம் 7ஆம் நாள் வருகிறது. அவரைப் பற்றிய ஒரு கட்டுரைப் பகுதியும் வெளியாகிறது. இடமில்லாத காரணத்தால் கேளுங்கள் சொல்லப்படும், உங்கள் நூலகம் பகுதிகள் இந்த இதழில் இடம் பெறவில்லை.

சிறுகதைப் போட்டியின் முடிவை அடுத்த இதழில் வெளியிட முயன்று வருகிறோம்.

அன்புடன்
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்

1996 நவம்பர்

இந்த இதழில்...

கதைகள்



* வேண்டாம் வேண்டாம் ஆட்டம்பாம்! பக்கம் 4



* பிடித்து இழுத்த பேய் (திக் திக் கதைகள்) பக்கம் 73



* ராணா போட்ட மாவிளக்கு! (படக்கதை) பக்கம் 33



* மானுக்குக் கொம்பு ஆபத்தா? பக்கம் 17

தொடர்கதை



நெஞ்சில் நிறைந்தார்!

சாந்த மூர்த்தி என்று
சரிதம் கூறு கின்ற
காந்த வாரி சாகக்
கடமை யாற்றி வாழ்ந்தார்.

முதுமை வந்த போதும்
மூப்புத் தெரிந்தி டாமல்
இதயம் இளமை யாக
இருக்கு மாறு வாழ்ந்தார்.

போரில் வாமல் இந்த
பூமி வாழ எண்ணி
யார்க்கும் அஞ்சி டாமல்
ஏற்ற மோடு வாழ்ந்தார்.

நேரு இந்த நாட்டை
நேர்மை யாக ஆண்டு
சீர்மி குந்த மண்ணாய்ச்
செய்து நெஞ்சில் நிறைந்தார்.

– பூவிழி வண்ணன்

வேண்டாம் வேண்டாம்

ஆட்டம் பாம்!



அறிவில் சிறந்தவரும், பழுத்த அனுபவசாலியுமான அமைச்சர் புலியார் கவலை நிறைந்த முகத்துடன் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே தலை சிறந்த மருத்துவ ஆராய்ச்சியாளரான டாக்டர் கரடியார் நின்றிருந்தார்.

"முதலில் நான்கூட அசட்டையாகத்தான் இருந்தேன். வேம்பு மலை குகையைச் சேர்ந்த புலிக்கு என்னுடைய மருத்துவமனையில்தான் மூன்று குட்டிகள் பிறந்தன. புலிகள் கூர்மையான செவிப்புலன் கொண்டவை. ஆனால், பிறந்து ஒரு மாதமாகியும் அந்த மூன்று குட்டிகளுக்கும் காது சரியாகக் கேட்கவே இல்லை!"

"அவைகளுக்குக் காது கேட்கவில்லை என்பதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள் கரடியாரே?"

"நர்ஸ் குரங்கம்மா, சோப்புத் தண்ணியை நிரப்ப, பெரிய காலி எவர்சில்வர் பேசினைக் கொண்டு போனபோது, கைதவறிக் கீழே போட்டிருக்கு. காலியான பெரிய எவர்சில்வர் பேசின் கீழே விழுந்தால், எப்படிப்பட்ட சத்தம் கேட்கும் என்பது உங்களுக்கும் தெரியும். எல் லோரும் ஒரு நொடியாவது அதிர்ந்து போவார்கள். அப்படித்தான் ஆஸ்பத்திரியில் இருந்த அத்தனை பேரும் ஒரு நொடி அதிர்ந்து போனோம். ஆனால், இந்தப் புலிக்குட்டிங்க மூணும் கொஞ்சம்கூட அதிரவே இல்லை! இத்தனைக்கும், பேசின் விழுந்தது அவைகளுக்கு அருகே தான். அம்மாப் புலி கூட அதிர்ச்சியடைந்து உறுமியது. அப்பத்தான் எனக்குக் கவலை பிடித்தது. குட்டிகளைப் பிரித்து பரிசோதனை நடத்தினேன். அவைகளுக்கு செவிப்புலன் பாதிக்கப்பட்டிருக்கும் சந்தேகம் உறுதியானது"– கரடியார் நிறுத்தினார்.


அவர் மேலும் கூறப் போவதைக் கேட்க புலியார் ஆவலாக இருந்தார்.

"இதற்குப் பிறகுதான் குட்டிபோட வரும் எல்லா விலங்குகளையும் கவனமாகப் பரிசோதிக்க ஆரம்பித்தேன். தேனருவிக் காட்டு யானை போட்ட ஒரே குட்டி, பழுப்புக் கரடி போட்ட குட்டிகள், கரும்பு வயல் நரியாருக்குப் பிறந்த குட்டிகள், மாமரத்துக் குரங்குக்குப் பிறந்த குட்டிகள் என்று எல்லாவற்றையும் தீவிரமாகப் பரிசோதித்தேன். எல்லாமே, கேட்கும் திறமை பாதிக்கப்பட்டவையாகப் பிறக்கின்றன என்ற பயங்கர உண்மையைக் கண்டுபிடித்தேன்."

டாக்டர் கரடியார் நிறுத்தி மூச்சு விட்டு மறுபடி ஆரம்பித்தார்.

"இப்படி செவிப்புலன் பாதிக்கப்பட்ட குட்டிகளின் அம்மாக்கள் எல்லாமே இரைச்சல், சத்தம் மிக்க காதைச் செவிடாக்கும் ஒலிபெருக்கிகள் அலறும் திருமண மண்டபங்கள், பொதுக்கூட்டங்கள் நடக்கும் மைதானங்கள்,

ஊர்வலம் நடக்கும் பெரிய சாலைகளை ஒட்டி வாழ்பவை என்பதையும் அறிந்து கொண்டேன். நகரத்திற்குச் சென்று சிலவற்றை உறுதிப்படுத்திக் கொண்டேன். ஒலிபெருக்கி, இயந்திர இரைச்சல் ஆலை ஓசை, வெடிச்சத்தம் காரணமாக மனிதர்களும் பாதிக்கப்படுகிறார்களாம். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் செவிப்புலனும் பாதிக்கப்படுகிறதாம். அதனால், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் இவை சத்தத்தை வெளியிடக்கூடாது என்று விதிகள் வைத்திருக்கிறார்களாம். அதிர்வெடி, ஆட்டம்பாமை நகருக்குள் வெடிக்கத் தடை உள்ளதாம். அத்தனை ஏன், இந்த மாதிரி இரைச்சல் நிறைந்த சூழ்நிலையில் வாழும் ஆரோக்கியம் மிக்கவர்கள் கூட நாளடைவில் மனநோயாளியாக மாறிவிடுகிறார்களாம். நான் செய்துள்ள பரிசோதனைகளும் ஆராய்ச்சிகளும் கூட இந்த முடிவை உறுதிசெய்கின்றன. அதனால், மனிதர்கள் இலக்காகியுள்ள அதே பேரிரைச்சல் அபாயங்களுக்கு நாமும் இலக்காகியுள்ளோம் என்பது உறுதியாகி விட்டது. இரையைப் பிடிக்கவும், அபாயங்களில் இருந்து தப்பவும் நமக்கு செவிப்புலன் துல்லியமாக இருக்க வேண்டியது மிக மிக அவசியம். இதற்கு உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்யாவிட்டால் நம் வருங்கால சந்ததி இரை பிடிக்க முடியாமல் பட்டினிக்குப் பலியாகி அழியும். இல்லை, நெருங்கி வரும் அபாயங்களை அறியாமல் அழியும்."



கரடியார் முடித்தார்.

"கரடியாரே, எங்கள் தலைமுறையில் நாங்கள் சந்திக்காத பல அபாயங்களை இந்தத் தலைமுறையினர் சந்திக்கிறார்கள். இதைவிடப் பேரழிவுகளை வரும் சந்ததியினர் சந்திக்க உள்ளார்கள் என்பது மிகவும் கவலைக்கு உரியது. இப்படி ஓர் ஆராய்ச்சிப் பரிசோதனையை நீங்கள் அரசாங்கத்தின் உதவி இன்றிச் செய்து கண்டுபிடித்திருப்பது பாராட்ட வேண்டிய ஒப்பற்ற பணி. இதற்கு என்ன தடுப்பு நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் நீங்களே கூறுங்கள்?" என்றார் அமைச்சர் புலியார்.

"ஒலிபெருக்கிகளை இஷ்டப்படி அலறவிடத் தடைபோடுங்கள். ஆட்டம் பாம்களையும், அதிர்வெடிகளையும் அடர்ந்த காட்டுக்குள் பயன்படுத்தக் கூடாது என்றும், மீறுபவர்



இளவரசிக்கு இது தலைதீபாவளி ஆயிற்றே? சிறப்பாகக் கொண்டாட வேண்டாமா? என்னவோ சூப்பர் ஆட்டம்பாமாம்! இப்பத்தான் கண்டுபிடித்தார் களாம். வெடிக்கும் போது பூமியே அதிருமாம்! அதோட ஒரு லட்சம் வாலான்னு ஒரு எலெக்ட்ரிக் சரமாம். அந்த சரம் அரை மீட்டர் நீளம் இருக்குமாம். அதில் ஒரு லட்சம் பட்டாஸ் இருக்குமாம். பத்து நிமிஷம் இடைவெளி இல்லாமல் வெடிக்குமாம். இப்பத்தான் பட்டாசுத் தொழிற்சாலையிலேருந்து இரண்டு பேர் வந்து கேட்டாங்க. சரின்னு சொல்லிட்டேன். தலைதீபாவளி மறக்க முடியாத தீபாவளியா இருக்கப் போறது" என்றார் சிங்கராஜா மகிழ்ச்சியுடன்.

அமைச்சர் புலியாரும், டாக்டர் கரடியாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஆமாம், எங்க டாக்டர் கரடியாரையும் கூட்டிக் கொண்டு வந்தீர்கள்?" என்று தானாகவே கேட்டார் சிங்கராஜா.

"பட்டாசு, ஆட்டம்பாம், ஒலிபெருக்கி போன்றவைகளின் பேரிரைச்சல், தாயின் வயிற்றில் இருக்கும் குட்டிகளின் கேட்கும் திறனைக்கூடப் பாதிக்கிறதாம். ஓசைகளுக்கு நடுவே வாழ்பவர்கள் நிலை,

களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும் என்பதையும் அறிவியுங்கள். இப்போதைக்கு இந்த இரண்டும் போதும்" என்றார் டாக்டர் கரடியார்.

"நான் சிங்கராஜாவிடம் பக்குவமாக எடுத்துக்கூறி, தனி உத்தரவு பிறப்பிக்க ஏற்பாடு செய்கிறேன். இதுபற்றி சிங்கராஜாவிடம் கூறும்போது, அவருக்கு ஏதாவது சந்தேகம் எழுந்தால், உரிய விளக்கத்தைத் தர நீங்களும் அருகே இருந்தால் நல்லது. என்னோடு நீங்களும் வாருங்கள்" என்று கிளம்பினார் புலியார்.

அவர்கள் போன போது சிங்கராஜா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்.

"நானே உங்களை வரவழைக்க வேண்டும் என்று எண்ணினேன். இரண்டாவது

இன்னும் மோசமாம். அதனால் நகரங்களில், ஆட்டம்பாம்களுக்குத் தடையும், ஒலிபெருக்கிகளை இஷ்டப்படி அலறவிடவும் மனிதர்கள் தடைவிதித்திருக்கிறார்களாம். நமது வருங்கால சந்ததியரின் நலனைக் கருதி நாமும் காட்டில் அதை அமுல்படுத்தலாம் என்று நாங்கள் நினைக்கிறோம்'' என்றார் அமைச்சர் புலியார்.

சிங்கராஜா ஏதோ கூற வந்தார். அதற்குள் அங்கு வந்த இளவரசர் ''உங்களுக்கெல்லாம் வயதாகி விட்டது. தாங்கும் சக்தி போய் விட்டது. அதனால் பழியை வெடிச்சத்தத்தின் மேலும், ஒலிபெருக்கியின் பேரிலும் போடுகிறீர்கள். என் போல இளைஞர்கள் இந்தக் கருத்தை எதிர்க்கிறோம். ஆட்டம்பாமுக்கும், ஒலிபெருக்கிக்கும் எந்தவிதத் தடையும் இருக்கக்கூடாது. ஏதாவது தடைவிதித்தால், இளைஞர்கள் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்துவோம்'' என்றார் கடுமையாக.

அனுபவசாலியான புலியார் டாக்டர் கரடியாரை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

"கரடியாரே, கவலைப்பட வேண்டாம். உம்முடைய கவலை புரிகிறது. நீங்கள் கண்டுபிடித்திருக்கும் ஆராய்ச்சி முடிவு உண்மை என்றால், இந்த இளவரசரே ஆட்டம்பாம் ஒலிபெருக்கித் தடை உத்தரவை வெளியிடக் கட்டாயப் படுத்துவார். தீபாவளிக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கிறதே? கொஞ்சம் பொறுமையாக இருங்கள்'' என்று அமைதிப் படுத்தினார் புலியார்.

அடுத்த நாள் இரவு, டாக்டர் கரடியாரிடம் இருந்து புலியாருக்குத் தொலைபேசி வந்தது.

''இளவரசரின் மனைவிக்கு, இப்பொழுதுதான் மூன்று சிங்கக் குட்டிகள் பிறந்துள்ளன. குட்டிகளும், தாயும் நலம்'' என்றார் கரடியார். புலியார் சிரித்துக் கொண்டே உடனே கிளம்பினார்.

இளவரசர் தந்த இனிப்பை வாங்கிக் கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்த புலியார், "வரும் வெள்ளிக்கிழமை நல்ல நாள். அரச குல வழக்கப்படி, குட்டிகள் பிறந்ததும் எட்டாம் நாள் தந்தையின் கம்பீர கர்ஜனையைக் கேட்டுக் குட்டிகள் நடுங்க வேண்டும். எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டேன்'' என்றார்.

வெள்ளிக்கிழமை. கரடியாரின் மருத்துவமனை. புதிதாகப் பிறந்த மூன்று சிங்கக் குட்டிகளும் தரையில் விளையாடிக் கொண்டிருந்தன. சுற்றிலும் அரச குடும்பத்தினர். அமைச்சர் அதிகாரிகள்.

எல்லோரும் வந்து விட்டோம். உங்கள் கர்ஜனையைக் காட்டி குட்டிகளை நடுங்க வையுங்கள்!'' என்று கேட்டுக் கொண்டார் புலியார்.

சிங்க இளவரசர், தரையில் முகம் பதித்து கம்பீரமாக கர்ஜித்தார். ஒரு முறை அல்ல. பல முறை. தரை நடுங்கியது. எல்லோரும் நடுங்கினர். ஆனால் குட்டிகளைத் தவிர!

''நான் கர்ஜித்துப் பார்க்கிறேன்'' என்றுதானே முன்வந்தார் சிங்கராஜா. அவரது கர்ஜனைகளுக்கும் குட்டிகள் திரும்பவில்லை. தங்கள் பாட்டுக்கு விளையாடிக் கொண்டிருந்தன.

''என்ன ஆயிற்று! புரியவில்லையே?'' என்று கேட்



டார் இளவரசர். சிங்கராஜா கவலையுடன் டாக்டர் கரடியாரைப் பார்த்தார்.

"மகாராஜா, இந்த சிங்கக் குட்டிகள் மட்டுமல்ல, இப்பொழுது காட்டில் பிறக்கும் எல்லா விலங்குகளின் குட்டிகளும், பறவைகளின் குஞ்சுகளும் கூட இப்படித்தான் கேட்கும் திறன் பாதிக்கப்பட்டவையாகப் பிறக்கின்றன. தாய்க்கு ஏற்படும் பேரிரைச்சல் பெருஞ்சத்தம் காரணமாக இவற்றின் செவிப்புலன் வளராமல் பாதிக்கப்படுவதாக நான் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளேன். மனிதர்கள் இதை ஏற்கனவே கண்டுபிடித்து தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து விட்டார்கள். ஒலி பெருக்கிகளை இஷ்டப்படி அலற விடாமல் தடுக்கவும், ஆட்டம்பாம் வெடிக்கவும், ஆலை சத்தங்களுக்கும் தடை கொண்டு வந்து விட்டார்கள். காட்டிலும் அதைக் கொண்டு வர உங்களுடன் பேச வந்தபோது இளவரசர் தடுத்து விட்டார். இளைஞர்கள் தடையை மீறிப் போராட்டம் நடத்துவார்கள் என்று பயப்படுத்தினார்" என்று நிறுத்தினார் கரடியார்.

"எனக்குப் புத்தி வந்து விட்டது. வருங்கால சந்ததியரின் நலன் காக்க உடனே தடையைக் கொண்டு வாருங்கள்...!" என்றார் இளவரசர் அழாத குறையாக.

"அப்போ சூப்பர் ஆட்டம்பாமும், ஒரு லட்சம் வாலாவும்...?" என்று கேட்டார் புலியார்.

"வேண்டவே வேண்டாம்! நமக்கு கண்ணுக்கு இனிமையான புஸ்வாணமே போதும்" என்றார் இளவரசர்.

தீபாவளியன்று

"இந்த வெற்றி என்னுடையது அல்ல. உங்களுடையது" என்றார் கரடியார் புலியாரிடம்.

"தவறு. தன்னலம் கருதாது பாடுபடுபவர் நீங்கள். உங்களுக்கே இதன் பெருமையாவும்" என்று அவர் அணிவிக்க வந்த பொன்னாடையை, டாக்டர் கரடியாருக்கே அணிவித்தார் புலியார்.

சிங்கராஜா கைதட்டினார்.

பாரதி-போட்டி முடிவு

அப்பா! எத்தனை கடிதங்கள்! "முகவரிக் கூப்பன் கிடைக்கவில்லை; எங்க ஊரில் கோகுலம் கடையில் இல்லை. அதனால், முகவரிக் கூப்பனை ஜெராக்ஸ் பண்ணி அனுப்பியிருக்கிறோம்" என்று ஏராளமான வாசகர்கள் எழுதிக் கலந்து கொண்டிருக்கிறார்கள். "எங்களுக்குப் பரிசு கிடைக்காது போனாலும் பரவாயில்லை. பாரதி பற்றிய போட்டியில் கலந்து கொண்டோம் என்ற பெருமை எங்களுக்கும் கிடைக்கட்டும்" என்று பலர் கலந்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலும் எல்லாமே சரியான விடை! இந்தப் போட்டி காரணமாகவாவது பாரதியைப் பற்றிய சிந்தனையில் வாசகர்களை ஈடுபட வைத்த நிறைவு ஏற்பட்டுள்ளது.

குலுக்கல் முறையில் ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. சரஸ்வதி.ஈ, வளத்தி. 2. கலைமணி.ம. மங்கைமடம், 3. ராகவேந்திரன்.வி.பி,திருச்சி-17, 4. சக்தி அருளானந்தம், மல்லூப்பம்பட்டி, 5. சித்ரா.பா, மதுரை-3. 6. பொன்முருகு.டி, தென்காசி. 7. ராஜேஸ்வரி.சி, சிவகாசி. 8. கபிலன்.ம, திருச்சிற்றம்பலம் போஸ்ட் 9. பிரேம்குமார்.ஜெ, பக்கிரித்தக்கா போஸ்ட், 10. ஆதிமூலம்.என், கோவை-6. 11. எழிலரசி.இ, புதுச்சேரி - 10. 12. ஜாகீர் உசேன், ஆலங்குடி, 13. கலைஅரசன். எம்., சேலம் - 14. 14. நந்தினி மாசிலாமணி. பி, மதுரை - 10. 15. கணேசன்.எம், கொழும்பு, ஸ்ரீலங்கா. 16. கிருபானந்த்.ஜி, ஈரோடு. 17. ருக்மணி. மு. தேனி. 18. அறவாழி. நா.இ, புதுச்சேரி - 8. 19. வெண்ணிலா. ஜி.கே. சென்னை - 15, 20. சரவணன்.ஆர், வேட்டைக்காரன்புதூர்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி.

சரியான விடை

1. எட்டயபுரம், 2. அலகாபாத் 3. மதுரை, 4. சூரியோதயம், கர்மயோகி, விஜயா, 5. ஷெல்லிதாசன், 6. கடலூர், 7. பார்த்தசாரதி , 8. 1960, 9. சின்னசங்கரன்கதை, 10. 1985

எல்லோருக்கும் சொந்தம்!

நாடகம்

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



பங்கேற்போர் : பாபு, ரவி, வினோத், கார்த்திக், குமார், ஹரி, மற்றும் பெரியவர்கள் பிரபாகர்.

காட்சி – 1

ரவி : வா பாபு! இங்கே இடம் இருக்கு! இப்படி உட்கார். இப்போ பேசி முடிச்சது நம்ம ஊர் பஞ்சாயத்துத் தலைவர்!

பாபு : அதோ உட்கார்ந்துக்கிட்டிருக்காரே, அவர்தானே பிரபாகர் சார்?

ரவி : ஆமாம் அவரேதான். அவருக்குப் பக்கத்துலே இருக்கறது வினோத்! இந்த 'பாரத் கிரிக்கெட் கிளப்'புக்குத் தலைவன்.

பாபு : அதோ வினோத் அடுத்ததா பேச வரான்!

வினோத் : சுபாஷ் நகர்வாழ் சிறுவர்களே! பெரியோர்களே, இந்த 'பாரத் கிரிக்கெட் கிளப்'பை ஆரம்பிப்பதற்கு எங்களுக்கெல்லாம் உற்சாகமூட்டி ஆலோசனை சொன்னவர் நமது பிரபாகர் சார்தான்! (கைதட்டல்) இதற்கான பொருளுதவியைத் தந்தவரும் இவர்தான். பிரபாகர் சார் கிரிக்கெட்டில் பல பதக்கங்களைப் பெற்றவர்! நமது கிரிக்கெட் கிளப்பை இப்பொழுது பிரபாகர் சார் அவர்கள் திறந்து வைத்துப் பேசுவார்கள். (கைதட்டல்)

பிரபாகர்: சுபாஷ் நகர்வாழ் பெரியோர்களே! தாய்மார்களே! சிறுவர், சிறுமிகளே! "நமக்கு வேண்டுவன இரும்பனைய தசைகளும், எஃகனைய நரம்புகளும்! எவ்வளவுக்கெவ்வளவு நம் உடல் வலிமை பெற்றிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு கடவுளை உணர்தல் நமக்கு எளிது. பலமே வாழ்க்கை! பலவீனமே மரணம் என்றார் சுவாமி விவேகானந்தர். இந்த உடல் பலத்தையும் மன நலத்தையும் தரக் கூடியவை விளையாட்டுக்கள்! பாரத் கிரிக்கெட் கிளப் துவங்கப்படும் இந்தப் பொன்னாளில் உங்களுக்குச் சில அறிவுரைகள். இந்தக் கிரிக்கெட் விளையாட்டின் நுட்பங்களை நீங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு முறைப்படி விளையாட வேண்டும். பிற்காலத்தில் சிறந்த கிரிக்கெட் வீரர்களாகி நம் பிறந்த நாட்டிற்குப் பெருமையைத் தேடித் தரவேண்டும்!

எல்லோரும்: பெருமை தேடித் தருவோம்! நிச்சயம் பெருமை தேடித் தருவோம்!

பிரபாகர்: அடுத்ததாக, உங்கள் குழு வெற்றிகரமாக நடக்க உங்களுக்கு முக்கியமாகத் தேவைப் படுவது ஒன்றுபட்ட' எண்ணமாகும். அதாவது ஒன்றுபடச் செயல்புரியக் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்குத்தான் 'டீம் ஸ்பிரிட்' என்று பெயர். நீங்கள் அத்தனைபேரும் ஒன்றுபட்ட

மனத்துடன் இருந்து, சில நேரங்களில் விட்டுக் கொடுத்தும், சில நேரங்களில் தட்டிக் கொடுத்தும் நடந்து கொள்வீர்களானால் கிளப் வலிமை பெறும்; வற்றாத புகழ் பெறும் என்று கூறி, இந்த 'பாரத் கிரிக்கெட் கிளப்'பினைத் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சியுறுகிறேன். (கைதட்டல்) அது மட்டுமல்ல! நீங்கள் இனி கிரிக்கெட் ஆடும் போது, அவ்வப்பொழுது நேரில் வந்து உங்கள் ஆட்டத்தை ரசிப்பேன். (கைதட்டல்)

எல்லோரும்: எங்கள் கிரிக்கெட் கிளப்- இது பாரத் கிரிக்கெட் கிளப்! (கைகொட்டிப் பாடுகிறார்கள்)

காட்சி : 2

வினோத் : கார்த்திக் ரெடியா?

கார்த்திக்: எஸ் ரெடி! பந்தைப் போடலாம்!

குமார் : டேய் ஹரி! என்னடா இது? நாலு ஓவர் ஆயிட்டுது; இன்னும் இந்த கார்த்திக் சளைக்காம ரன் எடுத்துக்கிட்டிருக்கான்!

குரல்கள் : பிடிங்க, பிடிங்க, 'கேச்' பிடிங்க!

ஹரி: சே, விட்டுட்டான்! குமார், கார்த்திக் இந்த மாதிரி ரன் எடுத்துக்கிட்டுப் போனா, நம்ம கதி அதோ கதிதான்!

குமார்: டேய், அதோ நம்ம பிரபாகர் சார் கூட நம்ம ஆட்டத்தைப் பார்க்க வந்துக்கிட்டிருக்காருடா!

எல்லாரும் : வணக்கம் சார்!

பிரபாகர் : வணக்கம்! ம்...ஆட்டத்தைக் கவனியுங்க!

ஹரி : ஓஹ்... மறுபடியும் இந்த கார்த்திக் சிக்ஸர் அடிச்சுட்டான்!

குமார் : ஹரி, அதோ பாரு, போச்சு பந்து போச்சு! அந்தப் பங்களாவுக்குள்ளே பந்து போயிடுத்து... கண்ணாடி ஜன்னல் கூட 'அவுட்' போல இருக்கு! வா, வா, எல்லோரும் அங்கே போறாங்க, நாமும் போய்ப் பார்க்கலாம்!

வினோத் : சார், வந்து... எங்க பந்து...

வீட்டுக்காரர்: (கோபத்துடன்) ம்ம்!... உங்க பந்துதான். தெரியறது. இங்கே வந்து பாருங்க.... புது ஜன்னலோட கண்ணாடி தூள் தூளாகியிருக்கு!

கார்த்திக் : மன்னிக்கணும் சார்! இனிமே இப்படி நடக்காது சார்!

வீட்டுக்காரர் : கண்ணாடியை உடைச்சதுக்காக அபராதமா நூறு ரூபா கொட்டுங்க... அப்புறம் பந்தைக் கொடுக்கறேன்.

பிரபாகர் : தம்பிங்களா, சார் சொல்றதும் சரிதான்! எல்லாரும் ஒண்ணா கலந்து பேசி அபராதத்தைக் கட்டிடுங்க!

வினோத் : சார், நீங்க கேட்ட அபராதத் தொகையைக்





கொடுத்துடறோம்!

வீட்டுக்காரர் : எப்படி... ஆளுக்கு அஞ்சு ரூபாயா போட்டுக் கொடுக்கப் போறீங் களா?

வினோத் : அப்படி இல்லை சார்... கார்த்திக் அடிச்ச பந்துதான் ஜன்னலை உடைச்சுது.. அதனால கார்த்திக் தான் அபராதத் தொகையைக் கொடுக்கப் போறான்!

கார்த்திக்: வினோத்! இது நியாயமா வினோத்? இது நம்ம கிரிக்கெட் கிளப், நம்ம டீம், நம்ம பந்து, நம்ம பேட்டுன்னு அடிக் கடி சொல்வீங்களே... இப்ப மட் டும் என்னைப் பிரிச்சு பேசறீங் களே?

குமார் : நீ செய்த தவறுக்கு, நீதானே தண்டனை அனுபவிக்கணும்!

கார்த்திக் : வினோத்! இந்த நஷ்டத்துலேயும் நாம எல்லோரும் பங்கு பெறணும்! அதுதான் நியா யம்! அதான் நல்ல டீம்!

எல்லோரும் : அதை நாங்க ஒப்புக்கத் தயாரா யில்லை!

கார்த்திக் : (பிரபாகரனிடம்) சார்! நீங்க சொல் லுங்க சார், இது நியாயமா?

பிரபாகர் : கார்த்திக்! இப்ப உன் டீம்லே இருக்கறவங்க சொல்றபடியே நடந்துக்க. அப்புறம் மத்ததைப் பத்தி யோசிக்கலாம்!

கார்த்திக் : சரி சார்!

காட்சி 3

வினோத் : சார்! சார்!

பிரபாகர் : வாங்க! எல் லாரும் இப்படி உட்காருங்க! உங்களுக்கு ஒரு சுவையான செய்தி சொல்லப் போறேன்.. நம்ம நகருக்குப் பக்கத்து நகர்லே இருக்கற பாலாஜி நகர்லேயும் நேதாஜி கிரிக் கெட் கிளப்புன்னு ஆரம் பிச்சு சிறப்பா நடத்திக்கிட்டு வராங்க. இந்த நேதாஜி கிரிக்கெட் கிளப்புக்கும், நம்ம பாரத் கிரிக்கெட் கிளப்புக்கும் ஒரு மாட்ச் நடத்த தீர்மானிச்சிருக்கேன்! இந்த யோசனைக்கு நேதாஜி கிரிக்கெட் கிளப் சம்மதிச்சுட்டாங்க! நீங்க என்ன சொல்றீங்க?

எல்லோரும் : நாங்களும் ரெடி சார்! எப்ப சார் மாட்ச்?

பிரபாகர் : எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிச்சுட்டு 'எப்போ? எங்கே?'ன்னு சொல்றேன்... தயாராயிருங்க!


காட்சி 4

குமார் : கார்த்திக்! உன் ஆட்டம் அபாரம்!

ரவி : இந்த மாட்சுலே நீ இவ்வளவு விக்கட்டுகள் எடுப்பேன்னு நினைக்கவேயில்லை!

வினோத் : வாங்க வாங்க! பிரபாகர் சார் இப்போ பேசப் போறாரு. உட்காருங்க!

பிரபாகர் : சிறுவர்களே! பாரத் கிரிக்கெட் அணிக்கும் நேதாஜி கிரிக்கெட் அணிக்கும் இடையே நடந்த இந்த மாட்ச் மிக மிகச் சுவை யாகவும் கலகலப்பாகவும் இருந்தது. அதே நேரத் தில் விறுவிறுப்பாகவும் இருந்தது. நீங்கள் அனை



"பத்திடிச்சுடா ஓடுடா ஓடு....!"

— சுதர்ஸன்

வரும் நன்றாக விளையாடினீர்கள். ஆனால் பாரத் அணியைச் சேர்ந்த சிறுவன் கார்த்திக் எல்லோரையும் மிஞ்சும் வகையில் மிக மிகச் சிறப்பாக விளையாடியிருக்கிறான். அவன் எடுத்த விக்கெட்டுகளும், குவித்த ரன்களும் பிரமாதம்! இவன் விளையாட்டினால்தான் பாரத் அணி வெற்றி பெற்றிருக்கிறது. கார்த்திக் இல்லாவிட்டால் பாரத் அணி தோற்றிருக்கும்! எனவே கார்த்திக்கிற்கு எனது வாழ்த்துக்கள்! பாராட்டுதல்கள்! விளையாட்டுப் போட்டிகளுக்காக நான் ஏற்படுத்தியுள்ள அறக்கட்டளையின் பரிசாக ஐந்நூறு ரூபாய்க்கான காசோலையை மிக மிகச் சிறப்பாக விளையாடிய கார்த்திக்கிற்கு அளிக்கின்றேன்! வா! கார்த்திக்.. ஏன் தயங்கறே? நீதானே நல்லா விளையாடியிருக்கே.. இந்தா! (கை தட்டல்) ஏன் பாரத் அணி மட்டும் கை தட்டாம இருக்காங்க! ம்! கைதட்டுங்க! (கைதட்டல்)

ரவி : வா பாபு வீட்டுக்குப் போலாம்! நேரமாச்சு!

பாபு : இரு, இரு..வினோ எல்லாரையும் இருக்கச் சொல்லியிருக்கான். பிரபாகர் சார்கிட்டே ஏதோ பேசணுமாம்!

வினோத் : சார், நீங்க 'பாரத் கிரிக்கெட் கிளப்'பை அவமதிச்சுட்டீங்க!

பிரபாகர் : அவமதிச்சுட்டேனா? எப்படிப்பா!

வினோத் : நாங்க எல்லாரும் சேர்ந்ததுதானே இந்தக் குழு! எல்லாரும் சேர்ந்து விளையாடறதுதானே விளையாட்டு! இந்த வெற்றி, குழுவோட வெற்றிதானே? 'டீமு'க்குத்தானே பொதுவா பரிசு தரணும்? எப்படி சார் ஒருத்தனுக்கு மட்டும் கொடுக்கலாம்?

பிரபாகர் : கரெக்ட்! அப்பஎன்னா உங்க 'டீம்'லே ஒருத்தருக்கு கிடைக்கிற வெற்றியோ, தோல்வியோ எல்லாருக்கும் சொந்தம்னு நினைக்கறே, அப்படித்தானே?

எல்லோரும் : ஆமாம் சார்!

பிரபாகர் : அப்படிக் கிடைக்கற வெற்றிக்கு வந்து சேரும் பரிசும் உங்க எல்லாருக்கும் கிடைக்கணும்னு சொல்றே! அப்படித்தானே?

எல்லோரும் : ஆமாம் சார்!

பிரபாகர் : அப்பஎன்னா, விளையாடற சமயத்துல எதிர்பாராம ஏதாவது நஷ்டம் வந்தா, அதுக்கும் உங்க 'டீம்'தான் மொத்தமா பொறுப்பேற்கணும் இல்லையா?

வினோத் : ஆமாம் சார்!

பிரபாகர் : ஆனா, அன்னிக்கு கார்த்திக் அடிச்ச 'சிக்ஸர்'லே, பந்து ஜன்னலை உடைச்சப்போ நீங்க எப்படி நடந்துக்கிட்டீங்க? அவன் தவறுக்காக அவன்தான் அபராதப் பணத்தைக் கட்டணும்னு சொல்லிட்டீங்க இல்லே? நீங்க நினைச்சா ஆளுக்கு அஞ்சு ரூபா போட்டு, யாருக்கும் பாரமில்லாம அபராதப் பணத்தைக் கட்டியிருக்கலாம் இல்லே?

வினோத் : சார்! அது வந்து... வந்து...

பிரபாகர் : வினோத்! எந்த ஒரு குழுவும் தங்க குழுவுக்கு வர லாப நஷ்டங்களையும், வெற்றி தோல்விகளையும் சமமா ஏத்துக்கப் பழகிக்கணும்! இப்படி இருக்கறதுதான் நல்ல 'டீம் ஸ்பிரிட்'டுக்கு அடையாளம். குழு ஒற்றுமைக்கு இந்த மனப்பான்மை வேணும்!

வினோத் : சார், நீங்க சொல்ற 'டீம் ஸ்பிரிட்' இப்பத்தான் எங்களுக்குப் புரியறது!

பிரபாகர் : உங்களுக்கு இதைப் புரிய வைக்கத்தான் நானும் இப்படி நியாயத்துக்கு விரோதமா கார்த்திக்குக்கு மட்டும் பரிசு கொடுத்தேன்! ஆனா, கார்த்திக் இந்தப் பரிசை வாங்க ரொம்பவும் தயங்கினான்! கவனிச்சீங்களா?

கார்த்திக் : இது நம்ம கிரிக்கெட் கிளப். இது ஆலமரமா வளர்ந்து பல வெற்றிகளைக் குவிக்கணும். இந்தப் பரிசுப் பணமும் நம்ம பணம்தான். இதை நம்ம 'பாரத் கிரிக்கெட் கிளப்' வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கலாம்!

வினோத் : கார்த்திக்! நம்ம குழுவுக்கு இனிமே நீதான் தலைவனாயிருக்கணும்! – அந்தத் தகுதி உனக்குத்தான் இருக்கு. இது எங்கள் பரிசு!

பங்காருபேட்டை என்று கர்நாடகாவில் ஒரு குக்கிராமம். சிலக்கா என்று ஓர் ஏழைச் சிறுமி. அப்பாவுக்கு விவசாயம். தினமும் கஞ்சி கிடைக்கும் என்ற நிச்சயம் இல்லை. சிலக்காவுக்கு பிறவியிலேயே கால் ஊனம். ஆனால் அதற்காக அவள் சளைக்கவில்லை. விந்தி விந்தி நகர்ந்தே கிராமம் முழுக்கப் போவாள். பாத்திரம் தேய்த்துத் துணி துவைப்பது, வயல் காட்டில் வேலை பார்க்கும் பெற்றோருக்கு கஞ்சி கொண்டு போவது எல்லாமே அவள் பொறுப்புத்தான். தனக்குக் கால் ஊனம், தன்னால் மற்றவர்களைப் போல் நடக்க முடியாது என்பதற்காக அவள் எந்தச் சலுகையையும் எதிர்பார்க்கவில்லை. இன்னும்

சிலக்காவின் ஜெலக்தேர்!

அவள் பாடுவதையும் கதை கூறுவதையும் நான் முழுக்கக் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

அந்தக் குக்கிராமத்தின் எல்லையில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் இருந்தது. கிராமத்துப் பிள்ளைகள் எல்லோரும் அதில்தான் படித்து வந்தார்கள். சிலக்காவும், விந்தி விந்தி நடந்து வந்து அந்தப் பள்ளியில் படித்தாள். ஆர்வமும், திறமையும் இருந்ததால் மற்ற வசதியான குடும்பத்துக் குழந்தைகளைவிட சிலக்கா நன்கு படித்தாள். முதல் மாணவியாக விளங்கினாள். படிப்பில் மட்டுமல்ல, வீட்டு வேலைகளையும் கூட சிலக்கா, மற்றவர் வியக்கும்படி எல்லாம் செய்வாள். சமைப்பது, கேட்டால் மற்றவர்களைவிட அதிக ஈடுபாட்டுடன் பண்ணினாள்.

அந்தக் கிராமத்தில் உள்ள திண்ணைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரைதான் இருந்தது. அதற்கு மேல் படிக்க வேண்டுமானால், ஐந்து கிலோ மீட்டர் தொலைவு சென்று பெரிய பள்ளியில் படிக்க வேண்டும்.

சிலக்காவுக்குப் பெரிய பள்ளியில் படிக்க வேண்டும் என்று அடக்க முடியாத ஆசை. தொலைவைக் கண்டு அவள் கலங்கவில்லை. விந்தி விந்தியே போக அவள் முடிவு செய்தாள்.

பெரிய பள்ளியில் சிலக்காவை எல்லோரும் அவளுடைய ஊனத்தைக் காட்டி கேலி செய்தனர். மனதில்

வேதனையாக இருந்தாலும், அவள் அதையெல்லாம் சிரித்தபடி தாங்கிக் கொண்டாள். எப்படியாவது மேல் படிப்புப் படித்து ஒரு பட்டதாரியாகிவிட வேண்டும் என்பதுதான் சிலக்காவின் இலட்சியமாக இருந்தது. மழை, பனி, வெயில் பாராமல் தினமும் பத்து கிலோ மீட்டர் தொலைவை அவள் விந்தி விந்தி ஊர்ந்தே கடந்து வந்து கல்வி பயின்றாள். முதலாண்டுத் தேர்வு முடிந்தது. ஆறாம் வகுப்பில் அவளே முதல் மாணவியாக வந்துள்ளது தெரிய வந்தது. கிண்டலும் கேலியும் செய்தவர்கள் வாயடைத்து மரியாதை காட்டினர். அவளுக்கு எந்த விதத்திலாவது உதவத் துடித்தனர்.

சிலக்காவைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அதைப் படித்த தலைவர் ஒருவர், கைகளால் பெடல் பண்ணக்கூடிய மூன்று சக்கர சைக்கிள் ஒன்றை அவளுக்கு வழங்க உத்தரவு பிறப்பித்தார். மாவட்ட ஆட்சித் தலைவரான கலெக்டர் அந்த சைக்கிளை வழங்க முன் வந்தார்.

சைக்கிளை வழங்க உத்தரவு பிறப்பித்த தலைவரே வெகு விரைவில் கர்நாடகாவுக்கு வருகைதர இருந்ததால், அவர் வரும்போது அவர் கையாலேயே சைக்கிளைப் பெற்றுக் கொள்ள விரும்புவதாக சிலக்கா கூறிவிட்டாள். செய்தி தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது.


தலைவர் பெங்களூருக்கு வந்தார். அவர் கலந்து கொள்ள இருந்த விழா நடக்க இருந்த நகருக்கு, சிலக்காவின் பள்ளி இருந்த ஊரின் வழியாகத்தான்; குறிப்பாகப் பள்ளிக்கு அருகில் இருந்த நெடுஞ்சாலை வழியாகத்தான் அவர் காரில் போயாக வேண்டும்.

தலைவரின் கார் பள்ளிக்கு அருகே வந்து நின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவரை அழைத்து வந்து, பள்ளியின் தலைமை ஆசிரியரையும், நிர்வாகிகளையும் அறிமுகம் செய்து வைத்தார். பின்னாலேயே தரையில் சிலக்கா! யாரும் அவளை அறிமுகப்படுத்து முன்பே, தலைவர்




குனிந்து சிலக்காவைக் கைகளால் அள்ளி எடுத்தார்.

"உன்னைப் போலவே நம் இந்தியாவில் உள்ள கிராமத்துக் குழந்தைகள் எல்லாம், கல்வி கற்க ஆர்வம் காட்டினால் வெகு விரைவில் நம்நாடு முன்னேறி விடும்" என்று அன்பு பொங்கக் கூறியவர் மூன்று சக்கர சைக்கிளில் சிலக்காவை அமர்த்தினார். ஆட்டோகிராப் நோட்டில் கையெழுத்திட்டுக் கொடுத்தார். ஒதுங்கி நின்ற சிலக்காவின் பள்ளி நண்பர்களையெல்லாம் அழைத்தார். கைகுலுக்கினார். அவர்கள் அளித்த சாக்லேட்டை அன்புடன் வாங்கிச் சாப்பிட்டார்.



"ரோடு காண்ட்ராக்டர் மகன் ரோடு ரோலர் சைஸ் பட்டாசு கேட்டானாம்....!"



பனை ஓலையைக் கொண்டு தானே பின்னிய சிறிய அழகிய தேரைத் தனது அன்பளிப்பாக சிலக்கா அவருக்கு வழங்கினான். அதை ஆசையுடன் வாங்கிக் கொண்ட தலைவர், பத்திரமாக அதை வைக்கும்படி தன் உதவியாளர்களிடம் கூறினார். கண்ணாடிச் சட்டமிட்ட பெட்டிக்குள், சிலக்கா அளித்த ஓலைத்தேர் பல ஆண்டுகள் வரை தலைவரால் தனது வீட்டின் வரவேற்பறையில் விலைமதிப்பற்ற பல பரிசுப் பொருள்களுக்கிடையே வைக்கப்பட்டிருந்தது- அந்தத் தலைவர்? குழந்தைகளின் மனம் கவர்ந்த நேருமாமாதான்!

பொன்னை விரும்பும் பூமியிலே, ஈஸ்வர் பண்ணை வீட்டை ஏன் பலரும் விரும்புகின்றனர்?



மதுரைக்கு மிக அருகில் சுமார் 5000 ஏக்கரில் ஈஸ்வர் ஓர் எழில் கொஞ்சும் சோலையை உருவாக்கி வருகிறது.

இந்த சோலையில் 10,000 ச.அடி நிலமும், வளம் பெருக்கும் மா, பலா, தேக்கு மற்றும் அதிக லாபம் ஈட்டும் காய்கறிகளும் பழங்களும் பயிரிட்டு, 20 ஆண்டுகளுக்கு பராமரிக்கப்படும்.

ஈஸ்வரின் நிர்வாக திறன், வேளாண் நிபுணர்களின் உதவி, மிக உயரிய வேளாண் தொழில் நுட்பம் ஆகியவை இந்த சோலையை காப்பியங்களில் காணும் உதாரணங்களுக்கு ஈடாக அமைக்கும்.

இங்கே குயில்கள் பாடும், இன்ப இளந்தென்றல் உங்களை காதலோடு அரவணைக்கும், பல பசுமையான மரங்கள் கவிதை பாட வைக்கும், இத்தகைய சோலையில் ஒரு பண்ணை வீடு அமைத்து உங்கள் மகிழ்ச்சியையும், முதலீட்டையும் பெருக்குங்கள்.

ஈஸ்வர்-இன் பொன் விளையும் திட்டங்கள்:

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ.25,000/- அல்லது ரூ.250/- வீதம் 100 சுலப தவணைகள்	10,000 ச.அடி நிலம்	ரூ.10 லட்சம்
	24 தேக்கு மரங்கள்	ரூ.24 லட்சம்
	2 ஒட்டு மா	ரூ.50,000
	2 வீரிய தென்னை	
	காய்கறி தோட்டம்	ரூ.50,000

20 ஆண்டுகளில் ரூ.35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்

• 10,000 ச.அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது. • அற்புத தொழில் நுட்ப விந்தை. • சிறந்த நீர் வளம், மண் வளம், பயிர் வளம். • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும். • பண்ணை வீடுகளும் கட்டிக்கொள்ளலாம்.

ரூ.100/-வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன.



ESWAR AGRI GROW-TEK LTD

287, West Masi Street, Madurai - 625 001.
Ph: 540843, 540305. Fax: 0452 - 540305. Telex: 0445 - 478 AGRI-IN.

பசுமை வளம் நிறைந்த இந்தியாவை உருவாக்குவோம்.

எங்கள் கம்பெனி (ஈஸ்வர்), சென்னையை சார்ந்த ஈஸ்வரி குருப் ஆப் கம்பெனிகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

FIN-HANS R K SWAMY/BBDO

மானுக்குக் கொம்பு அழகா, ஆபத்தா?

ரேவதி



துணியை அலசிக் கொண்டிருந்த பொன்னம்மா கையை உதறிக் கொண்டு பதறியபடி ஓடி வந்தாள்.

"என்னாச்சு பொன்னம்மா! ஏன் இப்படிப் பதறிக்கிட்டு ஓடிவறே?'' என்று கேட்டான் பாபு. கூடவே கீதா.

''தம்பி, கை மணிக்கட்டுல தேள் கொட்டிடுத்து தம்பி...! அலமாரில மேல்தட்டுல மான்கொம்பு இருக்கு பாரு, அதையும் ஒரு புளியங் கொட்டையையும் சந்தனக் கல்லுல அரைச்சு, விழுதை எடுத்து காப்புப் போட்ட மாதிரிப் பூசினா, விஷம் இறங்கிடும்.''

பாபு ஓடிப்போய் அலமாரியின் மேல் தட்டில் 'ப' வடிவில் இருந்த கருப்பு மரத் துண்டு போன்ற ஒரு பொருளை எடுத்து வந்தான்.

"இதுவா மான்கொம்பு!"

'ஆமாம் தம்பி. சாம்பர் மானின் உடைந்த கொம்புப் பகுதி."

கீதா ஓடிப்போய் சந்தனக் கல்லையும், ஒரு புளியங்கொட்டையையும் எடுத்து வந்தாள். புளியங் கொட்டையை சந்தனக் கல்லில் அரைத்தாள். பிறகு அதே விழுதில் மான் கொம்புத் துண்டை வைத்து அரைத்தாள். நெல்லிக்காய் அளவுக்கு நைசான, பசைமிக்க மெல்லிய விழுது திரண்டது.

இதற்குள் பாபு, விஷம் மேலே ஏறாதபடி, முழங்கைக்குமேல் மெல்லிய கயிற்றால் கட்டுப் போட்டான். கீதா, அரைத்த விழுதை, கடிகாரம் கட்டியதுபோல், தேள் கொட்டிய இடத்தில் பாபு பற்றுப் போட்டான்.



அரை மணி நேரத்தில் விழுது காய்ந்து விட்டது. வலியும் குறைந்து விட்டது!

''அதிசயமா இருக்கே பொன்னம்மா!'' என்று வியந்தனர் பாபுவும் கிதாவும்.

''இதில் என்ன அதிசயம்? மான் கொம்புக்கு விஷக் கடியை இறக்கிவிடும் மருத்துவ குணம் உண்டு. எங்களுக்கெல்லாம் இங்கே இதுதான் கைகண்ட மருந்து'' என்றாள் பொன்னம்மா.

வனத்துறை அதிகாரியாக இருந்த சித்தப்பாவின் வீட்டுக்கு பாபுவும் கிதாவும் விடுமுறைக்கு வந்திருந்தனர். பொன்னம்மா சித்தப்பா வீட்டு வேலைக்காரி.

இரவு சாப்பிடும்போது பாபு, சித்தப்பாவிடம் கேட்டான்.

"சித்தப்பா, மான் கொம்புக்கு மருத்துவ குணம் உண்டா? அரைத்துப் போட்டதும் தேன் விஷத்தை இறக்கிவிட்டதே!''

கிதா, பிற்பகலில் நடந்ததை விளக்கிக் கூறினாள்.

"மான் கொம்பு என்பது, சுண்ணாம்புச் சத்து மிகுந்த கெட்டியான பொருளால் ஆனது. இதை, சந்தனக் கல்லில் தனியாக அரைத்துப் போடுவதில்லை. புளியங் கொட்டையையும் சேர்த்து அரைத்துப் பற்றுப் போடுகிறார்கள். இந்த விழுதுக்கு வஜ்ரம் போல் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும் தன்மை உண்டு. அதிலும் இது உலர உலர, இதுபோடப்பட்டுள்ள இடம். இழுத்துக் கட்டினது போல் ஆகி மரத்துப்போய் விடுகிறது. அதன் காரணமாக வலி தெரியவதில்லை. குறைந்து விட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது. இந்த மாதிரிப் பற்றுப் போடுவதால், தோல் நோய்கள் குணமாகின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது'' என்றார் சித்தப்பா.

"சித்தப்பா, மான்களில், ஆண் பெண் இரண்டுக்கும் கொம்பு உண்டா?''

இல்லை. இந்தப் பகுதியில் அதிகமாக இருப்பவை சாம்பர் மான் என்ற இனம். இதில் ஆணுக்கு மட்டுமே கொம்பு உண்டு. பிறந்த முதல் ஆண்டிலேயே கொம்பு முளைக்க ஆரம்பித்து விடும். இதில் இரத்த ஓட்டமும் இருக்கும். ஒரு குறிப்பிட்ட பருவம் வந்ததும் இதன் அடிப்பாகத்தில் ஒரு வளையம் தோன்றி கொம்பை இறுக்கி, இரத்த ஓட்டத்தை



நிறுத்தி, வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும். இந்தக் காலங்களில் கொம்பைச் சுற்றி ஒரு மெல்லிய; மென்மையான தோல் உரிய ஆரம்பிக்கும். மரங்களில் உரசி உரசி இந்தத் தோலை மான்கள் முழுவதுமாக உரித்துக் கொள்ளும். உரித்த தோலைத் தாங்களே கூடத் தின்றுவிடும்!"

"உண்மையாவா!"

"ஆமாம், இந்தத் தோலை ஆங்கிலத்தில் 'வெல்வெட்' என்பார்கள். இதில் சுண்ணாம்புச் சத்து மிகுந்திருக்கும். எலும்பு, கொம்புகள் வளர்ச்சிக்கு சுண்ணாம்புச் சத்து ஏராளமாகத் தேவைப்படுவதால், மான்கள் இதையே கூடத் தின்பதுண்டு."

"மான் கொம்பு எத்தனை நீளம் வளரும் சித்தப்பா?"

"இருபது செ.மீ. நீளம் கூட வளர்ந்திருந்ததாகக் குறிப்பு இருக்கு. சராசரி 15செ.மீ. நீளம் வளரும். ஒவ்வொரு ஆண்டும் இதன் வளர்ச்சியின் அளவு மாறுபடும்."

"அப்படின்னா?"


"சாம்பர் மான், வெல்வெட்டை நீக்கிய கொம்பை ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் நீக்கி விடும். மறுபடி புது கொம்பு வளர ஆரம்பிக்கும்! புள்ளி மானுக்குத் கொம்பு கிடையாது. சாம்பர் மானுக்கு கிளைகளுடன் கூடிய அழகான கொம்பு உண்டு.

"இத்தனை பெரிய கொம்புகளை வைத்துக் கொண்டு மான் திண்டாடாதா சித்தப்பா? சாம்பர் மான் பகைவரிடமிருந்து தப்பி ஓடக் கூடிய அளவுக்கு வேகம் உடையதா?"

"இல்லை. புள்ளிமானைப் போல் அத்தனை வேகமாக இதனால் ஓட முடியாது. ஆனால் பகைவர்களை பயப்படுத்தி விரட்டி அடிக்க கொம்புகளைப் பயன்படுத்தும். புலி சிங்கங்களைக் கூட இவை தங்கள் கொம்புகளால் தூக்கி எறிந்து விடக்கூடும். இல்லை, குத்தி காயத்தை உண்டாக்கி விடும். ஆனால், மாமிச உண்ணியாகிய புலி சிங்கங்களுக்குத் தான் இறுதி வெற்றி. இதனால் தான், சாம்பர் மான்களை புலி சிங்கங்கள் பின்னால் இருந்து தாக்கும்."

"அப்படியானால், புலி சிங்கங்களின் வீரம், சாம்பர் மான்களிடம் அத்தனை எளிதாகப் பலிக்காதுன்னு சொல்லுங்கள்?'

"இயற்கை எல்லா விலங்குகளுக்கும் பாதுகாப்பையும் பலத்தையும் அளிக்கத் தவறவில்லை. சாம்பர் மான்களின் கண்களுக்குக் கீழேயும், பின்னங்கால்களுக்



கீழேயும் நாற்றச் சுரப்பிகள் உள்ளன. மான் நடந்து செல்கையில் இவை சுரந்து, ஒரு தனி வாடையை விட்டுச் செல்கின்றன. குடும்பம் நடத்தவரும் பெண் மான்கள் இதைக் கண்டு கொண்டு பின் தொடரும். ஆனால் இதையே பிடித்துக் கொண்டு பகை விலங்குகளும்கூடப் பின் தொடர்ந்து வந்து தாக்கும்!"

கூடத்தில் மாட்டியிருந்த கொம்புகளுடன் கூடிய சாம்பர் மானின் ஓவியத்தைக் காட்டிப் பேசினார் சித்தப்பா.

"சித்தப்பா, இந்த அழகான முகத்துக்கு கிளைகளுடன் கூடிய இந்தக் கொம்புகள் எத்தனை கம்பீரத்தைத் தருகின்றன!" என்று வியந்தான் பாபு.

"சித்தப்பா. சாம்பர் மானுக்கு இந்த அழகான பரந்த கொம்புகள் அழகைக் தருகிறதா இல்லை ஆபத்தைத் தருகிறதா? என்று கேட்டாள் கீதா.

சித்தப்பா பதில் கூறுவதற்குள், அவருடைய அலுவலகப் பணியாள் வந்து தெலுங்கில் ஏதோ கூறினான்.

"மானுக்குக் கொம்பு அழகா ஆபத்தான்னு கேட்டே இல்லே? நேரிலயே பார்த்துத் தெரிஞ்சுக்கலாம் வா" என்றார் சித்தப்பா.

நதிக்கரை ஓரமாக இருந்த உயரமான மரத்தின் மேல் இருந்து பார்த்தபோது, எதிர்க்கரையில் அந்த அதிசயமான காட்சி தெரிந்தது.

புல்வெளியில் இரண்டு ஆண் சாம்பர் மான்கள் கொம்புகளைப் பிணைத்தபடி முட்டி மோதிய நிலையில் நின்றிருந்தன. கொம்புகள் நன்கு சிக்கி, அவிழ முடியாதபடி பின்னிச் சிக்கியிருந்தன. அருகே ஒரு பெண்மான்.

"அந்தப் பெண் மானுக்காக இந்த இரண்டு ஆண்மான்களும் கொம்புகளால் தாக்கி சண்டை போட்டிருக்கின்றன. இம்மாதிரி சண்டை நடக்கும்போது, ஏதாவது ஒன்று காயம்பட்டுத் தோற்று ஓடி விடும். அதிசயமாக சில சமயங்களில் தாக்குதலின்போது கொம்புகள் பிரிக்க முடியாமல் சிக்கி நின்று விடும். இப்படியே நாள் கணக்கில் கூட இவை நின்று கொண்டு இருக்கும். நரி, சிறுத்தை, காட்டுப்பன்றி, கரடி போன்றவைகளுக்கு விருந்தாகி விடுவதும்கூட நடப்பதுதான்!" என்று விளக்கினார் சித்தப்பா.

"இவை எத்தனை நேரமாக இப்படி சிக்கி நிற்கின்றன சித்தப்பா?"

"காலையில் இருந்து!"

"இவைகளை என்ன பண்ணப் போறீங்க சித்தப்பா? இப்படியேவா பகை விலங்குகளுக்கு இரையாகும்படி விட்டு விடப் போறீங்க?"

"அது முடியாதம்மா."


"அப்போ என்ன பண்ணப் போறீங்க?"

"டமால்!" என்று ஆட்டம்பாம் வெடித்தது போன்ற மிகப் பெரிய சத்தம் கேட்டது. பாபுவும் கீதாவும்கூட ஒரு வினாடி அதிர்ந்து போனார்கள். சித்தப்பா மட்டும் அதிரவில்லை!

முர்க்கத்தனமாகக் கொம்புகளைச் சிக்கவைத்து நின்றிருந்த இரண்டு மான்களும் வெடிச் சத்தம் கேட்டு, அதிர்ச்சியில் துள்ளிக் குதித்தன. அப்படிக் குதித்தபோது விலக முடியாதபடி சிக்கியிருந்த கொம்புகள் விலகிக் கொள்ள, மான்கள் எல்லாம் காட்டுக்குள் ஓடி விட்டன!

அறிவியல் உண்மைகள்

- கடம்பமான், கடமை மான், சாம்பர்மான் எல்லாம் ஒன்றுதான். அறிவியல் பெயரில் செர்வஸ்யுனி கோலர் (CERVUS UNICOLOR) ஆர்ஷியோ டேக்டைலா (ARTIO DACTYLA) செர்விடே (CERVIDAE)
- இந்திய மான்களில் மிகப் பெரியது சாம்பர் மான். நன்கு நீந்தும்.
- ஆண்மானுக்குக் கிளைகளுடன் கூடிய கொம்பு உண்டு. இது வளர்ந்து, தோலுரிந்து (வெல்வெட்) விழுந்து விடும்.
- கொம்புக்கு என்று தனியாக மருத்துவ குணம் கிடையாது. பகை மிருகங்கள் தாக்குவதைக் கொம்புகளால் தடுத்து தாமதப் படுத்தும். காயப்படுத்தி விரட்ட முயலும்.
- கண்களுக்குக் கீழேயும், பின்னங்காலுக்குக் கீழேயும் நாற்றச் சுரப்பிகள் உண்டு.
- பெண் மானுக்காக ஆண்மான்கள் சண்டையிட்டுத் தாக்கிக் கொள்ளும். தாக்குதல் பயங்கரமாக இருக்கும். கொம்புகள் சிக்கிக் கொள்ள, பகை விலங்குகளுக்கு இரையாகும்.



மன்னன் விடுவானா?

அரசன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் மோசமானவன், கொடுமைக்காரன்.

அந்த அரசன் மக்களை மிகவும் துன்புறுத்தினான். குறிப்பாகத் தனது அரண்மனை ஆட்களை ஏவி விட்டுக் கிராமங்களில் இருந்த ஆரோக்கியமான ஆடு மாடு போன்ற கால்நடைகளைத் தூக்கிச் சென்று விடுவான். அவற்றுக்கு விலை ஏதும் தர மாட்டான்.

''மக்களின் உடைமைகளை இப்படியெல்லாம் கவர்தல் தவறு; அது பெரிய கொடுமை. எனவே, இந்தப் பழக்கத்தை நிறுத்திவிடுங்கள்...'' என்று அமைச்சர் பெருமக்கள் பல தடவை நயமாகவும் கடுமையாகவும் அரசனிடம் எடுத்துக் கூறி விட்டனர்.

ஆனால், அரசன் கேட்பதாக இல்லை. தொடர்ந்து அச்செயல்களில் ஈடுபட்டு வந்தான். மக்களுக்கு அரசனை எவ்விதம் திருத்துவது என்று புரியவில்லை.

ஒரு சமயம் அந்த அரசன் மாறுவேடத்தில் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். மான்களைத் துரத்திக் கொண்டே, வெகு தூரம் காட்டுக்குள் போய் விட்டான். அதன் பிறகுதான், தான் தனிமைப்பட்டு விட்டது, அவ்வரசனுக்குப் புரிந்தது. திரும்பி வர வழி தெரியவில்லை. வழியைத் தேடி இங்குமங்கும் அலைந்தான். எந்தப் பயனும் இல்லை.

கடைசியில், இருட்டிய பிறகு களைத்துப் போய், பசியுடன் ஒரு சிறிய கிராமத்துக்கு வந்தான்.

அந்தக் கிராமத்தில் ஒரு முதியவர் இருந்தார். அவர் பெயர் மதிவாணன். அவருக்கு, லேசான வெளிச்சத்தில், வழிதவறி வந்த அந்த மன்னரை அடையாளம் தெரிந்து விட்டது. ஆனால், அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

ஒன்றும் தெரியாதவர் போல், அரசனை உற்றுப் பார்த்து, ''யார் நீங்கள்? காட்டில் வழி தெரியாமல் இந்தக் கிராமத்தில் வந்து மாட்டிக் கொண்டு விட்டீரா? சரி... போகட்டும்... இந்த இருட்டில் வேறு எங்கே உங்களால் போக முடியும்? என்னுடன் வாருங்கள்'' என்று அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

''இப்படித் திண்ணையில் உட்காருங்கள். ஒரே ஒரு நிமிடம்... கொல்லைப்புறம் போய் விட்டு வந்து விடுகிறேன்...'' என்றவாறு வீட்டுக்குள்ளே போனார்.

கொல்லைப்புறம் போன மதிவாணன்,

ஜெயராம்ஜி

அங்கு கொட்டிலில் கட்டிக் கிடந்த தன் வீட்டுக் கழுதையின் அருகில் போய் நின்றார். ஒரு பெரிய தடிக் கம்பை எடுத்துக் கொண்டார். அதைக் கொண்டு தன் கழுதையை ஓங்கி ஓங்கி அடிக்கலானார். வலி பொறுக்க முடியாமல் கழுதை உயிரே போய் விட்டது போல் அலறியது.

வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த மன்னர் கொல்லைப் புறத்திலிருந்து வரும் கழுதையின் அலறல் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டார். கூடவே, யாரோ அதை ஓங்கி ஓங்கி அடிக்கும் 'மடேர்... மடேர்' சத்தமும் கேட்டது.

மன்னர் எழுந்து கொல்லைப்புறம் போனார். அங்கு, மதிவாணன் கழுதையைச் சிறிதும் ஈவு இரக்கம் இன்றி அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், அவர் மனம் மிகவும் வேதனைப் பட்டது. எப்படியாவது அடிவாங்கும் கழுதையை, மதிவாணனிட மிருந்து காப்பாற்றிவிட அவர் மனம் துடித்தார்.

உடனே மன்னர் ஓடிப் போய் மதிவாணனின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சொன்னார்:

“என்ன காரியம் செய்கிறீர்கள்? கடவுள் உங்களுக்கு உடலில் பலத்தைக் கொடுத்திருப்பது, பாவம், இந்த மாதிரி வாயில்லாத உயிர்களைப் போட்டு இப்படிக் காட்டுத்தனமாக அடிப்பதற்காகவா? ஏன் இதை அடித்துக் கொல்கிறீர்கள்...” என்று கேட்டான் மன்னன்.

உடனே மதிவாணன், ''ஐயா, நீங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? இந்த நாட்டில் நடக்கும் அக்கிரமம், அராஜகம் பற்றியெல்லாம் உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது....'' என்றார் நிதானமாக.

அரசன் அதைக் கேட்டுத் திடுக்கிட்டான். 'அக்கிரமமா, அராஜகமா...? நம் நாட்டிலா.' எதைக் குறிப்பிடுகிறார் இவர்....?' என்று அவன் தவித்தான்.'' ''எதைக் குறிப்பிடுகிறீர்கள் பெரியவரே?” என்று கேட்டான் மன்னன் புரியாமல்.

''அதை என் வாயால் வேறு சொல்ல வேண்டுமா?” என்று அலுத்துக் கொண்ட மதிவாணன், ''இருந்தாலும் சொல்கிறேன். இந்த நாட்டு மன்னன் ஒரு மோசக்காரன்... மக்களைக் கொள்ளையடிப்பவன்...'' என்றார்.

அதைக் கேட்டதும் மன்னனுக்குச் 'சுருக்' என்று இருந்தது. மோசக்காரனா...? எப்படி?” என்றார் சற்றுப் பதற்றத்துடன்.

''நல்ல ஆரோக்கியமான ஆடு, மாடு போன்ற கால்நடைகளைக் கண்டால் விட்டு வைக்க மாட்டான். தன் ஆட்களை அனுப்பி, எந்த விலையும் ஈடாகத் தராமல் தனது அரண்மனைக்கு அவற்றைப் பிடித்து இழுத்துச் சென்று விடுவான். விலை தராமல் இப்படிக் கால்நடைகளைக் கவர்தல் மோசடி அல்லவா? இது அக்கிரமம் அல்லவா? மன்னன் என்ற மமதையில் செய்யும் அராஜகம் அல்லவா....?” என்று உரக்கக் கூச்சலிட்டார் மதிவாணன்.

மன்னன், தான் செய்வது தவறு என்



பதைப் புரிந்து கொண்டு விட்டான். ஆனால், ஒரு விஷயம் மன்னனுக்குப் புரிய வில்லை. அதைக் கேட்டு விட்டான். "சரி... உங்கள் மன்னர் கால்நடைகளைக் கவர் வதற்கும் நீங்கள் இப்படி இந்தக் கழுதை யைப் போட்டு அடிப்பதற்கும் என்ன சம் பந்தம்...?" என்றார் அவர்.

அதற்கு மதிவாணன், "இந்தப் பாழும் கழுதை கொழு மொழுவென்று நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து தொலைக் கிறதே....! படுபாவி மன்னன் பார்த்தால் இதை விடுவானா? இதன் காலை ஒடித்து விட்டால், தொலைகிறது நொண்டிக் கழுதை என்று விட்டுவிடுவான் இல்லையா? ஆகவேதான் இதை அடித்து நொறுக்கி இதன் காலை ஒடிக்கிறேன்...." என்றார்.

அதைக் கேட்டு மன்னன் தான் இது வரை செய்து வருவது மகா கொடுமையான செயல்; அக்கிரமம் என்பதை உணர்ந்து கொண்டான். இருந்தாலும் கேட்டான், "அது சரி, பெரியவரே... இக்கழுதை நொண்டியாக விட்டால், அந்த நொண்டிக் கழுதையால் உங்களுக்கு என்ன பிரயோசனம்?"

அதற்கு மதிவாணன், "நொண்டியோ முடமோ, நம் கழுதை நம் வீட்டிலேயே இருக்கிறது என்ற மனத்திருப்தியாவது நம் மிடம் இருக்குமே? இதை அரசன் அப கரித்துச் சென்று விட்டால், 'ஐயோ, நம் கழுதை போய்விட்டதே' என்று காலம் முழுதும் நாம் வருத்தப்பட்டுக் கொண்டே அல்லவா இருக்க வேண்டும்....?" என்றார்.

மன்னனின் மனம் இப்போது முழுத் தெளிவு பெற்று விட்டது. அவன் மனம் மாறி விட்டதால், அவன் உறுதியுடன் சொன் னான். "வீணில் கழுதையைப் போட்டு அடித்து அதன் காலை ஒடிக்காதீர்கள்... இனி உங்கள் மன்னன் கால்நடைகளைக் கவர்ந்து செல்ல மாட்டான்" என்றான்.

உடனே மதிவாணன், "இந்த உறுதியை வழிப்போக்கனாகிய நீங்கள் சொல்லி என்ன பயன்? எங்கள் மன்னன் அல்லவா சொல்ல வேண்டும்?" என்றார்.



"நான்தானே அந்த மன்னன்..." என்று மன்னன் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். வேட்டையாட வந்தது முதல் நடந்தது அனைத்தையும் எடுத்துக் கூறி னான்.

மதிவாணனும், "இருட்டாக இருந்தாலும், உற்றுப் பார்த் ததுமே நீங்கள்தான் மன்னர் என்பதை நான் புரிந்து கொண்டு விட்டேன். தங்களது அநியாயச் செயலைச் சுட்டிக் காட்டி உங்களைத் திருத்து வதற்காகத்தான் புரிந்து கொள்ளாதவன் போல் நான் நடித்தேன்... என்னை மன் னித்து விடுங்கள்..." என்று வேண்டினார்.

மறு நாள், அரண்மனை திரும்பியதும், அரசன் தான் கவர்ந்து சென்றிருந்த அத் தனை கால்நடைகளையும் விடு வித்து, உரியவர்களிடமே ஒப்படைத்து விட்டான்.

மன்னனைத் திருத்திய மதி வாணனை அந்நாட்டு மக்கள் அனைவரும் போற்றிப் புகழ்ந் தனர்.

போதும் பொறுப்பு!


மாலதியும் சுகுமாரனும் சாப்பாட்டு மேசையில் அமர்ந்தனர்.

"சுகுமாரா... அப்பாவையும் சாப்பிடக் கூப்பிடு!" என்றாள் சமையல் அறையில் இருந்த அம்மா. வாசல் அறையில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த அப்பாவைக் கூப்பிட்டு வந்தான் சுகுமாரன்.

"மாலா, உப்பையும் தயிரையும் எடுத்து வை," - அம்மா சொன்னதும், விருப்பமில்லாமல் முணுமுணுத்தவாறே உப்பை எடுத்து வந்தாள் மாலா.

"சுகுமாரா... பிரிஜ்ஜிலிருந்து தண்ணி எடுத்து வை!" - அம்மாதான் கூறினாள். சுகுமாரனுக்கு ஒரே கோபம். "இந்த அம்மா, தான்ஒருவேலை பண்ணி முடிக்கறதுக்குள்ள எல்லோரையும் ஏவு ஏவுன்னு ஏவுவாங்க. தானா ஒரு வேலையை பொறுப்போடு முழுக்க செய்யத் தெரியாது!" - சுகுமாரன் முணுமுணுத்தபடி தண்ணீர் ஜக்கைக் கொண்டு வந்து வைத்தான்.

"நல்லா சொன்னே. சும்மா ஏதாவது



வேலை சொல்லிக்கிட்டே இருப்பாங்க இந்த அம்மா..." - மாலா வெறுப்புடன் சொன்னதைக் கேட்டவாறே சாப்பாட்டு மேஜையில் வந்தமர்ந்தார் அப்பா. அவர் பதில் ஏதும் கூறவில்லை.

மூவரும் உட்கார்ந்து கொள்ள அம்மா பரிமாற ஆரம்பித்தாள்.

"ஊறுகாய் எங்கே?"

அம்மா கேட்டதும் மாலதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"நீங்க ஒரு வேலையைச் செய்யறதுக்குள்ள எங்களுக்கு ஆயிரம் வேலைக்கு ஏவறீங்களே?" என்று படபடத்தாள்.

"அப்படிச் சொல்லக்கூடாது மாலதி. ஒருத்தர் ஒரு வேலையைச் செய்யும் போது இரண்டு பேர் உதவினால் சுலபமாக இருக்கும்" என்றார் அப்பா.

"இதுக்கு நாங்களே திட்டம் போட்டு மத்தவங்களை ஏவாம எல்லாம் செஞ்சுக்குவோம்!" என்று முனகினாள் மாலதி.

"ஒரு வேலையைச் செய்யப் பொறுப்பு எடுத்துக்கும் போதுதான் அதில் உள்ள கஷ்ட நஷ்டங்கள் தெரியும்..." என்றாள் அம்மா.

"நான் அரைப் பையன் இல்லை. பத்தாவது படிக்கிறேன். பொறுப்பா,

ஜமதக்னி

திட்டமிட்டு, மற்றவங்களை ஏவாம எல்லா வேலையையும் ஒண்டியாவே கச்சிதமா செய்வேன். எனக்கும் பொறுப்புத் தெரியும்" என்றாள் மாலதி.

"சரி, மாலதி. ஒரு போட்டி வைச்சுப்போம்! அடுத்த வாரம் மாமா பெண் கல்யாணத்திற்கு மதுரை போறோமில்ல, அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நீயும், தம்பியும்



செய்யுங்க. அம்மாவும் நானும் உதவி செய்யறோம்" என்றார் அப்பா. எல்லோரும் சம்மதித்தனர்.

மாலதியும், சுகுமாரனும் உற்சாகத்துடன் ஏற்பாடுகளைக் கவனித்தனர். "இதப் பாரு மாலதி... போட்டின்னா போட்டிதான். இவ்வளவு நாள் நீங்க ரெண்டு பேரும் எப்படி இருந்திங்க? சொன்ன வேலையை மட்டும் செஞ்சிட்டு நீங்க இருந்த மாதிரித்தான் நானும் அம்மாவும் இருப்போம். ஆனா, உங்களை மாதிரி முணுமுணுக்க மாட்டோம். ஏதாவது மறந்தால் நீங்கள்தான் பொறுப்பு!" - கண்டிப்பாகச் சொல்லி விட்டார் அப்பா.

பெட்டி படுக்கைகளை மாலதியும் சுகுமாரனும் கட்டினார்கள். அம்மா, பலகாரங்கள் செய்து தந்தாள். காலை வண்டி. அப்பா ஆட்டோவை அழைத்து வந்தார். அம்மாவும் மாலதியும் ஏறி உட்கார்ந்தனர்.

"அச்சச்சோ... காஸ் மூடியிருக்கா தெரியலையே!" என்றான் சுகுமாரன் பதறி. மாலதி பதட்டத்துடன் இறங்கி பூட்டிய கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். உண்மைதான்! சரியாக மூடவில்லை. அவள் திரும்பி வந்ததும் ஆட்டோ கிளம்பியது.

"டிக்கெட் இருக்கில்ல"? - சுகுமார் கேட்டான்.



"இதுக்கு 'ஹைட்ரஜன் பலூன்'-னு பேருடா... நூலை விட்டுட்டா மேலே போயிடும்."
"நிஜமாவா சொல்றே? விட்டுக் காட்டு, பார்க்கலாம்!"

- சீர்காழி வி.ரேவதி

"இருக்கு. ஆனால்..."- திக்கினாள் மாலதி.

"என்னடி?"- அம்மா பதறினாள்.

"ஏதோ ஒரு பையில் வைச்சேன்" - அதுவரை நிச்சயம். ஆனா, எதுலேன்னு நினைப்பு வரலை! - முனகினாள் மாலதி,.

ஒருவழியாக ஸ்டேஷன் வருவதற்குள் எல்லாவற்றையும் திறந்து, கலைத்து, கண்டுபிடித்து, மறுபடியும் அடுக்கி... போதும் போதும் என்றாகி விட்டது.

நான்கு பேரும் வண்டியில் ஏறினர். ரயில் புறப்பட்டது. நேரம் சென்றது. "சாப்பிடலாமே?" என்றார் அப்பா. கொண்டு வந்த டிபன் காரியரை எடுத்தாள் மாலதி. பக்குவமாய் அம்மா செய்த இட்டிலி...

"சரி, இலையோ, தட்டோ கொடு" அப்பா சொன்னதும், மாலதியும், சுகுமாரனும் முழித்தனர்.

"என்ன, தட்டு இலை கொண்டு வரலையா...? சரி மூடியை வைச்சு இதிலேயே சமாளிக்கலாம்" என்றாள் அம்மா.

ஒருவழியாக மதுரை ஸ்டேஷன் வந்தது. "கல்யாணப் பத்திரிகையைக் கொண்டு வந்தியா?" - அப்பா கேட்டதும் சுகுமாரனும், மாலதியும் விழித்தனர்.

"சரி... சரி... எனக்கு விலாசம் தெரியும்! தெரியலைன்னா என்ன ஆயிருக்கும்?" என்றார் அப்பா.

"அப்பா... அம்மா... போதும் இந்தப் போட்டி! நாங்க எங்க தோல்வியை ஒத்துக்கறோம். இனிமேல் பொறுப்பு உங்களது. நீங்கள் ஆயிரம் வேலை சொன்னாலும் நாங்க முணுமுணுக்க மாட்டோம்!" என்றனர் மாலாவும், சுகுமாரும்.

"நான் காலை நேர பரபரப்பில் ஏதாவது உதவிக்குக் கூப்பிட்டா?" என்று நிறுத்தினாள் அம்மா. "நிச்சயம் முணுமுணுக்காமல் உதவி செய்வோம்" என்றனர் இருவரும்.



தோள் பட்டைகளில் மாட்டியிருந்த புத்தகப்பை கருநீல வண்ணத்தில் குயிலனின் முதுகில் தொங்கிக் கொண்டிருந்தது. மணி நாலரை ஐந்து இருக்கும். என்றாலும் 'சுள்' ளென்று வெயில் அடித்துக் கொண்டிருந்தது.

உள்ளே பனியன் இல்லாததால், வியர்வையால் தெப்பமாக நனைந்திருந்த சட்டை அவன் உடம்போடு ஒட்டிக் கொண்டிருந்தது. மிகவும் சோர்ந்து போனவனைப் போல மெதுவாக நடந்து கொண்டிருந்தான்.

அவன் பக்கமாக ஒரு சைக்கிள் வரும் சப்தம் கேட்டது. மணி அடிக்காமல் வரவே, அவன் திடுக்கிட்டுப் போனான்.

சைக்கிளின் மேலிருந்தவன் குயிலனைப் பார்த்துச் சிரித்தான். குயிலனால் பதிலுக்குச் சிரிக்க முடியவில்லை. அவன் யாரென்றே அவனுக்குத் தெரியாதே! அவன் ஏன் சிரித்தான் என்பதும் புரியவில்லையே!

அவனை ஏதும் கேட்கவும் தோன்றவில்லை குயிலனுக்கு. பேசாமல் தன் வழியே பார்த்து நடந்து கொண்டிருந்தான். அப்போதும் சைக்கிள்காரன் அவன் பக்கமாகவே மெதுவாக ஒட்டிக் கொண்டு வந்தான்.

நடந்து கொண்டே தலையை இலேசாக நிமிர்த்தி அவனைப் பார்த்தான் குயிலன். அவனுக்குத் தன்னை விட ஐந்து ஆறு வயது கூட இருக்கலாம். ஆனால் அவன் படிக்கிற பையனாகத் தெரியவில்லையே! மேல் சட்டை கிழியவில்லையென்றாலும், கையில் தையல் பிரிந்து போய் உடம்பு தெரிந்தது. அரைக்கால் சட்டை கந்தலாக இல்லை... ஆனால் ஒரே அழுக்காக இருந்தது. தலைக்கு எண்ணெய் தடவி, ஒழுங்காகச் சீவியிருப்பதாகவும் தெரியவில்லை. குளித்திருப்பானோ, மாட்டானோ! ஏதோ ஒரு மாதிரி வாடை! ஏன் இவன் தன் கூடவே வருகிறான்?

குயிலனுக்குப் பயமாக இருந்தது. தன்னை அறியாமலே சற்று வேகமாக நடக்க ஆரம்பித்தான். அதைத் தெரிந்து கொண்டுதானோ என்னவோ, சைக்கிள்காரன் அவனைப் பார்த்துச் சற்று உரக்கவே சிரித்தான்.

''யார் நீ? உனக்கு என்ன வேணும்? ஏன் என் கூடவே வர்றே? எதுக்குச் சிரிக்கிறே?'' என்று கேட்க வேண்டும் போலிருந்தது குயிலனுக்கு. பயம் அவன் தொண்டையைப் பிடித்துக் கொண்டிருந்தது.

"படிச்சிட்டுப் போறியா? எத்தனையாவது படிக்கிறே?" சைக்கிள் பையன் கேட்டான்.

"ஏழாவது படிக்கிறேன்''- மெதுவாகச் சொன்னான் குயிலன்.

"எங்கே போகணும்?"

"வீட்டுக்கு!"

பூவை அமுதன்

"அதான் எங்கே?"

"தென்னம்பட்டி. ஏன் கேட்கிறே?"

''பின்னாலே ஏறிக்கோ. நான் தென்னம்பட்டியைத் தாண்டித்தான் போறேன். ஏரிக்கரைப் பக்கம்தான் என் வீடும்.''

"வேண்டாம். நான் நடந்தே போயிடுவேன். பத்து நிமிஷத்திலே போயிடுவேன்."

"ஏறிக்கோ. நான் அஞ்சே நிமிஷத்திலே கொண்டு போய் விடறேன்."

"நான் தினமும் நடக்கணும். பழகிக்கணும். இன்னைக்கு சைக்கிள்ளே வந்தால், நாளைக்கும் யாராவது வருவாங்களான்னு பார்க்கத் தோணும். வேண்டாம்... நீ போ!"

"நாளை கதை நாளைக்கு. அப்படி ஏன் நினைக்கிறே?" என்று சிரித்தான் அவன்.

"உனக்கு ஏன் சிரமம்?"

"இது என்ன சிரமம்? டபுள்ஸ் என்ன? ட்ரிபுள்ஸ் கூட மிதிப்பேன்!" என்றான் அவன் பெருமையாக.

குயிலன் அவனை ஆச்சரியமாகப் பார்த்து, "நீ படிச்சிருக்கியா?" என்று எப்படியோ கேட்டு விட்டான்.

''படிச்ச மாதிரி தோணலே இல்லே...! அஞ்சாவது வரைக்கும் படிச்சேனே... அதுக்கு மேலே படிக்க முடியலே... உன் பேரு என்ன?"

"குயிலன்."

''நல்ல பேருதான். ஆனா... சிகப்பாயிருக்கியே? என் பேரு தெரியுமா...? திருப்பூர்குமரன்!" என்று சிரித்தான் அவன்.

"முழுப் பேரே இப்படியா?"

"ஆமாம். நாட்டிலே ஆயிரம் குமரனுங்க இருக்கலாம்... கொடிகாத்த குமரன் இல்லே... நீ படிச்சிருப்பியே... அவர் நினைவா, என் அப்பா எனக்கு வச்ச பேரு'' பெருமையாகச் சொல்லிக் கொண்டான் குமரன்.

"உன் அப்பா என்ன தேசபக்தரா?'' சற்றுத் துணிச்சலாகவே கேட்க முடிந்தது குமரனுக்கு.

''தேசபக்தரோ என்னவோ! காந்தி பக்தராம்! எல்லாரும் அப்படித்தான் பேசிக்கிறாங்க. அவர் உயிரோடு இருந்தால், நானும் உன்னைப் போலப் பள்ளிக்கூடம் போய்க்கிட்டுதான் இருப்பேன். என்னைச் சைக்கிள் கடையிலே வேலை செய்ய விட்டிருக்க மாட்டார்!" என்று சொல்லிக் கொண்டே சைக்கிளை விட்டுக் கீழே இறங்கி நின்றான் குமரன். குயிலனும் தன் நடையை நிறுத்தினான்.

"கொஞ்சம் சைக்கிளைப் பிடி!" என்று கேட்டுக் கொண்ட குமரன், மெல்லக் கீழே இறங்கினான்.

குனிந்து பின் சக்கரத்தைப் பார்த்தான்.



அவநம்பிக்கை தோன்ற டயரை விரல்களால் அழுக்கிப் பார்த்தான். பிறகு, பின்பக்கம் மாட்டி வைத்திருந்த காற்றடிக்கும் பம்ப்பை எடுத்துக் காற்றடித்தான். முகத்தில் திருப்தி நிறைந்தது. பம்ப்பை மாட்டிவிட்டு, "நன்றி குயிலா'' என்று சைக்கிளில் ஏறிக் கொண்டான்.

அப்போது தான் கவனித்தான் குயிலன்; குமரன் தாங்கித் தாங்கி நடந்து வந்தான். அவனது வலது கால் சற்று வளைந்து மெலிந்திருந்தது!


குமரன் அருகில் வந்ததும் சைக்கிளைப் பிடித்துக் கொண்டு, ''போகலாம், ஏறிக்கோ!" என்றான்.


குயிலன் வியந்து போனான். தனக்கு ஒரு கால் ஊனமாக இருந்த போதும், மற்றவனுக்கு உதவி செய்ய நினைக்கிறானே!

அவன் பார்வை குமரனின் வலது காலில் பதிந்திருந்தது. அதைக் கவனித்து விட்டான் குமரன்.

"ஓ! இந்தக் காலைப் பார்க்கறியா? காலு பலவீனம்தான்! மனசு அப்படியில்லே. ஊனமானவன்னு நினைச்சிடாதே...''- சிரித்தான் குமரன்.

அப்போது குயிலன் தன் மனதுக்குள்ளேயே வருந்தினான். நல்ல கால்களை வைத்துக் கொண்டு நடப்பதற்கு வருந்திக்





"ஈசல்" எல்லாம் ஏன் சண்டை போடுது?"
"அவங்களுக்குள்ளே ஏதோ" பூசலாம்!"

— பாளை பசும்பொன்

கொண்டிருந்தேனே ஆரம்பத்தில்! போகப் போகத்தானே தேற்றிக் கொள்ள முடிந்தது!

"தம்பீ! பயப்படாமே பின்னாலே ஏறி உட்கார். நீ என்ன சின்னப் பையன். நான் என் அம்மாவையே பின்னாலே உட்கார வச்சிக்கிட்டுக் காற்றா பறப்பேன் இந்த சைக்கிள்ளே. அம்மாதான் மெதுவாப் போன்னு திட்டும். நான் ஸ்பீடாப் போவேன். அம்மாவை ஏத்திக்கிட்டுப் போறது எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கும் தெரியுமா?

"இப்போ கூட, வீட்டுக்குப் போனதும் உடம்பிலே தண்ணி ஊத்திக்கிட்டு, இதே சைக்கிள்ளே அம்மாவை ஏத்திக்கிட்டு ஆத்தங்கரை அம்மன் கோயில் திருவிழாவுக்குப் போகப் போறேன். அதான்... கடையிலிருந்து சிக்கிரம் புறப்பட்டுட்டேன். முதலாளி ரொம்ப நல்லவரு. இல்லேன்னா கால் ஊனமடைந்தவனுக்கு யார் வேலை கொடுப்பாங்க? தினம் அஞ்சு ரூபா கூலியும் கொடுத்து, போக வர இந்தச் சைக்கிளையும் கொடுத்திருக்கிறாருன்னா... பாரேன்!"

குமரனின் பேச்சிலிருந்து அவனுடைய தாய்ப்பாசமும், முதலாளியின் மீது அவன் வைத்திருந்த நன்றியுணர்வோடு கூடிய மரியாதையும் குயிலனுக்குப் புரிந்தன.

"சரி சரி! நேரமாவுது. ஏறிக்கோ!"

குமரன் சைக்கிளில் ஏறப் போனான். குயிலன் அவனைத் தடுத்தான்.

"நான் மிதிக்கிறேனே!"- கெஞ்சும் பாவனையில் கேட்டான் குமரன்.

"இது ஓட்டை வண்டிப்பா. பார்த்து ஓட்டணும். நீ சைக்கிள் ஓட்டுவியா?" அவன் முதுகிலே தட்டியபடி கேட்டான் குமரன்.

"காரே ஓட்டுவேன், தெரியுமா?"

குயிலன் அப்படிச் சொல்லிவிட்டு, ஏதோ சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டவன் போல உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"என்னது! காரே ஓட்டுவியா? பெரிய ஆளுதாம்பா நீ! பெரிய இடத்துப் பையன்தான் போலிருக்கு. பின்னே, ஏன் நடந்து போறே?"- குமரன் ஆச்சரியப் பட்டுப் போய்க் கேட்டான்.

குயிலனின் கண்களிலிருந்து 'பொல பொல'வென நீர் கொட்டத் தொடங்கியது. அதை குமரனுக்குத் தெரியாமல் மறைக்க முயன்றான். உடனே சைக்கிளில் பின் சீட்டில் ஏறிக் கொண்டான்.

"என்னப்பா அழறே?" இரக்கத்தோடு கேட்டான் குமரன்.

"அப்பா ஞாபகம் வந்திடுச்சி. அதனால் தான்..."

"உன் அப்பா...?"

"எங்கே இருக்காருன்னு யாருக்கும் தெரியல்லே...!"

"அப்படின்னா ஏதாவது தப்பு பண்ணிட்டுத் தலைமறைவா இருக்காரா?"

"குமரா! நான் பட்டணத்திலே பணக்கார வீட்டுப் பிள்ளைங்க படிக்கிற பள்ளியிலதான் படிச்சிக்கிட்டிருந்தேன். அந்தப் பள்ளிக்குக் கூட என் அப்பா நிறைய பணம் கொடுத்து உதவி பண்ணியிருக்காரு."

"பின்னே ஏன் கிராமத்துக்கு வந்தே? பட்டணத்திலே காரு பங்களான்னு இருந்திருப்பீங்க போலயிருக்கு."

"ஆமாம்! அப்பவெல்லாம் அப்பாவுக்கு நிறைய சிநேகிதங்க. யார் யாருக்கோ என்னென்னவோ உதவியெல்லாம் செஞ்சாரு. தேர்தல்ல நின்னாரு. நெறைய செலவு பண்ணாரு. ஆனால் தோத்துப் போயிட்டாரு. அப்புறம் அவரை யாரும் மதிக்கல்லே. சிநேகிதங்க யாரும் பார்க்க வரல்லே. அவருக்கு அவமானமாப் போயிடுச்சி. வீட்டுக்குள்ளேயே இருந்தாரு.

ஒருநாள் வெளியே போனவர் திரும்பி வரல்லே. ஒரு மாசம்... ரெண்டு மாசம் ஆச்சு, வரவேயில்லே. அதுக்கப்புறம்தான் அம்மாவோட சிநேகிதி ஒருத்தரு வந்து இந்தக் கிராமத்துக்கு எங்களைக் கூட்டி வந்தாங்க. அம்மாவுக்குத் தையல் வேலை எல்லாம் தெரியும். அழகழகாப் பின்னு வாங்க. கிராமத்திலே சில பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தர்றாங்க."

குயிலனின் குரல் தழதழத்தது. குமரன் அவனுக்கு ஆறுதல் கூறினான்.

"எப்படியோ... உன்னாலே படிக்க முடியுதே. சந்தோஷப்படு தம்பீ! நல்லா படி! நல்லா படிச்சு உத்தியோகத்துக்குப் போய், அம்மாவுக்குக் கஷ்டம் கொடுக்காமே காப்பாத்து."

குமரன் பெரிய மனிதன் போல் சொன்ன வார்த்தைகள் குயிலனுக்குப் பெருத்த ஆறுதல் தந்தன.

"பாரு... ஒரு நாளைக்கு உன் அப்பா... திடீர்னு உங்க முன்னே வந்து நிற்பாரு. உங்க கஷ்டமெல்லாம் போயிடும். கவலைப்படாதே!"– குமரன் இப்படிச் சொன்னதும் குயிலன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். சைக்கிளை வேகமாக மிதித்தான்.

"எனக்கும் அப்பா இல்லே தம்பி! அம்மாதான் எனக்கு எல்லாம். அவுங்களுக்கு உதவியாயிருக்கணுமின்னு தான் நான் வேலை செய்யறேன். அம்மா வேண்டாமுன்னுதான் சொல்லுது. நான் தான் கேட்கலே..."

"உன் அப்பா...?"

"குயிலா! என் அப்பா எல்லாருக்கும் உதவி செய்வாரு. ரொம்ப தைரியசாலி. அன்னிக்கு ஒரு திருடனை ஓடிப் போய்ப் பிடிச்சிருக்காரு. அவன் தப்பிப் போறதுக்காக இவரைக் கத்தியாலே குத்திட்டு ஓடிட்டான். அப்பா அந்த இடத்திலேயே செத்துட்டாரு. அதனாலேதான் என்னாலே படிக்க முடியாமே போச்சு!"– வருந்தினான் குமரன்.

"குமரா! உனக்கு நேரம் இருந்தால் நான் ராத்திரியிலே உனக்குப் பாடம் சொல்லித் தர்றேன். பிரைவேட்டா பரீட்சை எல்லாம் எழுதலாம். வழியிருக்கு. அம்மா சொன்னாங்க. அஞ்சல் வழிக் கல்வின்னு இருக்காம். நான் கூட ஹைஸ்கூல் வரைக்கும்தான் படிப்பேன். அப்புறம் ஏதாவது வேலை தேடிக்கணும். வேலை செஞ்சிகிட்டே படிக்கலாமாம். மாலை நேரக் கல்லூரி கூட இருக்காம். எல்லாம் தெரிஞ்சி வச்சிருக்கேன். நீயும் படிக்கலாமே!"

"கேட்கிறதுக்குச் சந்தோஷமாயிருக்கு! இது நல்ல யோசனை. அம்மாவும் சரின்னும். என் முதலாளியும் ஒத்தாசை செய்வாரு. இனிமே நாம் அடிக்கடி சந்திக்கலாம். தினமும் காலையிலே எட்டு மணிக்கு உன் கிராமம் பக்கம் வருவேன். நீயும் வா! ரெண்டு பேருமே சைக்கிள்ளே போகலாம்."

"...அப்படின்னா... நான்தான் தினமும் மிதிப்பேன்!" என்றான் குயிலன்.

"ஆனால் சாயந்திரம் நீ நடந்துதான வரணும்!" என்று சிரித்தான் குமரன்.

"இந்த உதவிக்கே நான் உனக்கு என்ன செய்யப் போறேன்னு தெரியலையே!" என்றான் குயிலன்.

"அதான்... பாடம் சொல்லித் தரப் போறியே!"

"குருவுக்கு முன்னால் இப்படியெல்லாம் இனிமே மரியாதை இல்லாம பேசக் கூடாது!" என்றான் குமரன் மகிழ்ச்சியோடு.

குருபீடம் தந்த பெருமிதப்பில் பயனுள்ள சமுக சேவையைச் செய்யப் போகும் மகிழ்ச்சியில் தன்னை மறந்து போனான் குயிலன்.

"ஸ்வீட் கடைக்காரர் கடிதம் எழுதினா எப்படி எழுதுவார் சொல்லு பார்க்கலாம்?"

"தெரியலையே!"

"நலம். நலமறிய அல்வா'ன்னு எழுதுவாரு."

-ப. ஜெகநாதன்



எங்கே செல்வோம்?

ரமணர் ஆசிரமத்தின் உள்ளறையில் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். எப்போதும் ஆசிரமத்தின் முன் அறையில் ரமண மகரிஷி பக்தர்களைக் கண்டு அருள் தருவது வழக்கமாக இருந்தது. அந்த முன் அறையின் மேலே சில குருவிகள் கூடு கட்டியிருந்தன. ஆசிரமத்தில் இருந்த சீடர்கள், குருவிகள் சத்தம் செய்வதை வெறுத்தனர். அதோடு முன் அறையில் குருவிகள் எச்சமிட்டு அசுத்தப் படுத்துவதையும் கவனித்தனர்.

இந்தத் தொந்திரவுகளைத் தவிர்க்க சீடர்கள் ரமண மகரிஷிக்குத் தெரியாமலேயே குருவிக் கூடுகளைக் கலைத்து ஆசிரமத்திற்கு வெளியே தூக்கிப் போட்டு விட்டனர்.

பிறகு ரமணர் ஓய்வெடுக்கும் அறையைச் சீடர்கள் எட்டிப் பார்த்தனர். அங்கே பகவான் ரமணர் உறங்கிக் கொண்டிருந்தார்.

சீடர்களின் மனதிலோ பெரு மகிழ்ச்சி. "அப்பாடா...! எப்போது பார்த்தாலும் கத்திக் கொண்டிருந்த குருவிகளை பகவானுக்குத் தெரியாமலேயே அப்புறப் படுத்தி விட்டோம்"- என்று மனதில் எண்ணினார்கள்.

சிறிது நேரம் கழித்து ரமண மகரிஷி கண் விழித்தார். நேராக முன் அறைக்கு வந்தார். குருவிக் கூட்டைக் கலைத்த இரு சீடர்களையும் அழைத்தார்.

"இங்கே இருந்த குருவிக் கூட்டை ஏன் கலைத்தீர்கள்?"- ரமணர் கேட்டார்.

சீடர்களுக்கோ ஒரே திகைப்பு!


ரமணர் உறங்கிக் கொண்டிருந்தபோது அவர் அறியாமல் அவர்கள் செய்த செயல் எப்படி குருவிற்குத் தெரிந்தது என்று வியந்தனர்.

"பகவானே, அந்தக் குருவிகள் உங்கள் மேல் எச்சமிட்டு அசுத்தம் செய்து விடுமே என்ற பயத்தாலும், அவைகளின் 'கிரீச்குரல்' தங்களின் தியானத்தினைக் கலைத்து விடுமே என்ற கவலையாலும்தான் நாங்கள் கூட்டைக் கலைத்தோம்" என்றனர் சீடர்கள்.

"எவ்வளவு பெரிய பாவத்தைச் செய்து விட்டீர்கள்? குருவிகள் என்மேல் எச்சமிட்டால்தான் என்ன? துடைத்துக் கொண்டால் போகிறது? என் தியானத்தை குருவிகளின் 'கிரீச் சத்தம் கெடுத்து விடும் என்கிறீர்களே! நம் வசதிக்காகப் பிறரைத் துன்புறுத்துதல் நியாயமா? நான் உள்ளறையில் கண்களை மூடிக் கொண்டிருக்கும்போது கூட்டை இழந்த இரண்டு குருவிகளும் வந்து, 'வெளியே பாதுகாப்பில்லாததால் உங்கள் ஆசிரமத்தினில் வந்து குடிபுகுந்தோம். பல நாட்கள் கடின உழைப்பினால் அமைத்த எங்கள் வீட்டை உங்கள் சீடர்கள் கலைத்து விட்டார்களே! இங்கேயே பாதுகாப்பு இல்லையென்றால் இனி நாங்கள் எங்கே செல்வோம் பகவானே! என்று கூறி ஓலமிட்டு அழுதன" என்றார் ரமணர்.

சீடர்கள் ரமணரிடம் மன்னிப்புக் கேட்டனர். இனி எவ்வுயிருக்கும் தீங்கு செய்வதில்லை என்று உறுதி எடுத்தனர்.

மனிதர்களிடம் மட்டுமின்றி பறவைகள், விலங்குகளிடத்திலும் ரமணர் தாயைப் போல் அன்பு செலுத்தி வந்தார்.





அ.கு. கிருஷ்ணன்

ரானா போட்ட மாவிளக்கு!

அமைப்பு : ரே.
ஓவியம் : சசி






ரோசியை அடக்கம் பண்ணி --
உன் ஆன்மா சாந்தியடையட்டும்.
உன்னதமான பிறவி!
செல்வி வீட்டில் பசு இருந்தது. தினமும் --
ஃபாதர், நாலு ஃபீடிங் பாட்டிலில் பால் கொண்டு வந்திருக்கேன். குட்டிங் களுக்குத் தந்திட்டுப் போறேன்.
மகிழ்ச்சிம்மா.
மாலையிலும் வந்து கவனிக்கிறேன் ஃபாதர். குட்டிங்க பெரிசாகும் வரை, பாலை வெளில விற்க வேண்டாம்னு அம்மா கிட்ட சொல்லிட்டேன்.
பாம்பு கடிச்சு மயங்கியதும் ரோசி குட்டி போடமலேயே இறந்துடுமோன்னு பயந்தேன். கர்த்தர் காப்பாற்றிட்டார்...
இப்ப குட்டிகளைக் காப்பாற்ற நீ வந்துட்டே!
ரோசி காட்டின அன்புக்கு, இது கூடச் செய்யலேன்னா மன்னிப்பே கிடையாது ஃபாதர்.
நாட்கள் ஓடின. செல்வியின் கவனிப்பில் குட்டிகள் வளர்ந்தன --




செல்வியுடன் விளையாடின.
ஃபாதர், இன்னிக்கி கிருஷ்ண ஜெயந்தி. முறுக்கு சீடையெல்லாம் பண்ணினாங்க. உங்களுக்காகக் கொண்டு வந்திருக்கேன்.
மகிழ்ச்சிம்மா. ஆமாம் குட்டிகளுக்கு முறுக்கு இல்லையா?
இதுல பெருங்காயம் போட்டிருப்பாங்க ஃபாதர். வேண்டாம். குட்டிகளுக்கு முடி உதிர்ந்திடும். அதிரசம் தரேன் போதும்.
கிருஷ்ண ஜெயந்தி, பிள்ளையார் சதுர்த்தி, பொங்கல், தீபாவளிக்கெல்லாம் இனிமே எனக்கு யார் பலகாரம் தரப் போறாங்க?
ஏன் ஃபாதர்? நான் தருவேனே?
என்னை ஸ்ரீலங்கா போகச் சொல்லி, திருச்சபை உத்தரவு வந்திருக்கிறது செல்வி. மீற முடியுமா?


இங்கேயே இருக்கக் கேட்கலாமே ஃபாதர்?
திருச்சபைத் தொண்டர்கள் அப்படிக் கேட்கக் கூடாதும்மா.
அப்ப எங்களைப் பிரியப் போறீங்களா?
ஆம் செல்வி. பாசம் பொழியும் உன் போன்ற மத இணக்கம் மிக்க ஊர் மக்கள், அன்பால் கட்டிப் போட்டுள்ள நாய்க் குட்டிகள் எல்லாவற்றையும் உதறிவிட்டு அடுத்த வாரம் கிளம்பியாக வேண்டும்மா!
பிரியப் போறாமா? இப்பவே மனது கனக்குது!
மறுநாள் –
வணக்கம் ஃபாதர், அழைத்தீர்களாமே?
ஆமாம் செல்வி. இவர்தான் ஊட்டி நண்பர்....
நாய்க்குட்டிகளை வளர்க்க முன் வந்திருப்பவர் இவர்தானா? வணக்கம் சார்.
வணக்கம்மா



ஃபாதர், சார் நாய்க்குட்டிகளைப் பார்த்தாரா?
பார்த்தேம்மா. உயர்ந்த ஜாதிவகை... விலைக்கு வாங்கினால் ஒரு குட்டி ஐந்தாயிரம் ரூபாய் ஆகும்!
எனக்குப் பணம் தேவையில்லை. அன்பாக வளர்த்தால் போதும்.
அன்பைப் பொழிந்து வளர்ப்பேன் ஃபாதர். இவைகளுக்கு என்ன பெயர்?
இன்னும் பெயர் வைக்கலை.
அதுவும் நல்லதுதான். நானே வைச்சுக்கறேன். ஃபாதர்... ஒரு விஷயம்...
என்ன? சொல்லுங்கள்?
எனக்கு மூன்று போதும். நெற்றியில் கருப்புப் புள்ளி போட்ட அந்த ஆண் குட்டி வேண்டாம்.
என்ன காரணம்?
கண்காட்சியில் தங்கப் பதக்கம் பெறக்கூடியதாக நான் வளர்க்கப் போகும் நாய்கள் இருக்க வேண்டும்.



அதனால்....
அந்த ஆண் குட்டி வேண்டாம். அதன் இரு காதுகளில் ஒன்று பெரியது. மற்றொன்றும் கோணல்!
தங்கப் பதக்கம் பரிசு பெறும் வாய்ப்பு இல்லை என்பதால் வேண்டாம் என்கிறீர்கள்...?
அதுவேதான் ஃபாதர்!
ஆக, நாய் வளர்ப்பது நோக்கம் அல்ல. தங்கப் பழக்கம் பெற நாய் வளர்ப்பதே இலட்சியம்? அப்படித்தானே?
நண்பரே. ஒரு உறுதி தர வேண்டும்.
சொல்லுங்கள் ஃபாதர்?
இவை பெரிதாகி பதக்கம் வாங்கி உங்கள் கனவை நிறைவேற்றி வைக்கலாம். பதக்கம் பெற்ற பிறகு விரட்டிவிட மாட்டீர்களே? இறுதிவரை காப்பதாக உறுதி தந்துவிட்டு நாய்க்குட்டிகளுடன் கிளம்பலாம்.
அடுத்த நாள் –
ஃபாதர், இந்த ஒரு குட்டியை என்ன பண்ணப் போகிறீர்கள்?
அதுதான் எனக்கும் கவலையா இருக்கு. நாய் இலட்சணம் அறிந்தவர்கள், இது தரமானது அல்ல என்கிறார்கள்!
செல்வி. இதை நீயே ஏன் வளர்க்கக் கூடாது மகளே?
நடுத்தரக் குடும்பம். எங்களுக்கு வசதி போதாதே ஃபாதர்?
ஏம்மா அப்படிச் சொல்றே?
இப்போ மூன்று டம்ளர் பாலும் பன்னும் போதும். ஆனால் இது வளர கறியும் மீனும் நிறைய வைக்கணுமே? நாங்க எங்கே போவோம்?



நாய் வளர்க்க அன்பும் அக்கறையும் தான் முதல் தேவை. மீதியெல்லாம் அடுத்துதான். இதை நீயே வளரும்மா.
சரி ஃபாதர்.
நாய்க் குட்டி செல்வியின் வீட்டுக்கு வந்தது
செல்வியின் அம்மா –
பழைய சாதம்தான் போட முடியும். ஃபாதரிடம் சொல்லிட்டே இல்லே?
சொல்லிட்டேம்மா.
மாடிப்படி வளைவில் கோணி போட்டுக் கட்டிவை. உள்ளே எல்லாம் வரக்கூடாது.
சரிம்மா. ஆனா, கட்டிப் போட வேண்டாம். புத்திசாலி. சொன்னாலே புரிஞ்சுக்கும்.
இதுக்கு என்னடி பேரு?
ராணாம்மா!
ராணாம்மாவா! என்னவோ ஆண் நாய்ன்னு சொன்னே! பெண் பேரா இருக்கே?
அம்மா, இதன் பெயர் ராணா. அக்பர் ஆட்சியை ஏற்காமல் போராடிய சித்தூர் ராணா பிரதாப் சிம்மனின் பெயரும்மா! நானா வைச்சது!
என்னவோ, கூப்பிட எளிதா இருக்கு!




நாட்கள் ஓடின. செல்வி அன்பைக் கொட்டி ராணாவை வளர்த்தாள்.
அதன் அறிவுத் திறனைக் கூர்மையாக்கினாள் –
ராணா இதோ பார் என் பந்து.
இப்போ உன் கண்ணைக் கட்டறேன்!
இப்போ பந்தை ஒளிச்சு வைப்பேன். நீ கண்டு பிடிக்கணும்.
கண்கட்டை அவிழ்த்துட்டேன். ஏங்கே, இப்போ பந்தைக் கண்டு பிடிச்சுக் கொண்டா. ஓடு... ஓடு!
ராணா தெருவில் ஓட – செல்வியும் பின்னால் ஓடுகிறாள்.
குழாயடியில் குடவரிசையில் செல்வி வீட்டுக் குடத்தைச் சாய்க்கிறது.
ஐயோ நாய்!
அட! இங்கதான் வருது!


குடத்திலிருந்து வெளியே வரும் பந்தைக் கௌவிக் கொண்டு --
செல்வியிடம் போனது --
சமர்த்து ராணா. இந்தா பிஸ்கட்!
செல்வி ராணாவை அருமையாகப் பழக்கினாள். பேப்பர் வாங்கி வரும்.
விளக்குப் போடும்.
பால் வாங்கி வரும்.
உயரம் தாண்டும்.
ராணா, நீ புத்திசாலி. நீயும் ஒருநாள் தங்கப் பதக்கம் வாங்குவே!
ராணா வளர்ந்தது.


ஒரு நாள் -- செல்வி ராணாவுடன் வந்தபோது.
ராணா செல்வியை இழுக்க --
மாடு ராணாவை காயப்படுத்துகிறது.
செல்வி அதிர்ச்சியில் மயங்கிச் சாய்ந்தாள்.
மருத்துவமனையில் --
எனக்கு ஒன்றுமில்லேம்மா. ராணா எங்கே?
காலிலே பலத்த காயம்மா. வீட்டுல படுத்திருக்கு. டாக்டர் ஊசி போட்டிருக்கார்.
என்னைக் காப்பாத்த குறுக்கே பாஞ்சதும்மா! அதுக்கு ஒன்றுமில்லையே?
உனக்கு குணமானா திருச்சடை அம்மனுக்கு மாவிளக்கு போடறதா வேண்டிக் கிட்டேன்!
அப்படி வேண்டிக்கிட்டா குணமாயிடுமாம்மா?
கண்டிப்பா குணமாயிடும். திருச்சடை மாரியம்மன் கண்கண்ட தெய்வம்.


அம்மா போனதும் --
திருச்சடைம்மா, ராணாவுக்குக் குணமாகட்டும். அதைக் கூட்டி வந்து மாவிளக்குப் போடறேன்.
நாட்கள் ஓட செல்வி பூரண குணமடைந்தாள். ராணாவும் குணமடைந்தது.
பள்ளியிலிருந்து திரும்பியதும் --
செல்வி, நாளைக்கு சடையூர் போறோம். அம்மனுக்கு மாவிளக்கு போடப் போறோம்.
ராணாவுக்கும் போடணும். நான் வேண்டிக்கிட்டேன்!
என்னடி அதிசயம்! நாய்க்காக மாவிளக்கா! கேட்டதுகூட இல்லையே!
எனக்காக நீ வேண்டிக்கலாம். ராணாவுக்காக நான் வேண்டிக்கக் கூடாதா?
எல்லோரும் கிளம்பினர் --
எத்தனை ரூபாய் தந்தாலும் நாயை பஸ்ல ஏத்த மாட்டோம்க.
வேறு வழியின்றி, லாரியில் ஏறி சடையூர் வந்தனர்.



ஓட்டலில் இடம் கேட்க --
நாய்க்கு அனுமதி இல்லேங்க. நீங்க மூணுபேர் மட்டும் தங்க அறை தரோம்.
அம்மாவுக்குக் கோபம் வர --
எல்லாம் இந்த சனியனுக்காக இவள் வேண்டிக் கிட்டதால வந்தது.
ராணா, என்ன வந்தாலும் உன்னை வெறுக்க மாட்டேன்.
கோவில் மண்டபத்தில் தங்கினர்.
காலையில் குளித்துவிட்டு --
நாயோட வராதீங்க. கோவிலுக்குள் அனுமதிக்க மாட்டோம்.
ஐயா, இதுக்கும் மாவிளக்குப் பிரார்த்தனை இருக்கு. தயவு பண்ணுங்க.
என் வேலை போயிடும்மா. இப்படிக் கூட வேண்டிப்பாங்களா?
அதிகாரி வருகிறார் --
என்ன தகராறு?
நாய்க்கு மாவிளக்குப் பிரார்த்தனை இருக்காம்.
நல்ல வேடிக்கை! கேள்விப்பட்டதே இல்லை. கோவிலுக்குள் அனுமதிக்க மாட்டோம். வெளி மண்டபத்தில் போட்டுக்குங்க.


அதிகாரி போனதும் --
இந்தச் சனியனை கம்பத்துல கட்டிப் போட்டுட்டு, நாம மட்டும் மாவிளக்குப் போட்டுட்டு வரலாம்.
நான் வரலேம்மா. நீங்க ரெண்டு பேரும் போயிட்டு வாங்க. ராணாவுக்கு இல்லாத அனுமதி எனக்கும் வேண்டாம்.
என்னடி பிடிவாதம் இது?
பாசம் அன்பு எல்லாம் மனிதர்களுக்கு மட்டும் தானம்மா? நாய்களுக்கு இல்லையா? அவை நம்மையும், நாம் அவைகளையும் நேசிக்கக் கூடாதா?
விதண்டாவாதம் பண்ணாதேடி.
கோவிலுக்குள் யானை வரலாம், பசு வரலாம், மயில் சேவல் வரலாம். நாய் மட்டும் வரக்கூடாதா? இது என்ன நியாயம்?
கட்டிப் போட்டுட்டு நீ மட்டும் வரப் போறியா இல்லையா?
மன்னிச்சுக்கோங்கம்மா. எனக்கும் ராணாவுக்கும் உள்ள அன்பு உண்மையானதாக இருந்தால், எங்களைக் காப்பாற்றிய சடையம்மன், என்னமாவது அற்புதம் செய்து எங்களை உள்ளே வர அருளட்டும்.
செல்வி, ராணாவுடன் போகிறாள்--
திடீரென்று --
திருடன்! திருடன்!
சாமி நகையைத் திருடிக்கிட்டு ஓடறான்!
பிடிங்க! பிடிங்க!
கோவில் கதவுகள் மூடப்படுகின்றன --
அதிகாரி வருகிறார் --
என்ன ஆச்சு சார்?
முகமூடித் திருடன், கத்தியால பயப்படுத்தி, சாமி நகைகளைக் கொள்ளையடிச்சிட்டு ஓடிட்டான்!


கதவை ஏன் மூடிட்டிங்க!
திருடனோட கைகுட்டை கீழே விழுந்திருக்கு. அதை யாரும் எடுக்கக் கூடாதுன்னுதான்... போலீஸ் நாய் வரும்.
மாணவர் மோதலாம். போலீஸ்காரங்க எல்லாம் அங்கே போயிட்டாங்களாம். போலீஸ் நாய் இப்போ வராதாம்.
ஐயா, என் ராணாவை போலீஸ் நாய் மாதிரியே பழக்கியிருக்கேன்.
ஆபத்துக்கு தோஷமில்லே. உடனே நாயைக் கோவிலுக்குள் கூட்டிக்கிட்டு வாம்மா.
செல்வி ராணாவைக் கூட்டி வந்து --
கைகுட்டையை முகர்ந்து பார் ராணா. யாருதுன்னு கண்டு பிடி?
ராணா ஓட, செல்வியும் தொடர்கிறாள்.
ஊருக்கு வெளியே மாந்தோப்பைக் . கடந்து --


வைக்கோல் போருக்கு முன்பு -- வந்து நின்று தாவுகிறது.
திருடன் வைக்கோல் போருக்குள் பதுங்கியிருக்கிறான்.
உடனே வெளியே வராட்டா வைக்கோல் போருக்குத் தீ வைச் சிடுவோம்.
திருடன் கத்தியுடன் வெளியே வர, ராணா பாய்கிறது.
திருடன் தடுமாறி கத்தியைக் கீழே நழுவவிட, ராணா பிடித்துக் கொள்கிறது.
நகைகளும் பிடிபட்டன --
உன்னுடைய நாய்க்கு எப்படி நன்றிக் கடனைக் கழிப்போமோ?
ராணாவை மாவிளக்குப் போட கோவிலுக்குள் அனுமதியுங்கள். அது போதும்.
அனுமதி என்னம்மா. தடபுடலா வி.ஐ.பி. வரவேற்பே கொடுத்து அழைத்துப் போறோம்!
பரிவட்டம் கட்டி பூர்ண கும்ப வி.ஐ.பி. வரவேற்புடன் --
ராணா மாவிளக்குப் போட்டது.
முற்றும்




GOKULAM

The monthly magazine for children

96 PAGES

for just Rs.5!

GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 600 097



"இளங்கோவடிகள் குருகுலத்திலே படிக்கிறப்பவே 'சன்டே ஹாலி டே' போலிருக்குடா!"
"எப்படிச் சொல்றே!"
"'ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றதும்'னு ஞாயிரைப் புகழ்ந்து பாடியிருக்கார்.
-கள்ளிக்குடி குருஸ்ரீ
கண்டக்டரால கண்டாக்டர் ஆக முடியுமா! எப்படி?
கண்டக்டருக்கு கால் போட்டா கண்டாக்டர் ஆயிடுவாரே!
-நீ.அகிலா, திருநெல்வேலி
"டாக்டர், உங்க ஆஸ்பத்திரியின் பேரைக் கேட்டாலே குழந்தைங்க அலறியடிச்சி ஓடுதுங்க!"
"அப்படியா! ஏன்?
'தடுப்பூசி' என்கிறதுக்குப் பதிலா 'தடிப்பூசி போடப்படும்'னு போர்டுல போட்டிருக்கே?"
-கள்ளிக்குடி குருஸ்ரீ
"சே! ஒலிம்பிக்ல தங்கம் வாங்கிக் கொடுக்கலாம்னு பார்த்தேன்; அது முடியாமல் போயிடிச்சடா"
"ஏன்டா?"
"ஒலிம்பிக்லதான் சாப்பாட்டுப் போட்டியெல்லாம் கிடையாதாமே!"
-சீர்காழி வி.ரேவதி
அரிசி என்ன விலை?
கிலோ பன்னிரண்டு ரூபாய்
குறைச்சு தருவீங்களா?
தருவோமே, அரைகிலோ ஆறு ரூபாய்க்கு!
-பா.ஜெயக்குமார், வந்தவாசி

நண்பர் பெருமை!

குழந்தைக் கவிஞருக்கு மிக நெருங்கிய நண்பர்கள் பலர் உண்டு. அவர்களுள் முதல் வரிசையில் இருப்பவர் பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளர் உயர்திரு செ.மெ. பழனியப்ப செட்டியார் அவர்கள். இவருக்குப் பல சிறப்புகள் உண்டு. குழந்தை எழுத்தாளர் சங்கம் தோன்றியது இவரது இல்லத்தில் தான். குழந்தைக் கவிஞரின் புகழ் பெற்ற "மலரும் உள்ளம்" பாடல் தொகுதியை முதலில் வெளியிட்டவரும் இவரே. குழந்தைக் கவிஞரின் பல இலக்கிய சாதனைகளுக்கு உறுதுணையாக இருந்த சிறப்பும் இவருக்கு உண்டு. 1972 ஆம் ஆண்டில் நடைபெற்ற குழந்தை இலக்கிய மாநாட்டில் சிறந்த சிறுவர் நூல் பதிப்பாளருக்கான கேடயம் இவருக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டார்.



• செ.மெ.பழனியப்பன்

சிறுவருக்கான தரமான நூல்களை வெளியிட்டு வரும் பழனியப்பா பிரதர்ஸ், பல ஆண்டுகளாக நாட்குறிப்பையும் வெளியிட்டு வருகிறது. தமிழில் பஞ்சாங்கக் குறிப்புகளுடன் கைக்கு அடக்கமாக வெளிவரும் இவர்களது நாட்குறிப்பின் பெயர் பால்ஸ் டைரி. (PAL'S Diary).

ஒருமுறை குழந்தைக் கவிஞர் மகாஜனசபா கட்டடத்தில் இலக்கிய விழா ஒன்றில் கலந்து கொள்ள வந்திருந்தார். இந்த மகாஜனசபா கட்டடம், சென்னை அண்ணாசாலையில் எல்ஐசி கட்டடத்திற்குப் பின்னால் உள்ளது. விழாவுக்கு வருகை தந்திருந்த அயல்நாட்டு அன்பர் ஒருவர், "தினமும் உங்களை நினைக்கும்படி, ஏதாவது நினைவுப் பரிசு கொடுங்கள்" என்று திடீரென்று கேட்டு விட்டார். கூட்டம் தொடங்கவில்லை. அதனால் கவிஞர் எதிரே இருந்த "ஹிக்கின்பாதம்ஸ்" புத்தகக் கடைக்கு வந்தார். அது அக்டோபர் மாதக் கடைசி. புத்தாண்டு நாட்குறிப்புகள் வகைவகையாகக் குவிக்கப்பட்டிருந்தன. ஆங்கிலப் பதிப்பாளர்களின் நாட்குறிப்புகளுக்கு ஈடாக, ஏன் அவைகளை விடச் சிறப்பாக பால்ஸ் டைரிகளும் வைக்கப்பட்டிருந்தன. விலை கொடுத்து பால்ஸ் டைரி ஒன்றை வாங்கினார். டைரியைப் புரட்டிக் கொண்டே வந்தார் கவிஞர். இருவரும் போக்கு வரத்து மிக்க அண்ணாசாலையைக் கடந்தோம்.

"இதில், ஒரே பாரத்தை (Form) இரண்டு வைத்து பைண்டு பண்ணியிருக்கிறார்கள். இருக்க வேண்டிய பாரம் தவறி விட்டது. இன்னொரு டைரியை வாங்கி வாருங்கள். நான் கூட்டத்திற்குப் போகிறேன். காத்துக் கொண்டிருப்பார்கள்" என்றார் கவிஞர்.

"இதையே திருப்பிக் கொடுத்து வேறு வாங்கிக் கொள்ளலாமே?" என்றேன் நான்.

"இது நெருங்கிய நண்பர் வெளியிடும் பால்ஸ் டைரி. மிகக் கவனமாக ஆங்கில டைரி தயாரிப்பு நிறுவனங்களுடன் போட்டி போடும் தரத்தில் மிகக் கவனமாகத் தயாரிக்கப்படுகிறது. இருந்தும் பைண்டிங்கில், பாரத்தை அடுக்கும் போது இம்மாதிரி ஏற்பட்டிருக்கிறது. நல்ல காலம். இது என் கைக்கு வந்திருக்கிறது. வேறு யாரிடமாவது போயிருந்தால், என்ன ஆகியிருக்கும்? தமிழ்ப் பதிப்பாளர்களின் டைரி தயாரிப்பே இப்படித்தான் இருக்கும் என்பார்கள். இதை அனுமதிக்கலாமா? இதை அவருக்கே அனுப்பி வைக்கப்போகிறேன். அதனால் இன்னொரு பால்ஸ் டைரி வாங்கி வாருங்கள்" என்று பணித்தார்.

அடுத்த நாள், அந்த டைரியையும் குழந்தைக் கவிஞரின் கடிதத்தையும் எடுத்துக் கொண்டு, குழந்தைக் கவிஞரின் உயிர் நண்பரான ரத்னத்திடம் தந்து விட்டு வந்தேன்.

குழந்தைக் கவிஞரின் கருத்துக்களுக்கு எல்லாப் பதிப்பாளர்களும் உடனே முக்கியத் துவம் தந்து வந்ததற்கு என்ன காரணம் என்பது இப்பொழுது புரியுமே!

— ரே

உதயன் எங்கே?

வி. ர. வசந்தன்

3. மற்றொரு நண்பன்

விசாலமான அறையில் இடப்பட்டிருந்த பெரிய மேஜையின் பின்னால் அமர்ந்திருந்த வயது முதிர்ந்த ஒரு அம்மையார், "உள்ளே வாங்க' என்று அவர்களை அன்புடன் வரவேற்றார். உதயன் வைத்த விழி வாங்காமல் அந்த அம்மையாரை உற்றுப் பார்த்தான்.

தக்காளி போல் சிவந்து முதிர்ந்த முகத்தில் அன்பு ததும்பும் புன்னகை. கருணை வழியும் கனிவான கண்கள். தாயன்பின் மொத்த உருவமே அங்கு அமர்ந்திருப்பதைப் போன்ற ஒரு பிரமை மனதுக்குள் தோன்ற உதயனின் கரங்கள் அவனையும் அறியாமல் மேலெழுந்து அந்த அம்மையாரை நோக்கி வணக்கத்துடன் குவிந்தன.

உதயனைப் பார்த்துக் கனிவுடன் புன்னகைத்த அம்மையார், "நீதான் உதயனா"? என்று கேட்டார். அவன் 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

"உனக்குப் படிக்க வேண்டும் என்று ரொம்பவும் ஆவல் இல்லையா?" என்று அவர் அடுத்த கேள்வியைக் கேட்க, அவரது முகத்திலிருந்து விழிகளை அகற்றாமலே எச்சிலை மென்று விழுங்கியவனாகத் தலையசைத்தான் அவன்.

அருகில் நின்று கொண்டிருந்த கருத்த முத்துவையும், சடையனையும் ஏறிட்டுப் பார்த்த அம்மையார், "நீங்கள் இருவருந்தான் இவனோடு வந்த ஊர்ப் பெரியவர்களா?" என்று கேட்டார்.

"ஆமாங்க, நான்தான் ஆழிக் குப்பத்துல பெரிய மூப்பு... இந்த புள்ள படிக்கணும்னு ஒரே அடம் பிடிச்சானா? இந்த முகவரிக்கு கடிதாசு போடச் சொன்னது நான்தாங்க" என்றார் கருத்தமுத்து பெருமையுடன்.

"ரொம்ப தங்கமான புள்ளயிங்க இது... குலத்தொழில விட்டுப்புட்டு காகிதப் படிப்பு மேல ஆசைப்படுது... அதுதான் இங்க கூட்டிட்டு வந்தோம்" என்று குழைந்தார் சடையன்.

இருவரையும் புன்னகையுடன் பார்த்த அம்மையார், "நல்லது, உட்காருங்க" என்று எதிரே கிடந்த நாற்காலிகளைக் காட்டினார். அவர்கள் தயங்கி நிற்க, "பரவாயில்லை உட்காருங்க" என்றார் அழுத்தமாக.

ஒண்டிக் கொண்டு அமர்ந்தவர்களிடம், "என் பெயர் மார்கரெட். இந்த கருணையில்லத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறேன். இங்கு சுமார் நானூறு சிறுவர்கள் இருக்கிறார்கள். எல்லோருமே தகப்பனையோ தாயையோ அல்லது இருவரையுமோ இழந்தவர்கள்தான். ஆனால் இங்கு வந்தபின் அந்தக் குறையை அவர்கள் உணர்வதில்லை. என்னை எல்லாக் குழந்தைகளுமே 'அம்மா' என்றுதான் அழைப்பார்கள்... ஒரு வாரத்திற்கு முன்பு வீசிய புயலைப் பற்றியும், ஆழிக்குப்பத்தில் பனி ரெண்டு மீனவர்கள் இறந்து போனதைப் பற்றியும் பத்திரிகைகளில் படித்தேன். அதோடு இந்தப் பையன் எழுதிய கடிதமும் வந்தது... தாய் தகப்பனில்லாத இந்தப் பிள்ளை படிக்க ஆசைப்படுவதைக்

கேட்க மகிழ்ச்சியாக இருந்தது... இங்கு இவனுக்கு எல்லா வசதிகளும் கிடைக்கும். அன்பு உள்பட. அதற்குப் பதிலாக இவன் செய்ய வேண்டியது...." என்று நிறுத்தியவர் உதயனின் முகத்தைப் பார்த்தார்.

மெல்லிய குரலில், ஆங்கில மணம் கமழும் தமிழில் பேசிக் கொண்டிருந்த திருமதி மார்கரெட் தன்னைப் பார்த்ததும் பின்னால் நின்று கொண்டிருந்த உதயன், "நான் என்னங்க செய்யணும்"? என்று ஆவலுடன் கேட்டான்.



"நீ செய்ய வேண்டியது இதுதான். கடமை உணர்வும் ஒழுக்கமும் இந்த கருணையில்லத்தின் இரண்டு கண்கள். அவை இரண்டையும் உன்னுடைய ஒவ்வொரு செயலிலும் நாங்கள் எதிர் பார்ப்போம். இந்த இல்லத்தை உன் சொந்த வீடாக நினைத்து, பொறுப்போடு நடந்துகொள். அது போதும்" என்றார் அவர்.

உதயன் உணர்ச்சி வசப்பட்டவனாக, "கண்டிப்பாக நீங்க எதிர்பார்க்கிறபடி நடப்பேன்" என்றான்.

திருமதி மார்கரெட் பாசம் ததும்ப அவனைப் பார்த்தார். "குழந்தாய், இனி நீ யாரும் இல்லாத அனாதை என்று மனதில் கூட நினைக்கக் கூடாது. இன்று முதல் எங்களது பெரிய குடும்பத்தில் நீயும் ஓர் அங்கம்" என்று புன்னகைத்தார்.

பின் கருத்தமுத்துவையும், சடையனையும்

பார்த்து "உதயனை எங்கள் இல்லத் தில் ஏற்றுக் கொள்வதற்கு ஊர்ப் பெரியவர் களான நீங்கள் இருவரும் தான் ஒப்பு தல் அளிக்க வேண்டும். அதற்கான ஒப்புதல் பத்திரத்தில் கையெழுத் திட வேண்டும்" என்றார்.

இருவரும் சரியென்று தலை யசைக்க அழைப்பு மணியை அடித்து பணியாளரை அழைத்தவர், "அருமை நாயகம், இவர்களை வார் டனிடம் அழைத்துப் போ. எல்லாப் பத்திரங்களிலும் கையெழுத்து வாங்கிவிட்டு, இந்தச் சிறுவன் உதயனை இன்றிலிருந்து இங்கு சேர்த்துக் கொள்ளச் சொல்" என்றார்.

உதயன் திருமதி மார்க ரெட் அம்மையாருக்கு நன்றி தெரிவித்த போது, அவன் கண்கள் கலங்கின.



அருமைநாயகம் அவர்களை அழைத்துக் கொண்டு அந்தக் கட்ட டத்தின் மற்றொரு பகுதி யிலிருந்த வார்டனின் அறைக்கு வந்தார். அந்த அறை யின் வெளியே பெரிய எழுத்துக்களில் 'வைரவநாதன், வார்டன்' என்ற பெயர்ப் பலகை தொங்கியது.

தன் முன்னால் வந்து நின்வர்களை ஏற யிறங்கப் பார்த்த வார்டன் உதயன் நீட்டிய கடிதத்தைக் கையில் வாங்கிப் படித்தார். அவர் முகத்தில் அலட்சியம் கலந்த புன்முறுவல் ஒன்று இழையோடியது. "ஓ. உன் பெயர்தான் உதயனா...? பெயரெல் லாம் நல்லாத்தான் இருக்கு...! என்னமோ பெருசா படிக்கப் போறேன்னு லெட்டர் எழுதினவன் நீதானே"? என்று கேட்டார்.

"ஆமாங்க" என்றான் உதயன் பணி வாக.

"படிச்சு என்னத்த செய்யப் போறி யாம்?"

அவர் ஏன் இப்படி கேட்கிறார் என் பது புரியாமல் குழப்பமடைந்த உதயன், "எப்படியாச்சும் என்னைப் படிக்க வைக் கணும்னு எங்க அப்பா ரொம்ப ஆசைப் பட்டுச்சு... அவரோட ஆசை நிறைவேற ணும்... நான் நல்லா படிப்பேங்க. நீங்களே வேணும்னா அப்புறம் பாருங்க" என்றான்.

என்னவோ பெரிய வேடிக்கைப் பேச்சைக் கேட்டு விட்டவர் போல கடகட வென்று சிரித்த வார்டன், "ஏம்பா, உங்க ளுக்கெல்லாம் புத்தி இப்படிப் போகுது! இந்த உலகத்துல பொழைக்க எவ்வளவோ வழிகள் இருக்கு. ஏதாவது தொழில் செய்து மானமா பொழைப்பீங் களா, அதை விட்டுட்டு இப்படி அனாதை ஆசிரமத்துல வந்து முடங்கிக் கெடப் பீங்களா?" என்று கேட்டார்.

சடையன் உற்சாகம் அடைந்தவனாக, "நாங்க எவ்வளவோ சொல்லியாச்சு... கேட் டாத்தானே?" என்று உதயனைப் பார்த் தார்.

வார்டனிடமிருந்து இந்த மாதிரியான வார்த்தைகளை உதயன் சற்றும் எதிர் பார்க்கவில்லை. ஆனாலும் அவன் மனம் சோர்ந்து போகாமல், "தொழில் செய்து

பிழைககறதை நான் தாழ்வா நினைக்கலேங்க. ஆனாலும், படிச்சு முன்னுக்கு வரணும்னு ஆசைப்படறதும் தப்பில்லை தானே?" என்று கேட்டான்.

புருவத்தைச் சுருக்கி அவனைப் பார்த்த வார்டன், "அட ஏம்பா, புத்தி கித்தி இருக்கா உனக்கு...? படிச்சு என்னத்த கிழிச்சுடப் போற...? படிச்சவன் எல்லாம் மூட்டை தூக்கறான்... உனக்கு மட்டும் கவர்னர் உத்தியோகம் வந்து குதிக்கப் போவுதாக்கும்... ம், கடைசியில கத்திரிக்கா தோட்டத்துக்கு தண்ணி ஊத்தறதுதான் மிச்சமாகப் போவுது. சரி சரி, இந்தா இதுலெல்லாம் கையெழுத்துப் போடு" என்று இரண்டு மூன்று அச்சிட்ட படிவங்களை அவனிடம் தந்தார்.


கருத்தமுத்துவும், சடையனும் தங்களிடம் தரப்பட்ட ஒப்புதல் பத்திரங்களைப் படிக்கத் தெரியாமல் விழிப்பதைக் கவனித்த வார்டன், "வெரிகுட், சாட்சிக்கு பெரியவங்களைக் கூட்டிட்டு வான்னு சொன்னா சரியான கைநாட்டு ஆசாமிங்களை இழுத்துட்டு வந்திருக்கியே! உங்க ஊர்ல படிச்சவன் ஒருத்தன் கூட இல்லியா?" என்றார் கேலி ததும்பும் குரலில்.

வார்டனின் பொறுப்பற்ற பேச்சு உதயனின் மனத்தில்

"வருஷா வருஷம் தீபாவளிக்கு வர உங்க சித்தப்பா பையன் இந்த வருஷம் ஏன் வரல?"

"போன வருஷ தீபாவளி ஸ்பெஷலா எங்கம்மா அவனுக்கு லட்டு கொடுத்தாங்க. இந்தத் தடவையும் கொடுத்துடுவாங்கன்னு பயமாம்!"

— ச. சிவக்குமார்



சோர்வையும் அதே நேரம் எரிச்சலையும் தோற்றுவித்தது. அவன் அவரைப் பார்த்து, "கொஞ்ச முன்னாலத்தான் படிக்கிறதால ஒரு பயனும் இல்லேன்னு சொன்னீங்க... இப்ப படிக்காத இந்த ஜனங்களைப் பார்த்து இளக்காரமா பேசறீங்க... எனக்கு ஒண்ணும் புரியலீங்க.... எங்க குப்பத்துல படிச்சவங்க யாரும் கிடையாது. பெரியவங்கன்னா வயசுல மூத்தவங்கன்னுதான் எனக்குத் தெரியும்... படிச்சவங்கன்னு தெரியாது" என்றான்.

வைரவநாதன் புருவத்தை உயர்த்தி அவனைப் பார்த்தார். அவர் முகத்தில் கோபமும், வெறுப்பும் தோன்றியது. அடிக்குரலில், "சுத்த வாயாடிப் பயலா இருப்பே போலிருக்கே! இந்தத் திமிர் எல்லாம் காட்டினேன்னா இங்க காலம் தள்ள முடியாது தெரிஞ்சுக்க" என்றார் கடுகடுப்புடன்.

கருத்தமுத்து அவசரமாக, "ஐயையோ, அப்படி எல்லாம் சொல்லாதீங்க... இது ரொம்பத் தங்கமான பிள்ளை. போகப் போக உங்களுக்கே தெரியும்" என்ற போது எங்கே ஏதாவது குழப்பமாகி விடப்போகிறதோ என்ற கவலை அவர் குரலில் இருந்தது.

உள்ளே நடக்கும் உரையாடலை வெளியே நின்று கொண்டிருந்த பணியாளர் உன்னிப்பாகக் கவனிப்பதைப் பார்த்த வார்டன், "சரி, சரி. இந்த காகிதத்துல எல்லாம் விரல் ரேகையை வச்சுட்டுப் போங்க... உனக்கு பனிரெண்டாம் எண் அறை... போ, போ, அதுல போய் முடங்கிக்க" என்றார்.

கருத்துமுத்துவும், சடையனும் அவர் காட்டிய இடங்களில் தங்கள் பெருவிரல் ரேகையைப் பதித்து விட்டு உதயனோடு வெளியே வந்தனர்.

இருவரும் அவனிடம் விடை பெற்றுக் கிளம்பிய போது உதயனின் உதடுகள் துடித்தன. "மூப்பா, என்னை மறந்துட மாட்டியே"? என்று அழுகையுடன் கேட்டான்.

உதயன் அழுவதைப் பார்த்ததும் இருவரின் கண்களும் கலங்கின. சடையன் அவனைத் தேற்று முகமாக, "அதெப்படி மறந்துருவோம்...? நான்தான் அடிக்கடி இங்கிட்டு மீன் விக்க வருவேனில்ல? வந்து பார்க்காமலா போயிவேன்? நீ கவலைப்



படாம நல்லா படி" என்றார்.

கருத்தமுத்து வாஞ்சையுடன் அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "நீயும் வந்து போயி இருப்பா... எங்க இருந்தாலும் பிறந்த இடத்தை மறந்துட முடியுமா? நீ ஆசைப் பட்டது போல, ஒருநாள் படிச்சு பெரிய ஆளா வரணும். அப்பத்தான் எங்களுக்கும் பெருமை" என்று வாழ்த்தினார்.

பின் இருவரும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினர். முள் கம்பி வேலியைத் தாண்டி அவர்கள் போவதுவரை பார்த்துக் கொண்டே இருந்த உதயன் "தம்பி, அறைக்குப் போகலாம் வரயா?" என்ற அருமை நாயகத்தின் குரலைக் கேட்டு சுயநிலையடைந்தான். தன் பின்னால் வருமாறு சைகை காட்டி விட்டு அவர் முன்னே நடக்க, தனது தகரப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு பின் தொடர்ந்தான் அவன்.

பச்சைப் பசேலென்று காய்கறித் தோட்டங்களும் வாழைத் தோட்டங்களும் நாற்புறமும் பரவியிருக்க, விடுதிக் கட்டடங்கள் சற்றுத் தொலைவில் தென்பட்டன.

முதலில் இருந்த கட்டடத்தில் பனிரெண்டாம் அறையின் முன் வந்து நின்ற அருமைநாயகம் கதவைத் தட்டினார்.

கதவைத் திறந்து கொண்டு, உதயனின் வயதையொத்த சிறுவன் ஒருவன் வெளியே தலை காட்டி எட்டிப் பார்த்தான். வியப்புடன் அவனைப் பார்த்த அந்தச் சிறுவனின் முகத்தில் மெல்லிய புன்னகையொன்று தோன்றியது.

அருமைநாயகம் அவனிடம், "தம்பி, இவன் புதுசா இன்னைக்கு வந்து சேர்ந்திருக்கான். பேரு உதயன். இந்த அறையிலத்தான் இவனையும் போட்டிருக்கு" என்று சொல்லிவிட்டு, உதயனிடம் திரும்பி, "இதுதான் உன்னோட அறை...



நல்லா நடந்து அம்மாகிட்ட நல்ல பேர் வாங்கணும் என்ன?" என்று அவனைத் தட்டிக் கொடுத்துவிட்டு நகர்ந்தார்.

உதயன் தன்னெதிரே நின்ற சிறுவனைப் பார்த்தான். மெலிந்த உடம்பும், நல்ல சிவந்த நிறமும், பக்கவாட்டில் வகிடெடுத்த தலை முடியும் அவனுக்கு ஒரு தனிக் கவர்ச்சியை அளித்தன. இவனைப் பார்த்து நட்புடன் முறுவலித்த அந்தச் சிறுவன், "உள்ளே வா, என் பேர் மனோகரன்" என்றவாறு அவன் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டான்.

அறைக்குள் நுழைந்த உதயன் பார்வையைச் சுற்றிலும் ஓடவிட்டான். அவனுக்கு திடீரென்று சிறைச்சாலைக்குள் வந்து விட்ட உணர்வு தோன்றியது. அவன் எச்சிலை மென்று விழுங்கியவாறு, தன்னையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த மனோகரனைப் பார்த்து, "நீ எவ்வளவு காலமா இங்க இருக்கே"? என்று கேட்டான்.

கேட்ட தோரணையிலேயே அவன் உள் நோக்கத்தைப் புரிந்து கொண்ட மனோகரன், "ஒன்பது வருஷமா நான் இங்கேதான் இருக்கேன்... இதுதான் என் வீடு. மார்கரெட் அம்மா தான் எனக்குத் தாய்.. இந்த நாலு சுவர்களும், என் பள்ளிக்கூட புத்தகங்களுந்தான் எனக்கு நண்பர்கள்" என்று சிரித்தான்.

"நீ சொல்றதைப் பார்த்தா, இங்க கட்டுப்பாடு எல்லாம் ரொம்பக் கடுமையா இருக்கும் போல இருக்கே?"

அப்பாவியாகக் கேட்ட உதயனைப் பார்த்து, 'கலகல' வென்று சிரித்தான் மனோகரன். "கட்டுப்பாடுகள் இங்க நிறைய உண்டுதான். ஆனால், நீ நினைக்கறது போல கடுமையா இல்ல... மலை மேல நிக்கற ஒருத்தன் மனம் போன போக்கில குதிக்க முடியாது. அப்படிக் குதிச்சா அவன் உயிர்தான் போகும்... இதைக் கடுமையான கட்டுப்பாடுன்னு சொல்ல முடியுமா? சுதந்திரத்தை பறிச்சிட்டதா குறைபட முடியுமா...? அது போலத்தான் இங்கேயும் சில விதிமுறைகள் உண்டு. அதுக்கு கட்டுப்படுவது நமக்குத்தான் நன்மை. முதல்ல உனக்கு கொஞ்சம் சிரமமாத்தான் இருக்கும். போகப் போக சரியாப் போயிடும்" என்றான்.

உதயனின் முகத்தில் சற்று நிம்மதி தோன்றியது. "இப்படி ராப்பகலா இந்த அறைக்குள்ளேயே அடைஞ்சு கிடக்க நமக்குக் கஷ்டமா இருக்காதா? பொழுது எப்படிப் போகும்?" என்று கேட்டான்.

உதயனின் தோளை நட்புடன் பற்றிய மனோகரன், "உதயா, நம்முடைய மனசு முழுவதையும் படிக்கிறதுல செலுத்திட்டா, அப்புறம் நமக்குப் பொழுதே போதாது... சாயங்காலம் இங்க இருக்கிற அருமையான தோட்டத்துல சுதந்திரமா வேலை செய்யலாம். அப்படிப் பொறுப்போட நடந்துக்கற வங்களை அம்மாவுக்கு ரொம்பவும் பிடிக்கும். பெரிய படிப்பெல்லாம் கூடப் படிக்க வைப்பாங்க... மொத்தத்துல, இதை நம் முடைய வீடா நெனச்சுக்க... அப்புறம் இது போல சந்தேகமெல்லாம் மனசுல தோணவே தோணாது" என்றான்.

இதைக் கேட்டதும் உதயனின் மனத்தில் பெரும் மகிழ்ச்சி உண்டாயிற்று. எப்படியும் நன்றாகப் படித்து மார்கரெட் அம்மாவின் அன்புக்குப் பாத்திரமாக வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அந்த அறையில் மூன்று கட்டில்கள் போடப்பட்டிருப்பதைக் கவனித்த உதயன், "இங்க மூணு படுக்கைகள் இருக்கே?" என்று கண்களில் கேள்வியுடன் அவனைப் பார்த்தான்.

"நீ நினைக்கறது சரிதான்" என்று முறுவலித்த மனோகரன், "நமக்கு இன்னும் ஒரு நண்பன் இதே அறையில் இருக்கிறான். அவனைப் பார்க்க நீ ஆசைப்படறியா?"

என்று கேட்டான்.

உதயன் ஆவலுடன் தலையசைக்க, அவனை அறை ஜன்னலுக்கு அழைத்துச் சென்று, "அதோ.... பார், அந்த மரத்தடியிலே உட்கார்ந்து இருக்கானே காளிமுத்து, அவன்தான் அந்த நண்பன்'' என்று வெளியே சுட்டிக் காட்டினான்.

அவன் காட்டிய இடத்தில், ஒரு பெரிய மரத்தடியில் ஒரு சிறுவன் உட்கார்ந்திருந்தான். அவன் தலைமுடி ஒழுங்கற்று கலைந்து கிடந்தது. முகத்தில் வயதுக்கு மீறிய முதிர்ச்சி தெரிந்தது. அவனது உடைகள் அழுக்கடைந்து கசங்கிப் போயிருந்தன. அடி மரத்தில் சாய்ந்தவாறு ஆகாயத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தவனின் வலது கையில் பீடியொன்று புகைந்து கொண்டிருந்தது!

அவனது முரட்டுத் தோற்றமும் அலட்சியப் பார்வையும் உதயனின் மனதுக்குள் அச்சத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தின. மார்கரெட் அம்மையார் எப்படி இந்த ஒழுங்கற்றவனை இங்கு அனுமதிக்கிறார்கள் என்று அவன் திகைத்து நின்ற வேளையில், ''இந்த இல்லத்திலேயே அம்மாவோட அன்புக்குக் கட்டுப்படாத ஒரே ஆள், நம்முடைய இந்த நண்பன் தான்'' என்று மனோகரன் சொல்வது காதில் விழுந்து அவன் மனதை மேலும் குழப்பமடைய வைத்தது.

(தொடரும்)

மலை அருவி

மலை மேல் பெய்திடும் மழையே
மழைதான் அருவியின் வடிவே
மலைமேல் மழைத்துளி உருள
வருவது குளிர்ந்தநல் அருவி

குற்றா லத்தில் அருவி
கொட்டுது கொட்டுது அருவி
குற்றா லத்தின் பெருமை
கொட்டிடும் அருவியின் குளுமை

குரங்குகள் தாவிடும் அழகு
குறும்புகள் செய்வதும் அழகு
மரங்களின் நிழல்களும் அழகு
மரத்தினில் வெய்யிலும் அழகு

அருவியில் குளிப்பது குளுமை
அடடா எத்தனை இனிமை!
உருளுது புரளுது அருவி
உடலைத் தழுவது அருவி


மூலிகை ஆயிரம் மலைமேல்
மூலிகைச் சாற்றினைக் கலந்தே
ஓலமாய் உருளும் அருவி
உடல்நலம் தருவதும் அருவி

குற்றா லம்போய் இருப்போம்
கோடை வெய்யிலைத் தவிர்ப்போம்
குற்றா லத்தில் குளிப்போம்
குளித்தே வெம்மையை மறப்போம்.

— செல்லகணபதி



மயக்கம் தெளிய முகத்தில் தண்ணீர் அடிப்பது ஏன்?



● கே. இராஜேஷ்குமார், ஆனந்தபுரம்.

? பித்த வாந்தியைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?

! நேரத்தோடு உணவு சாப்பிட வேண்டும்; காரம், மசாலா நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். எண்ணெய்ப் பலகாரங்கள் ஆகாது, புகை, மது வேண்டாம். அசைவத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. டென்ஷன், கோபம் பதற்றம் வேண்டாம்.

● இராம. ஜெயகாந்தன், துத்திப்பட்டு.


? பயணத்தின் போது வரும் வாந்தியைத் தடுக்க 'அவோமின்' என்ற மாத்திரையைப் பயன்படுத்தி றோம். இந்த மாத்திரையை மற்ற நேரங்களில் சாதாரணமாக வரும் வாந்திக்குப் பயன்படுத்தலாமா?

! பயன்படுத்தலாம். ஆனால் இதில் சில பக்க விளைவுகள் உண்டு. சாதாரணமாக வரும் வாந்திக்கு 'டாம்பிரிடான்' (Domperidone) என்ற மாத்திரையை மருத்துவர் யோசனைப்படி சாப்பிடலாம். பலன் கிட்டும்; பக்கவிளைவுகள் கிடையாது.

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? மயக்கம் ஏற்பட்டவர்களுக்கும், மூர்ச்சையாகி விழுபவர்களுக்கும் முதலில் முகத்தில் தண்ணீர் அடிக்கிறார்களே, அது ஏன்?

! திடீரென்று இதயத்திலிருந்து ரத்த ஓட்டம் மூளைக்குச் செல்வது தடைபடுவதால்தான் மயக்கம்/மூர்ச்சை ஏற்படுகிறது. இது ஓர் அதிர்ச்சி நிலை! முள்ளை முள்ளால் எடுக்கிற மாதிரி இந்த அதிர்ச்சியைப் போக்க மற்றொரு அதிர்ச்சி தேவைப்படுகிறது. முகத்தில் தண்ணீரை வேகமாக அடிக்கும் போது ஏற்படுகின்ற அதிர்ச்சி, மயக்கத்தில் இருப்பவரின் ரத்த ஓட்ட அதிர்ச்சியைப் போக்கி, விழிப்படையச் செய்கிறது. ரத்த ஓட்டம் இப்போது சீரடைகிறது. மயக்கம் தெளிகிறது.



● வினோத பிரியன், கபிஸ்தலம்.

? சளி பிடிப்பதும், இருமுவதும் ஒரே வகையான நோய்தானே, டாக்டர்?

! இல்லை தம்பி. முதலில் 'சளி'யும் இருமலும் நோயின் அறிகுறிகள். நோய் (Disease) வேறு; நோயின் அறிகுறிகள் (Symptoms) வேறு என்பதை முதலில் நீ புரிந்து கொள்ள வேண்டும். சுவாசப்பாதையில் - அதாவது மூக்கு, தொண்டை, மூச்சுக் குழல், நுரையீரல்களில் ஏதாவது இடையூறு ஏற்பட்டால் அதன் அறிகுறியாக இருமல் வரும். அதே சுவாசப் பாதையில் பாக்டீரியா, வைரஸ், பூஞ்சைக் காளான் போன்ற கிருமிகள் பாதித்து பழுது ஏற்பட்டால் இயற்கையாகவே அங்கு சுரக்கின்ற திரவம் சளியாக மாறி வெளியேறும்.

கேட்கட்டுமா டாக்டர்?

● ஆர். ரவிவர்மன், கபிஸ்தலம்.

? என் தாயாரின் காலில் பித்த வெடிப்பு உள்ளது இதை குணமாக்குவது எப்படி?

! பித்தவெடிப்பு என்பது பூஞ்சைக்காளான் கிருமிகளால் ஏற்படுகின்ற ஒருவகைத் தோல் நோய். சிலருக்கு தோலில் ஏற்படுகின்ற நீர் வறட்சி காரணமாகவும் பித்த வெடிப்பு வரலாம். இதைக் குணப்படுத்த கால் பாதங்களை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். சிறிதளவுக்குப் பாதங்கள் ஈரப்பசையுடன் இருப்பது நல்லது. இதற்கு தினமும் காலையிலும் இரவிலும் உன் தாயாரின் பாதங்களை வெதுவெதுப்பான தண்ணீரில் 15 நிமிடங்களுக்கு மூழ்கி வைத்திருக்கக் கூறலாம். இதில் இரண்டு நன்மைகள் கிடைக்கும். ஒன்று கால்கள் சுத்தமாகும். மற்றொன்று, தோல் வறட்சி நீங்கும். பின்பு கால்களைத் துடைத்து விட்டு, மருத்துவர் ஆலோசனைப்படி பூஞ்சைக்காளான் எதிர்ப்பு மருந்து (Anti-fungul Cream) ஒன்றைப் பித்த வெடிப்புகளில் சுமார் ஒரு மாத காலத்திற்குத் தொடர்ந்து தடவி வந்தால், பித்தவெடிப்புகள் முழுவதுமாகக் குணமாகும்.

● ஜெ. ஜம்மு, செம்பனார்கோயில்.

? என் தோழியின் தம்பிக்கு மூக்கில் சதை வளர்ந்துள்ளது. இதை ஆபரேஷன் மூலம் எளிதில் அகற்றி விடலாமா, டாக்டர்?

! அகற்றி விடலாம்!



● ந. ஸ்ரீதர், தியாகராயபுரம்.

? நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு தலைமுடி கொட்டுமா?

! வாய்ப்புண்டு.

● சீர்காழி வி. கௌரி.

? முறிந்த எலும்புகள் ஒன்றாகச் சேர வாய்ப்பு உள்ளதா?

! முறிந்த எலும்புகளை மறுபடியும் ஒன்று சேர்த்து பழைய நிலைக்குக் கொண்டு வந்தால், ஒன்று சேர்ந்து விடும். எலும்பு முறிந்தவர்கள் முறிவு ஏற்பட்ட இடத்தில் பெரிய கட்டு போட்டுக் கொண்டு நடமாடுவதை நீ பார்த்ததில்லையா, கௌரி? அந்தக் கட்டு, முறிந்த எலும்புகளை ஒன்று சேர்க்கத்தான்!

● ஜி. ஜெகநாதன், மேத்துக்கும்மல்.

? எங்கள் ஊரில் யாருக்காவது அடிபட்டால் ரத்தம் வழிவதைத் தடுக்க, தீக்குச்சி உரசும் மருந்து பேப்பரை அடிபட்ட இடத்தில் வைக்கிறார்கள். இது சரியா? தவறா?


! தவறு! தவறு! தவறு!! தீக்குச்சிப் பெட்டியின் மருந்து பேப்பரில் உள்ள ரசாயனப் பொருள்கள், அடிபட்ட இடத்தைச் சிதைத்து, புண்ணை அதிகப்படுத்தி விடலாம். ஆபத்தை விலைக்கு வாங்கலாமா? வேண்டாமே!




டாக்டர் கு. கணேசன்




1



2




3





4



5









என்ன ஒற்றுமை?

போட்டி


இங்கே மொத்தம் பன்னிரண்டு படங்கள் இருக்கின்றன. இவைகளைக் கூர்ந்து பாருங்கள். இவைகளின் பெயர் என்னவாக இருக்கும் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். எல்லாம்



6



7



8



9




10



11

[redacted]
இவைகளைத் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டே வாருங்கள். இவைகளுக்குள் இரண்டு ஒற்றுமை இருக்கிறது. இவை என்ன என்பதையும் பன்னிரண்டு படங்களில் உள்ளவை களையும் ஒரு இன்லேண்ட் கடிதத்தில் (Inland Letter) எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள்.

அயல் நாட்டில் உள்ளவர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். முடிவு தேதி 30.11.96. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் பொறுப் பாகாது. ஒன்றுக்கு மேற் பட்டவர்கள் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப் படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



12

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



வீட்டுத் தோட்டம்

வீட்டுத் தோட்டம் அமைத்திடுவோம்
விதைகளைத் தேர்ந்து எடுத்திடுவோம்!
ஆட்டுக்குட்டி நுழையாமல்
அடைத்து வேலி கட்டிடுவோம்!

வேலியில் முருங்கை வைத்திடுவோம்!
வெற்றிடம் கொத்தி உரமிடுவோம்!
மூலையில் பறங்கியும், பூசணியும்
மேட்டுத் தரையில் படரட்டுமே!

பெரிய பாத்தியில் முளைக்கீரை!
பக்கம் சிறிது கொத்துமல்லி!
வரிசையில் கத்தரி! கொத்தவரை!
வெண்டை! மிளகாய்! தக்காளி!

அவரை! பாகல்! புடலைக்கு
அவசியம் பந்தல் போட்டிடுவோம்!
கவலை இல்லை வீட்டுக்கு
காய்கறி நாளும் கிடைத்திடுமே!

- புலேந்திரன்

எட்டாம் வகுப்புப் படிக்கும் குமாருக்கு எதிர் வீட்டுத் தாத்தா ஏளனமாகத் தெரிந்தார். அவரது வயதான தோற்றம், தள்ளாட்டம், நடுங்கும் கைகால்கள் இவனுக்குக் கேலியாக இருந்தது. தினமும் அந்தப் பெரியவரைக் கிண்டலடித்து வம்புக்கிழுக்கவில்லையென்றால் அவனுக்கு திருப்தி வராது.

பெரியவர் தூங்கிக் கொண்டிருந்தார். அலுத்து விட்ட அசாத்தியமான தூக்கம். தூங்கிக் கொண்டிருக்கும் இந்தக் கிழத்தை இன்று எந்த வகையில் தொல்லைப்படுத்துவது? என்ன புதிதாகக் குறும்பு செய்து கிழவரைப் பதைபதைக்கச் செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான் குமார்.

யோசித்துக் கொண்டிருந்தவனின் கண்ணில் குட்டித் தேள் ஒன்று தென்பட்டது. புதையல் கிடைத்த மகிழ்ச்சி அவனுக்கு. தன் விரலில் கொட்டி விடாமல் இலாவகமாக அந்தத் தேளைப் பிடித்தான். பெரியவர் போர்த்தியிருந்த போர்வை மேல் விட்டு விட்டு ஏதும் அறியாதவன் போல இருந்தான்.

தேள் பெரியவரைப் பதம்பார்த்தது. பெரியவருக்கு இரத்தம் சுண்டிய, தோல் சுருங்கின உடம்பு. ஆதலால் தேள் கொட்டிய வலியைத் தாங்க முடியாமல் துடிதுடித்தார். இதைப் பார்த்துக் கொஞ்சம் கூட மனம் பதறாமல் குமார் ரசித்தான்.


விஷம்

பெரியவருக்கு நாட்டு வைத்தியம் தெரியும். அந்தப் பொல்லாத வலிக்கு இடையே, வலியைப் பொறுத்துக் கொண்டு தனக்கு உதவும் ஒருவரை அழைத்து பச்சிலை மூலிகையைப் பறித்து வரச் சொன்னார். மூலிகையை நன்றாக மென்று தின்றார்.

விஷமும் கடுப்பும் இறங்கியது. வலி குறைந்தது. பிறகு குமார் எதிர்பார்த்தபடி அவர் மணிக்கணக்கில் துடிக்கவில்லை. குமாருக்கு இது ஏமாற்றம்தான்! நன்றாகத் தூங்கினார். இவருக்கு பிரச்சனை ஒன்றுமில்லை.

இரண்டு நாட்களுக்குப் பிறகு...

குளிப்பதற்காகக் குமார் ஏரிக்குச் செல்வது வழக்கம்... அன்றும் அப்படித்தான்.



இறங்கியது!


குளித்தபிறகு துடைத்துக் கொள்ள அவன் கொண்டு சென்ற துண்டை மரக்கிளையில் மாட்டினான். மரத்தில் இருந்த ஒரு குட்டித் தேள் துண்டுக்குள் புகுந்து கொண்டது. தேள் சும்மா இருக்குமா? குளித்து விட்டுத் துடைத்துக் கொள்ள குமார் துண்டை உதறியதும் அவன் மேல் விழுந்து, பல இடங்களில் கொட்டி விட்டது. குளிக்க வந்திருந்த சிலர், குமாரின் அலறல் கேட்டு அவனைத் தூக்கிப் போட்டுக் கொண்டு பெரியவரிடம் ஓடி வந்தனர். அவன் வந்தபோது பாதி மயங்கி நிலைதப்பிய நிலை!

பெரியவர் பச்சிலை மூலிகையைக் கொண்டு வந்து குமாருக்குக் கொடுத்து, "வாயில் போட்டு மெல்லுப்பா! பயப்படாதே! உனக்கு ஒண்ணும் ஆகாது... ஆண்டவனை வேண்டிக்கோ" என்று தைரியமூட்டினார் சிரித்துக் கொண்டே.

அரைமணி நேரத்தில் குமாரின் உடம்பில் பரவியிருந்த கடுப்பும் வலியும் ஓடியே போனது!

அதுவரை குறும்பு செய்ய ஏற்ற களமாக; ஏளனத்திற்கு உரியவராகத் தோன்றிய கிழவர் இப்பொழுது குமாரின் கண்களுக்கு உயிர்காக்கவல்ல தெய்வமாகத் தோன்றினார்! அவன் விஷம் மட்டுமா இறங்கியிருந்தது! அவனுடைய திமிரும் அகந்தையும் கூடத்தான். அவன் கையெடுத்துக் கும்பிட்டான் பெரியவரை!

- எம்.சி. பாலு



கை நிறைய மத்தாப்பு; முகம் நிறைய புன்சிரிப்பு!


நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் கொண்டாடும் பண்டிகை தீபாவளி. தென் மாநிலங்களில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, புத்தாடை அணிந்து, பட்டாஸ் மத்தாப்புக் கொளுத்தி விடியற்காலையில் கொண்டாடுகிறோம். வடமாநிலங்களில் தீப்வரிசை வைத்து, புத்தாடை அணிந்து இரவில் கொண்டாடுகிறார்கள். குஜராத்தி ராஜஸ்தான் மக்களுக்கு தீபாவளி புத்தாண்டு தினம். வணிக நிறுவனங்களில் புதுக்கணக்கு எழுதுவார்கள்.

தீபாவளி பிறந்த புராணக் கதை எல்லோருக்கும் தெரியும். மக்களைக் கொடுமைப்படுத்திய நரகாசுரன், கிருஷ்ணனான திருமாலால் அழித்து ஆட்கொள்ளப்பட்ட திருநாள்தான் இது. நரகாசுரன் சாதாரண அசுரன் அல்ல. மிகவும் சக்தி வாய்ந்தவன். பிராக்ஜோதிஷம் என்ற மாநகரின் அரசன். அவனது வலிமையைக் கண்டு தேவர்கள் கூட அஞ்சினர். தவமும், சில்மும் நிறைந்த அவன், துதிபாடும் கூட்டத்தினரால், ஆணவம் தலைக்கேற தனக்கு நிகர் யாருமில்லை என்ற தலைக்கனத்தால், மூவுலகையும் அடிமைப்படுத்த முயன்று துன்புறுத்துகிறான். சாதாரண மக்களால் வெல்ல முடியாத வரம் பெற்ற அவனைத் திருமாலே கிருஷ்ணாவதாரம் எடுத்து அழிக்கும்படி ஆயிற்று.



தலைக்கனம் என்ற ஆணவம் வந்துவிட்டால் அழிவு நிச்சயம் என்பதையே நரகாசுரன் கதை நமக்கு உணர்த்துகிறது. அந்தத் தலைக்கனம் என்ற ஆணவம் நமக்கு வராமல் இருக்க வேண்டும். நமது தீய எண்ணங்களான இருளுக்கு விடை கொடுத்து சகோதரத்துவம் என்ற அன்பு ஒளி எங்கும் பரவி உலக மக்களெல்லாம் அமைதியுடன் வாழ அருளும்படி இந்த நன்நாளில் இறைவனை வேண்டுவோம்.

மத்தாப்பு விடுபவர்கள் :
எ. மேமார்த்தி, கே. பாலாஜி,
அட்டையில் : **ஸ்ரீதர், நிமிதா**
வண்ணப்படங்கள் : **ஸ்ரீஹரி**



பிறப்புரிமை!

அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு காய்கறி வாங்கி வர பாளையம் காய்கறி மார்க்கெட்டிற்குப் போனேன். நாங்கள் மாதவனுடைய கடையில்தான் வாழக்கமாகக் காய்கறி வாங்குவோம். சில நாட்களில் அம்மாவுடன் போவேன். சில நாட்களில் அப்பாவுடன் போவேன்.

காய்கறி வாங்கப் போகும் போது எனக்குத் தவறாமல் ஒரு திருநெல்வேலிப் பூவன் பழம் கிடைக்கும். திருநெல்வேலிப் பூவன் சுண்டு விரலைப் போலச் சிறிதாக இருந்தாலும் விலையும் அதிகம்; சுவையும் அதிகம்.

காய்கறி வாங்கிக் கொண்டு கடையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டு இருந்தோம். வரும் போது தெற்குத் தெரு ரேணுகா மாரியம்மன் கோயிலைக் கடந்து நகராட்சி பேருந்து நிலையத்திற்கு முன்பாக நடந்து கொண்டு இருந்தோம்.

வழியெங்கும் நடைபாதையை அடைத்துக் கொண்டு தெருவோரக் கடைக்காரர்கள் கடை விரித்து இருந்தார்கள். ஒரு பக்கம் பனியன் கடை. அதற்குப் பக்கத்தில் மாம்பழ வண்டி, அதற்குப் பக்கத்தில் கொய்யாப் பழ வண்டி, அதற்குக் கொஞ்சம் சேர்ந்தாற் போல மல்லிகைப் பூ கூடைக்காரப்பாட்டி பூ விற்றுக் கொண்டு இருந்தார்.

மல்லிகைப்பூ விற்றுக் கொண்டு இருந்த பாட்டிக்கு அருகில் சில கூடைகள் வட்ட வட்டமாகத் தெரிந்தன. காச் மூச் என்று பறவைகளின் இனிய சத்தம். பார்த்தேன்; ஒருவர் சிறிய சிறிய பலவிதமான பறவைகளைக் கூடைகளில் வைத்துக் கொண்டு இருந்தார். எனக்குப் புரிந்து விட்டது, இந்தப் பறவைகளும் விற்பனைக்குத்தான் என்று.

பறவைகளின் காச் மூச் சத்தல் கேட்பதற்கு இனிமையாக இருந்தது. இப்படித்தான் எங்கள் வீட்டில் ஓர் ஓரம் கொஞ்சம் நாட்களுக்கு முன்பு குருவிகள் முட்டையிட்டு குஞ்சு பொரித்து வளர்ந்து சத்தம் போட்டுக் கொண்டு இருந்ததைக் கேட்டு இருக்கிறேன்.

கூடைகளுக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டு பார்த்தேன். அழகிய குஞ்சுகள். இன்னும் நன்றாக வளரவில்லை. கூடைக்காரர் அந்தக் குஞ்சுகளுக்கு நெல்லைத் தூவிக் கொண்டு இருந்தார். நெல்லைத் தின்பதற்கு போட்டி போட்டுக் கொண்டு குஞ்சுகள் ஒன்றை ஒன்று முட்டி மோதிக் கொண்டு இருந்தன. பார்க்கவே அழகாக இருந்தது.

வாங்கிக் கொண்டு போய் வளர்க்க வேண்டும் போல் ஆசையாக இருந்தது.

அழகனார்

அப்பா புரிந்து கொண்டு விட்டார். கருப்பும் சிவப்பும் கலந்த, துள்ளித் துள்ளிக் குதித்துக் காச் மூச் என்று சத்தம் இட்ட இளம் குருவிகள் இரண்டை விலை பேசி முடித்தார். பறவை விற்றவரே கம்பியால் செய்த கூண்டுகளும் வைத்து இருந்தார். அவரிடமே ஒரு கூண்டும் வாங்கி அந்தக் கூண்டில், வாங்கிய இரண்டு குருவிகளை வைத்து வீட்டிற்கு எடுத்து வந்தோம்.

காய்கறி வாங்கப் போன நாங்கள் காய் கறியோடு, கூண்டுடன் குருவிகளையும் கொண்டு வருவதைப் பார்த்த அம்மாவுக்கு ஒரே திகைப்பு!

ஆசையுடன் கூண்டை வாங்கிக் கொண்ட அம்மாவின் முகம் மலர்ந்தது. நான் விரும்பியதை வாங்கித் தருவதற்குத் தடை ஏதும் சொல்லாத அருமை அம்மா; தங்கமான அப்பா!

வாய் அகன்ற ஒரு கிண்ணத்தில் அம்மாவே உள்ளே ஓடிப் போய் தண்ணீர் கொண்டு வந்தார். கொஞ்சம் நெல்லும் கொண்டு வந்தார். நெல்லை கூண்டுக்குள் இருந்த ஒரு சிறு தட்டுப் போல் இருந்த அமைப்பிற்குள் தூவி விட்டார்.

கூண்டை எடுத்துக் கொண்டு போய் கூடத்தில் ஓர் ஓரத்தில் வைத்து குருவிகளின் விளையாட்டைக் கவனிக்கத் தொடங்கினேன்.

நேரம் போவதே தெரியவில்லை. நேரம் தவறாமல் தானியங்களும் தண்ணீரும் கொடுத்தேன்.

ஒரு வாரம் சென்று இருக்கும். முன்போல் குருவிகள் காச் மூச் என்று துள்ளிக் குதிக்காமல் கத்தாமல் ஒரு மூலையில் ஓய்ந்து போய் உட்கார்ந்து இருந்தன.

நான் கைகளைத் தட்டித் தட்டி உற்சாகம் ஊட்டினேன். இருந்தும் குருவிகள் முன்போல உற்சாகம் இல்லாமல் சோர்வாக இருப்பதை அம்மாவிடமும் சொன்னேன். 'புதிய இடமில்லையா? கொஞ்ச நாளில் சரியாகி விடும்' என்றார்கள்.



எனக்கு வருத்தமாக இருந்தது.

மேலும் ஒரு வாரம் சென்றது. உற்சாகம் குறைந்த குருவிகள் பழையபடி உற்சாகம் பெறவே இல்லை.

நான் தவியாய்த் தவித்துப் போனேன். வாங்கி வந்த போது இருந்த ஆட்டமும் ஓட்டமும் இவைகளுக்கு எங்கே போயிற்று என்று கவலைப்பட்டேன். என் வருத்தத்தைக் கண்டு அப்பாவும் அம்மாவும் கூட என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார்கள்.

உங்களுக்குச் சங்கர் மாமாவைத் தெரியுமா? அவருக்கு அப்பாவின் வயதிற்கு மேல் இருக்கும். எங்கள் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர்.

குருவிகள் வாங்கி வந்ததைப் பற்றியும் அந்தக் குருவிகன் இப்போது பழையபடி உற்சாகமாக இல்லாமல் சோர்வாக இருப்பதைப் பற்றியும் அவரிடம் சொன்னேன்.

நான் சொன்னதை ஆர்வமுடன் கேட்ட சங்கர் மாமா, என்னைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு "அப்படியா!" என்று சொல்லி நிறுத்தினார்.

மாமா இதற்கு ஒரு நல்ல வழி சொல்லுவார் என்று ஆர்வமுடன் அவர் முகத்

தைப் பார்த்தேன்.

"சாந்தி! இந்தக் குருவிகளுக்கும் அப்பா அம்மா இருக்க வேண்டும் அல்லவா? இந்தக் குருவிகளின் அப்பாவும் அம்மாவும் இரை ஊட்டுபவதைப் போல நம்மால் இரை ஊட்ட முடியாது அல்லவா? இரை ஊட்டுவதுடன் பற்றும் பாசமும் காட்ட வேண்டும் அல்லவா? அத்துடன் நாம் இந்தக் குருவிகளைக் கூண்டுக்குள் வைத்து அடைத்து வைத்து இருக்கிறோம் அல்லவா? குருவிகளால் சுதந்திரமாகப் பறந்து போய் வர முடியாது இல்லையா? அதனால்தான் இந்தக் குருவிகள் உற்சாகம் இல்லாமல் இருக்கின்றன என்று நினைக்கிறேன்" என்றார்.

நிறுத்தி நிறுத்தி எனக்குப் புரியுமோ புரியாதோ என்ற சந்தேகத்துடன் மாமா சொன்னது எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் புரிந்தது.



என்ன செய்வது என்று தெரியாமல் சங்கர் மாமா முகத்தை பார்த்தேன்.

"இங்கு நிறைய மரமும் இருக்கிறது. பூச் செடிகளும் உள்ளன. இந்தக் குருவிகளைக் கூண்டில் இருந்து திறந்து விட்டால் எங்கும் போகப் போவது இல்லை. இங்கு தான் சுதந்திரமாகப் பறந்து மகிழ்ச்சியோடு திரியும். நீயும் துள்ளிக் குதித்து இந்தக் குருவிகளைக் கண்டு மகிழ்ச்சி அடையலாம்" என்றார்.

"கூண்டைத் திறந்து விட வேண்டுமா" என்று கவலையுடன் பார்த்தேன் மாமாவை.


"எப்படி நாம் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ அது போல்தான் பறவைகளும் விலங்குகளும் சுதந்திரமாகவே இருக்க விரும்புகின்றன. அதனால்தான் காட்டில் வாழும் விலங்குகளைப் போல் மிருகக்காட்சி சாலைகளில் உள்ள விலங்குகள் மகிழ்ச்சியுடன் இருப்பதில்லை. நம்மைப் போல் சிறைகளில் உள்ள மனிதர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? சுதந்தரம் என்பது எல்லா உயிர் இனங்களுக்கும் உள்ள பிறப்புரிமை. மூச்சைப் போல அதுவும் எல்லா உயிரினங்களுக்கும் தேவையான ஒன்று. சுதந்தரம் இல்லை என்றால் மகிழ்ச்சி இருக்காது. அடிமையாய் இருப்பது என்பது ஒரு சாபக்கேடு. அத னால்தான் சுதந்தரம் சுதந்தரம் என்று உலகின் சில பகுதிகளில் இன்றும் உரிமைக் குரல் கேட்கிறது...."


மாமா பேச்சைக் கொஞ்சம் நிறுத்தினார். அவர் சொல்ல வந்ததை நான் கொஞ்சம் புரிந்து கொண்டேன்.

ஓடிப் போய்க் கூண்டை எடுத்து வந்தேன். ஆசையுடன் பார்த்தபடி கூண்டைத் திறந்து விட்டேன்.

குருவிகள் இரண்டும் வெளியில் வந்து பறந்து சென்று வாசலில் இருந்த கொடிக் கம்பியில் உட்கார்ந்து இருந்து கொண்டு கீச் கீச் என்றன! அதே பழைய உற்சாகக் குரல்!

என் முகமும் மலர்ந்தது.


எந்தப்
பாதையில்
100 கி.மீ
தொலைவு
போகலாம்?
1
2
3
60
60
60
12
20
9
17
8
11
6
10
7
2
13
விடை: 2.



பாதை காட்டு போதும்

இது அய்யனார் கோவில் அடிவாரம்தானா? மேற்குத் தொடர் மலையின் வனங்கள்தானா?

இடம் மாறிவந்து விட்டோமோ! என்று கூட அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. எங்கு பார்த்தாலும் இலைகளே இல்லாமல் காய்ந்து போன கிளைகள். அதிலும் பாதி பேய்க் காற்றுக்கு ஒடிந்து போய் மூளியாய் மொட்டையாய் நிற்கும் மரங்கள்!

முன்பெல்லாம் பாதையோர இருபுறமும் தேக்கங்காடுகள் இருக்கும். உள்ளே யானை இருந்தாலும் தெரியாது. இப்போதோ இலைகளே இல்லாத குச்சிக் காடுகளாய் தூரத்தில் ஓடும் முயல் கூடத் தெரிந்து விடுமே!

ஒரு வருடத்திற்கும் மேலாக மழையே இல்லாமல் காய்ந்து போயிருந்த சமயத்தில் போன வாரம் அடித்த புயல்காற்றில் பாதிக்கும் மேலான மரங்கள் ஒடிந்து விழுந்து அடர்வனமே பாலைவனம் போலக் காட்சியளிக்கிறதே!

அவர்களுக்கு அதிசயமாகவே இருந்தது.

பத்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஊரிலிருந்து வந்த பள்ளி மாணவர்கள் அவர்கள்.

விடுமுறை நாட்களில், 'திடீரென்று மலையில் மழை பெய்து காட்டாற்றில் வெள்ளம் வருகிறது' என்று ஊரில் பலர் பேசிக் கொள்ளவே மோகன் தன் நண்பர்களை அழைத்துக் கொண்டு தான் வளர்க்கும் செல்ல நாயையும் கூட்டிக் கொண்டு வந்து பார்த்தால், இடம் மாறி வந்து விட்டதைப் போன்ற சூழல்.

"அடடா! எப்படி இருந்த காடுகள் இப்படியாகி விட்டதே!"– மோகன் இப்படிச் சொன்னதும் மணி உடனே,

"ஆமாமா! போன வார பெருங்காத்துல தோப்புகள்ள இருந்த தென்னை மரங்கள்ள மட்டைகளும் காய்களும் எல்லாம் விழுந்து அஞ்சி ரூபா வித்த இளநீர் ஐம்பது காசுக்கு வித்தாகளே. தெரியாதா?"

"அது மட்டுமில்லே. மாங்காயெல்லாம் விழுந்து ஒரு ரூபாயிக்கு ஒரு பை மாங்கா வித் ததே! வர வருசசீசன்ல மாம் பழமே வராதாமே!"

அகிலன் வருத்தமுடன் கூறினான்.

"சரிப்பா. வந்த வேலையப் பாப்பம். மொத மொத நாயக் கூட்டிக்கிட்டு வேட்டைக்கு வந்திருக்கோம். இன்னிக்கு ஒரு முயலாச்சும் கொண்டு போயாகணும். இங்க நீலன்னு ஒரு

கொ. மா. கோதண்டம்

காட்டுவாசிப் பய இருப்பானே, அவனைக் கூப்புடலாம் வாங்க.'' என்ற மோகன் கோவில் பக்கம் உள்ள ஆதிவாசிகள் குடிசைப் பக்கம் நடந்தான், கூடவே மற்ற மாண வர்களும் சென்றார்கள்.

"நீலா ஏய் நீலா"- அவர்கள் சத்தம் போட்டு அழைத்தார்கள்.

பாறையில் ஏதோ காயவைத்துக் கொண்டிருந்த நீலன் ஓடி வந்தான்.

"கும்புடுதேன் சாமி. உங்களுக்கு என்ன வேணும் சாமி?"

குனிந்து கும்பிட்டவாறே நீலன் பணிவுடன் கேட்டான்.

''நீலா, புதுத்தண்ணி வருதுன்னு ஊர்ல சொன்னாங்க. அத னால வந்தோம். ஜீப் ரோட்டுல நிக்கி. நாயக் கூட கூட்டியாந்திருக் கோம். எதயாவது வேட் டையாடணும். முயலு கெடச்சாலும் கூடப் போதும். நீ கூட வந்து உதவி செய்யணும். உனக்கு ரூபா தந்திரு வோம்''- மோகன் இப்படிச் சொன்னான்.

"சாமி, நீங்க வந்தது சரிதான். ஆத்துல தண்ணி கலங்கலா வருது. வேக மாகவும் வருது. அதுனால நீங்க இன்னிக்கு குளிக்க முடியாது. மேல எங்கேயும் தண்ணி இல்லாம யானை களெல்லாம் கீழே எறங் கிடிச்சி. வெறகு எடுக் குறவங்க கூட வனத்துக் குள்ளே போக முடியல்லே. நேத்து ஒரு பொம்புளை யானே கொன்னே போட்டு டுச்சி. அதனால உள்ளே போகக்கூட முடியாதே சாமி?" என்றான் நீலன் பரி தாபமாக.

''யானை இல்லாத பக்கமா கூட்டிப் போப்பா."

"சாமி, வனத்துக்குள்ளே போயாச்சுன்னா, யானை வாடைக்கி நாய் குரைக்கும் சத்தம் கேட்டா கோபத்துல யானை ஓடியாந்திடும் ஆபத்துதான். வேண்டாஞ் சாமி."

''யானை வந்தா நாங்க பாத்துக்கிடு வோம். மொத நீ பாதயக் காட்டு."

''சாமி. ஆபத்தை விலைக்கி வாங் காதிங்க. சொல்றதக் கேளுங்க. வனத் துக்குள்ள மரம் செடி கொடிகள்ளாம்



எங்க அக்காத் தங்கச்சி மாதிரி. மிருகங்க எங்க அண்ணந்தம்பிக மாதிரி. நாங்க மரங்களை வெட்டவும் மாட்டோம். மிருகங்களை வேட்டையாடவும் மாட்டோம். இந்த விசயத்துல மத்தவங்களுக்கும் உதவி செய்யவும் மாட்டோம்."

"பாத்தேகளாடா இந்தக் காட்டுப் பய தத்துவம் பேசுறான்!"


"ஆமா இவருதா சுற்றுப்புறச் சூழல் தேசியத் தலைவரு."

"டேய் இவனை இப்படிக் கூப்புட்டா வரமாட்டான். ரெண்டு ஒதை குடுத்தாத்தான் வருவான் போல."

அவர்கள் ஆணவத்தோடு சப்தமிட்டார்கள்.

"சாமி, நீங்க எல்லாரும் வேட்டைக்கி போக வேண்டாமுன்னு நான் சொல்லல்லே. நான் கூட வர மாட்டேன்னுதான் சொல்லுதேன். நீங்க தாராளமாப் போகலாம்."

"ஏய், நமக்குதான் பாரஸ்ட் ஆபீஸர் பெர்மிசன் கிடைச்சிருக்கே. நாமே போகலாமே? சார், நீங்க உதவி ஒன்றும் செய்ய வேண்டாம். பாதை மட்டும் காட்டுங்க சார்."



அவர்களது கேலியைப் பொறுத்துக் கொண்ட நீலன், "சரி சாமி. மேற்கே கொஞ்சம் போனீகன்னா ஆறு வரும். கரை வழி போனா அருவி வரும். அதுல இருந்து தெக்காமெ போனா புல்மேடு இருக்கு. அங்கே ஏதாச்சும் சின்ன மிருகங்க வரும். யானைகளும் அங்க இல்லே. நீங்க அங்கே போகலாம்."

அவர்கள் நாயுடன் அருவிப் பக்கம் நடந்தனர். சிவந்த நிறத்துடனும் மரக் கிளைகளுடனும் தண்ணீர் 'ஹோ'வென்று விழுந்து ஆற்றில் கரையைத் தொட்டு ஓடிக் கொண்டிருந்தது.

கரையோரம் ஆதிவாசிச் சிறுவர்கள் சிலர் குளித்துக் கொண்டிருந்தனர்.

"டேய் நாமளும் குளிக்கலாம் வாங்கடா."

"யார்டா இவன்! புதுத்தண்ணி மண்ணா வருது. வேகமா வேற வருது. குதிச்சா நம்மள இழுத்துட்டுப் போயிடும். அந்தக் காட்டுப் பயலுக பக்கம். எடம் பார்த்துக் குளிப்பாங்க. அவங்களுக்கு ஒன்றும் செய்யாது. அவங்களைப் பார்த்து ஆசைப்பட்டு இதுல நாம குளிச்சோம், தலைவலி காய்ச்சல் வந்துடும்."

"சரிடா. ரெண்டு நா போனா தண்ணி தெளியும் வேகமும் குறையும். அப்ப வேணா வந்து குளிச்சிட்டுப் போவோம்



''ஒட்டகச் சிவிங்கி மேல தூசி விழுந்தா என்ன ஆகும்?''
''ஒட்டடை''ச் சிவிங்கி யாகும்!''
-பாளை பசும்பொன்

இப்ப நடங்க.''

அவர்கள் தெற்குப் பக்கம் திரும்பி நடந்தார்கள்.

பாதையெங்கும் யானை லத்திகள் கிடந்து நாற்றமடித்தன.

நாய் திமிறியவாறு குலைத்தது. சத்தம் செய்யாமல் வருமாறு நாயை அதட்டிய மோகன் சங்கிலியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். சிறிது தூரம் சென்றதும் புல் மேடு தெரிந்தது. யானை நடமாட்ட அறிகுறிகள் இல்லை.

கூட்டமாக மரங்களின் கீழ் ஏதோ பொறுக்கிக் கொண்டிருந்த குரங்குகள் இவர்களைக் கண்டதும் ஓடி மரங்களில் ஏறிக் கொண்டன. நாய் விடுவித்துக் கொண்டு ஓடியது. மோகன் பின்னால் ஓடினான். ஒரு பள்ளத்திலிருந்து காட்டுப் பன்றியின் குட்டி ஒன்று மேலே வந்தது. நாயைப் பார்த்ததும் 'கிர்ர்கிர்ர்' எனச் சத்தமிட்டவாறே வேகமாக ஓடியது. அதைப் பார்த்து நாயும் பின்னால் குரைத்தபடி ஓடியது.

பின்னாலேயே மாணவர்களும் ஓடினார்கள்.

இந்த ஆரவாரத்தில் குரங்குகள் கூக்குரலிட்டவாறே மரக்கிளைகளில் தாவி ஓடின. கத்திக் கொண்டு ஓடிய பன்றிக் குட்டி ஒரு திருப்பத்தில் பாய்ந்து ஓடியது. அங்கே ஒரு பன்றிக் கூட்டமே மேய்ந்து கொண்டிருந்தது.

குட்டியின் சத்தம் கேட்ட பெரிய பன்றிகள் திரும்பிப் பார்த்து, ஓடிவரும் நாயின் மீது பாயத் தாவின. நாய் மிரண்டு போய் நின்றபோது ஒரு பன்றி நாயின் முகத்தில் தாடையால் அடித்தது. நாயின் முன் வாய்ப்பக்கம் ஒரு பகுதி பிய்ந்து விட்டது. வீல் என்று கத்திக் கொண்டு நாய் திரும்பி ஓடியது.

நாயின் பின்னால் மாணவர்களும் திரும்பி ஓடத் தொடங்கினார்கள். பின்னால் பன்றிகள் துரத்திக் கொண்டு வந்தன.

அருவிப்பக்கம் வந்ததும் மாணவர்கள்,

''நீலா நீலா'' என்று அபயக்குரல் எழுப்பியவாறு ஓடி வந்தார்கள்.

குளித்துக் கொண்டிருந்த நீலன் எழுந்து பார்த்தான். உடனே தரையில் கிடந்த ஒரு கம்பை எடுத்துக் கொண்டு பன்றிகளை நோக்கிச் சுழற்றியவாறே ஓடினான். ஓடிவந்த பன்றிகள் நீலன் கம்பைச் சுழற்றி வருவதைப் பார்த்துத் திரும்பி ஓடி விட்டன.

மாணவர்களும் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியவாறே நின்றனர்.

நீலன் ஓடிச் சென்று ஒரு காட்டுச் செடியில் பச்சிலைகளைப் பறித்து வந்து பாறையில் கல்லால் தட்டி அதை வழித்து எடுத்து நாயைப் பிடித்து வாய் பிய்ந்த இடத்தில் சாறு விட்டு அவர்கள் தந்த கைக்குட்டையால் கட்டினான். நாய் வலியால் முனகியவாறே நீலன் அருகில் வந்து வாலை ஆட்டியது.

மோகன் அருகில் வந்து,

''நீலா எங்களை மன்னிச்சிருப்பா. நாங்க உன்னை ரொம்பவும் 'இன்சல்ட்' பண்ணிட்டோம். நீ இப்ப வரல்லேன்னா நாயும் செத்துருக்கும். எங்க கதியும் என்ன ஆகியிருக்குமோ! ரொம்ப நன்றி நீலா.''

''பரவாயில்லீங்க சாமி. நீங்க இனிமே அடுத்த உசுருகளை வேட்டையாடணுமுன்னு நெனைக்காதீங்க. அது போதும். இப்ப எல்லாரும் வாங்க. தண்ணி தாரேன் குடிச்சிட்டு கொஞ்சம் உட்கார்ந்துட்டு போங்க சாமி'' என்ற நீலன் குடிசைக்குள் சென்றான். அவர்கள் நீலனை அன்பொழுகப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தனர்.

திக்...திக்...திக்... கதைகள்
பயமின்றிப் படியுங்கள்!



பிடித்து இழுத்த பேய்!

தயா, வீட்டுத் திண்ணையில் அமர்ந்து என்னவோ கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான். கதை சுவையாக இருந்ததால் தன்னை மறந்து அதிலேயே மூழ்கி விட்டான்.

தயாவை விளையாட அழைத்துப் போக வந்த சங்கர், இரண்டு முறை அவன் அருகே வந்து கூப்பிட்டுப் பார்த்தான். கதையிலேயே மூழ்கிவிட்ட தயாவுக்கு அவன் அழைத்தது கேட்கவில்லை.

கையில் கொண்டு வந்திருந்த தென்னம் ஓலையை மெதுவாக தயாவின் முதுகுப் பக்கத்தில் இருந்து விட்டான் சங்கர். தயா திடுக்கிட்டு விழுந்து அடித்துக் கொண்டு எழுந்தான்.

"பயந்துட்டியா தயா?"

"இப்படி திடீர்னு எதிர்பார்க்காத சமயத்தில், பாம்பு மாதிரி ஓலையை விட்டால் யாருதான் பயப்பட மாட்டாங்க?"

"நான் பயப்படவே மாட்டேன்."

"நீ உண்மையாகவே பயப்படாதவன் என்றால் நான் சொல்வதைச் செய்ய வேண்டும்?"

"சொல்லுடா? எதை வேண்டுமானாலும் நான் செய்து காட்டறேன்?"

"நம்ம ஊர் எல்லையில் இருக்கும் பத்ரகாளியம்மன் கோவிலில், தெற்குப் பிரகாரத்தில் இருக்கும் சுவரில், ஓம்காளி சரணம்னு எழுதிட்டு வரணும்."

"பூ...! இதையா கேட்கறே! என்னவோ

சின்னபாபு



பெரிசா கேட்கப் போறேன்னு நினைச் சேன்! இன்னிக்கே எழுதிட்டு வரட்டுமா?

"இரு சங்கர். நான் இன்னும் முடிக்கலே. இதை வரும் அமாவாசை அன்னிக்கு சரியாக இரவு பன்னிரண்டு மணிக்கு எழுத வேண்டும். அமாவாசையன்று காலையில் அந்தச் சுவருக்கு நான் வெள்ளையடித்து வைப்பேன். அதுக்கு அப்புறம் தான் இரவில் போய் நீ எழுதலாம்."

"அப்போ இன்னும் ஒரு வாரம் பொறுத் திருக்கணுமா?"

"சங்கர். வேண்டாம். வீம்பு பண்ணாதே! நம்ம பத்ரகாளி கோயில், பிசாசுக் கதைகளுக்குப் பேர் போனது. போன அமாவாசையன்று கூட, ஒரு சூரப்புலி இப்படித்தான். ஐம்பதுக்காகப் பந்தயம் போட்டு அலறி அடித்துக் கொண்டு திரும்ப ஓடி வந்திருக்கான்."

"ஏன்? என்னவாச்சாம் அவனுக்கு?"

"தெற்குப் பிரகாரத் தில் ஒரு பெரிய புளிய மரம் இருக்கு தெரியுமா? அதுல உயரத் தில், கிளைகள் பிரியும் இடத்தில் ஒரு பொந்து இருக்கு. அந்தப் பொந்துல பிளாஸ்டிக் டப்பாவுல ஓர் ஐம்பது ரூபாய் நோட்டைப் போட்டு மூடி ஒளிச்சு வைச் சாங்க. சரியாக அமாவாசை இரவு பன்னிரண்டு மணிக்கு புளியமரத்தில் ஏறி, அந்தப் பொந்தில் உள்ள பிளாஸ்டிக் டப் பாவைக் கொண்டு வந்து விட வேண்டும் என்பதுதான் பந்தயம். பந்தயத்தை ஏத்துக் கிட்டவன்கிட்டே ஒரு சின்ன டார்ச்சை மட்டும் தந்தாங்க. அவன் போனான். மரத்துல ஏறினான். பொந்துக்குள்ளே கையை விட்டான். பிளாஸ்டிக் டப்பா தட்டுப் படலே. உடனே டார்ச் லைட்டை அடிச்சுப் பார்த்திருக்கான். அடுத்த வினாடி. 'ஐயோ'ன்னு ஒரு சத்தம்! மரக் கிளையிலேயே அப்படியே மயக்கமாகி விழுந்துட்டான்! நாலு பேர் ஏறிப் போய் அவனைத் தூக்கிக்கிட்டு இறங்கி எடுத்து வந்து மூர்ச்சை தெளிய வச்சாங்க!"

"மரத்துப் பொந்துல என்ன இருந்து தாம்?"

"ஒரு பேய் வாயைத் திறந்து காட்டித் தாம்!"

"இதெல்லாம் சுத்தப் புரளி. நம்ம ஊர்ல இருக்கும் பெரிய புளியமரங்கள்ல பத்ரகாளி கோவில் தெற்குப் பிரகாரப் புளியமரந்தான் மிகப் பெரியது. அதில் தான் ஏராளமா காய் காய்க்கும்.



புளியங்காயை எவனாவது திருடிட்டுப் போய்டுவானோன்னு கோவில் அறங் காவலர்களில் யாரோ ஒரு புத்திசாலி இந்த மாதிரி பிசாசுக் கதையைக் கட்டி விட்டிருக்கணும். இதையெல்லாம் நம்ப நான் தயாரா இல்லே.''

"நீ நம்ப வேண்டாம். நான் சொன்னதைச் செய். உண்மையாகவே நீ தைரியசாலிதான்னு நான் ஒப்புக்கறேன்.''

"வெறுமே ஒப்புக் கொண்டால் எனக்கு என்னவாச்சு? வேறு ஏதாவது எனக்குப் பயன்படும்படியாவோ, இல்லே நீ தோல்வியை ஒப்புக் கொண்ட மாதிரியோ அது இருக்கட்டும்?''

''சரி, நான் சொன்னபடி வரும் அமாவாசை இரவு, பத்ரகாளி கோவில் தெற்குப் பிரகாரச் சுவரில் "ஓம் காளி சரணம்னு'' நீ எழுதிட்டு வந்தால் இந்த ஆண்டு முழுவதும் நான் சினிமாவுக்குப் போவதில்லை. சரிதானா?'' என்று கேட்டுச் சிரித்தான் தயா.

"போடா, நீ சினிமாவுக்குப் போகாம இருந்தா, அது என்னையும்தானே பாதிக்கும்? உன்னை விட்டு நானோ, இல்லை என்னை விட்டு நீயோ இதுவரை தனியா சினிமாவுக்குப் போயிருக்கோமா? இது வேண்டாம். வேற ஏதாவது சொல்?''

''எனக்கு ஒன்றுமே தோணலை. நீயே வேறு ஏதாவது சொல்லேன்? நான் ஒப்புக்கறேன்?''

"சரி, பந்தயத்தில் நான் ஜெயித்து நீ தோற்று விட்டால், மொட்டையடித்துக் கொள்ள வேண்டும்? சரியா?''

''ஒருவேளை நான் ஜெயித்து நீ தோற்று விட்டால், நீ மொட்டையடித்துக் கொள்கிறாயா?''

"சரி...''

"சவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.''

"ஏற்றுக் கொள்ளப்பட்டது.''

நண்பர்கள் இருவரும் சிரித்தபடி பிரிந்தனர்.

வியாழக்கிழமை அமாவாசை நெருங்கிக் கொண்டிருந்தது. வியாழக் கிழமை காலையிலேயே தயா பத்ரகாளி கோயிலுக்குப் போய், தெற்குப் பிரகாரச் சுவருக்கு வெள்ளையடித்தான்.

மாலை கழிந்து இரவு மணி பத்து. கையில் ஒரு பையுடன் சங்கர் தயாவின் வீட்டுக்கு வந்தான்.

"இத பார்த்தியா தயா? பையில ஒரு டார்ச், செம்மண், பிரஷ், தண்ணீர்



"அதுக்கு விஷ்ணு சக்கரம்தான் வேணுமாம்டா!"

மட்டும்தான் இருக்கு" என்று பையைத் திறந்து காட்டினான் சங்கர்.

"சங்கா, இப்பக்கூட ஒன்றும் முழுகிப் போகலை. பிடிவாதத்தை விட்டுடு. நாளைக்கு ஏதாவது தாறுமாறா நடந்து போனால் உங்கம்மா அப்பாவுக்கு நான் பதில் சொல்லும்படி இருக்கும். வேண் டாண்டா இந்தப் பிடிவாதம்?"

தயா அழுது விடுவான் போல் இருந் தது!

"தயா, நான் ஏற்கெனவே எங்க அம்மா அப்பாவிடம் சொல்லி விட்டேன். இந்த மாதிரி ஏதாவது வித்தியாசமான சவாலை ஏற்றுச் செய்து காட்டணும் என்று நானும் துடிக்கிறேன். கவலைப்படாதே. நீ என்னை இப்படித் தடுக்கிறதைப் பார்த்தால், தோற்றுப் போய் மொட்டை அடிச்சுக்கத் தயங்கிறாயோன்னு நான் நினைக்கிறேன்" என்று அவனை உசுப்பி விட்டான் சங்கர்.

"அப்ப கிளம்புடா."

பத்ரகாளி கோவிலுக்குக் கதவுகள் கிடையாது. உருட்டிய கண்களும், கோரைப் பற்களும், தொங்கிய நாக்கும், சிவந்த புடைவையும், பகலில் பார்த்தால் கூடப் பயப்படும்படிதான் இருக்கும் காளி யின் தோற்றம். காலையிலும், மாலையி லும் மட்டுமே கூட்டம் வரும். அது கூட பிரார்த்தனை செலுத்துபவர்களாகத்தான் இருப்பார்கள். மற்றபடி கோவிலில் எப்பொழுதுமே பயங்கர அமைதிதான்.

கோவில் அமைந்திருந்த இடம் சற்று மேடானது. சுற்றிலும் மொட்டைப் பாறைகள். தெற்குப் பக்கம்தான் புளியந் தோப்பு. பகலில் கூட யாருமே தனியாக வர அஞ்சும் இடம். அந்த இடத்துக்கு கையில் பையுடன் சங்கர் வந்தான்.

எங்கேயோ ஆந்தை அலறியது. காளியின் பயங்கரத் தோற்றம், மங்கிய மண் விளக்கு வெளிச்சத்தில் இன்னும் திகிலைக் கூட்டியது. பிரகாரத்திற்குள் நுழைந்தான். யாரோ உள்ளேயிருந்து ஓடிவரும் சத்தம் கேட்டது. சங்கர் தாக்கத் தயாராவதற்குள் அவன் மேல் என்னவோ வந்து விழுந்தது! எழுந்து ஓடியது! அவசரம் அவசரமாக சங்கர் டார்ச்சை அடித்துப் பார்த்தான். ஒரு குள்ள நரி, தேங்காய் மூடியைக் கௌவிக் கொண்டு ஓடுவது தெரிந்தது!

சங்கர் தெற்குப் பிரகாரத்தை அடைந் தான். வாட்டர் பாட்டிலை எடுத்து, செம்மண் கிண்ணத்தையும் எடுத்தான். டார்ச்சைப் போட்டுவிட்டு, அந்த வெளிச் சத்தில் செம்மண்ணைக் குழைத்து பிரஷைப் போட்டான்.

சரசரவென்று ஏதோ சத்தம். புளிய மரம் சலசலத்தது. அடுத்த வினாடி சங் கரின் கையில் இருந்த வாட்டர் பாட் டிலை யாரோ வந்து பிடுங்கிப் போர்கள்! கால்பட்டு டார்ச் உருண்டு போனது. பதைபதைக்கும் மனதையும் பயத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டு, டார்ச் லைட்டை அவசரம் அவசரமாக நடுங்கும் கைகளால் துழாவி எடுத்து அடித்துப் பார்த்தான் சங்கர். மதில்சுவரில் உட்கார்ந் திருந்த குரங்கு ஒன்று கண்கள் கூச முகத்தைத் திருப்பிக் கொண்டது. அதன் கையில் வாட்டர் பாட்டில்!

சங்கர் செம்மண் கிண்ணத்தையும் பிரஷ்ஷையும் எடுத்துக் கொண்டு, சுவரில் "ஓம் காளி சரணம்" என்று எழுத முயன் றான்.

காற்று ஊளைச் சத்தம் போட்டு பல

மாக அடித்தது. புளிய மரத்துக் கிளைகள் சலசலத்தன. அதில் வாழ்ந்த பறவைகள் "சடபட"வென்று சிறகடித்தன. விதம்விதமான அவக் குரல்களை எழுப்பின. சங்கர் இனம் புரியாத பயத்தால் உறைந்து போனான்.

நடுங்கும் கரங்களால் ஒருவழியாக எழுதி முடித்தான். முகம் வியர்த்தது. இனம்புரியாத பீதி மனதில் கப்பியது. இதுவரை பந்தயத்தை முடித்தாகி விட்டது. திரும்பிப் போகும் போது, பேய்கள் அடித்து விடுமோ?

சரசரவென்று எல்லாவற்றையும் அவசரம் அவசரமாகப் பையில் அடைத்துக் கொண்டான். டார்ச்சை எடுத்துக் கொண்டு திரும்பினான் சங்கர்.

பின்னாலிருந்து சட்டையைப் பிடித்து யாரோ இழுத்தார்கள்! திரும்பிப் பார்க்காமல் பதிலுக்கு சங்கரும் இழுத்து விடுவித்துக் கொள்ளப் பார்த்தான். சட்டையைப் பிடித்திருந்த பிடி விடவில்லை. பிடி உறுதியாக இருந்தது. சரி பேயிடம் வகையாகச் சிக்கிக் கொண்டோம் என்று முடிவு செய்து கொண்டான் சங்கர். ஓடி விடும் நோக்கில் வேகமாக இழுத்தான். சட்டை 'டர்' என்று கிழிந்தது. அப்படியும் பிடி விட வில்லை! நடுங்கும் கரத்தால் டார்ச்சை அடிக்கப் பார்த்தான். பிரகாரச் சுவரில் இருந்த ஆணியில் சட்டை மாட்டி சிக்கியிருந்தது!

தயா மொட்டை போட்டுக் கொள்ளும் காட்சியை மனதுக்குள் கற்பனை செய்தபடி சிரித்துக் கொண்டே நடந்தான் சங்கர்!



பறந்து வாரும் பாலரே....

காந்தித் தாத்தா பற்றிநம்
கல்கித் தாத்தா சொல்வதை
நினைத்து நினைத்து நினைத்துநான்
நெஞ்சு நெகிழ்ந்து நிற்கிறேன்

மாந்த ருக்குள் தெய்வமாய்
மகா மகா ஆத்மாவாய்
காந்தித் தாத்தா திகழ்ந்ததாய்
கல்கித் தாத்தா சொல்கிறார்!

அனைத்து நாடும் வியந்திட
அகிம்சைப் புது முறையினால்
அன்னை நாட்டின் விடுதலை
அண்ணல் பெற்றுத் தந்தாராம்

எளிமை தூய்மை தொண்டுக்கு
இலக்கணமே இவர் என
காந்தித் தாத்தா இருந்ததாய்
கல்கித் தாத்தா சொல்கிறார்

கல்வி யையே உழைப்பினால்
கற்க வேண்டும் என்றுதான்
காந்தித் தாத்தா ஆதாரக்
கல்வி முறை கண்டாராம்

காந்தித் தாத்தா பற்றிநம்
கல்கித் தாத்தா சொல்வதை
படித்து மனம் பதித்திட
பறந்து வாரும் பாலரே!

— ரா. பொன்ராசன்



ராணி

ஒரு ராஜா இருந்தார். அவர் ஒருநாள் வேட்டைக்குக் கிளம்பினாரு. ராணி நானும் வருவேன்னு அடம் பிடிச்சாங்க. ராணி அழுததைத் தாங்காமா ராஜா வேட்டைக்குக் கூட்டிட்டுப் போனாரு.

ராஜாவும், ராணியும் ரொம்ப தூரம் காட்டுக்குள்ள போயிட்டாங்க. ராஜா ஒரு மிருகத்தை விரட்டிக்கிட்டு ஓடினாரு. ராணியால முடியலே. ராணி சொன்னாங்க –

"நான் இந்த மரத்துக்குக் கீழே உக்காந்துக்கறேன். நீங்க மட்டும் போய் வேட்டையாடிட்டு வாங்க."

ராஜா, ராணியை விட்டுட்டுப் போயிட்டாரு. ராணி மரத்துக்குக் கீழே உக்காந்துட்டு வேடிக்கை பார்த்துட்டு இருந்தாங்க. அப்ப மரத்து மேலே ஒரு ஆண் குருவி, பெண் குருவி, இரண்டு குட்டிக் குருவிங்க இருந்துச்சு.

அம்மா குருவி உடம்பு முடியாம இருந்துச்சி. அது அப்பா குருவிகிட்ட கேட்டுது –

"ஏங்க, ஏங்க நான் செத்துப் போயிடுவேன் போல இருக்கு. நான் போன பின்னாடி நீங்க நம்ம குட்டிக் குருவிங்களை விட்டுட்டுப் போகக் கூடாது'' அப்படின்னு சொல்லிச்சு.

"நான் போகவே மாட்டேன்'' – அப்பா குருவி தைரியம் சொல்லிச்சு.

கொஞ்ச நேரத்துல அம்மா குருவி செத்துப் போச்சு. குட்டிக் குருவிங்க 'கீ கீ'ன்னு அழுதுச்சி. பாவம்! ஆனா, அப்பா குருவி என்ன பண்ணித்து தெரியுமா? அம்மா குருவி செத்ததும் அப்பா குருவி பறந்து போச்சு. குஞ்சுங்களைக் காப்பாத்துவேன்னு சொன்னதை அது மறந்துடிச்சு.

இதையெல்லாம் பார்த்துட்டிருந்த ராணிக்கு அழுகையா வந்தது. நாளைக்கு நாமளும் செத்துப் போயிட்டா ராஜாவும் இதே மாதிரி குழந்தைங்களை கவனிக்காம போயிடுவாரோன்னு பயம் வந்திடுச்சு. அழுதுகிட்டேயிருந்தாங்க.

அப்ப ராஜா வந்தாரு. ராணி அழுவறதைப் பார்த்ததும், "ராணி, ராணி ஏன் அழுவுறேன்னு?'' கேட்டாரு.

ராணி எல்லாத்தையும் சொன்னாங்க. ராஜா இதெல்லாம் கேட்டுட்டு சிரிச்சாரு.

''குருவியும், நானும் ஒண்ணா? நான் அப்படியெல்லாம் பண்ண மாட்டேன். வா நாம அரண்மனைக்குப் போலாம்னு'' கூட்டிட்டுப் போனாரு.

அரண்மனைக்கு வந்தப்புறமும் ராணி சமாதானமாகலை. இதை நினைச்சு நினைச்சுக் கவலைப்பட்டு, ஓடா தேய்ஞ்சிப் போயிட்டாங்க. படுத்த படுக்கையாயிட்டாங்க.

ராஜா எவ்வளவு சமாதானம் சொல்லியும் அவங்களுக்கு மனம் சமாதானமாகலே.

இந்த நேரத்தில் ராஜா, ராணியோட குட்டிப் பசங்களுக்கு அம்மா இப்படியாயிட்டது கவலையா இருந்தது.

"ஏம்மா, உனக்கு என்ன வேணும்? நாங்க வாங்கித் தர்றோம். மாங்காய் வேணுமா? அப்பம் வேணுமா? கடலுருண்டை வேணுமா? சொல்லும்மா''ன்னு கேட்டாங்க.


ராணி அழுதாங்களே தவிர எதுவும் சொல்லலை. பசங்க அப்பாவைப் போய் நச்சரிச்சாங்க. அப்பத்தான் ராஜா, காட்டில குருவிக்கு நடந்ததைச் சொன்னாங்க. ''அதனாலேதான் அம்மா இப்படியிருக்காங்க'' அப்படின்னு சொன்னாரு.

இரண்டு சுட்டிப் பசங்களும் பயங்கரமா யோசிச்சாங்க. இரண்டு பேருக்கும் ஒரு யோசனை வந்தது. அப்பா காதில ரகசியமா சொன்னாங்க.

ராஜாவுக்கு ஒரே சந்தோஷம். பசங்க யோசனை ரொம்ப நல்லாயிருந்துச்சு.

சுட்டிப் பசங்க இரண்டு

சிரித்தாள்!



பேரும் ராணியோட அறைக்குப் போனாங்க.

"அம்மா, அம்மா நாங்க அப்பாகிட்டே கேட்டு உங்க கவலைக்கான காரணத்தைத் தெரிஞ்சிகிட்டோம். அப்பா அந்த குருவி மாதிரி பண்ணுவாரா இல்லையான்னு தெரிஞ்சிக்கணும்னா நாங்க சொல்ற மாதிரி நீங்க செய்யணும்" - அப்படின்னு சொன்னாங்க.

"சரி சொல்லுங்க?"ன்னு ராணி கேட்டாங்க.

''அம்மா நீ செத்துப் போயிட்ட மாதிரி கொஞ்ச நேரம் நடிம்மா. அப்பா என்ன பண்றாருன்னு தெரிஞ்சிடும்.''

ராணிக்கும் இந்த யோசனை ரொம்பப் பிடிச்சிருந்திச்சு. செத்துப் போன மாதிரி நடிச்சாங்க. அரண்மனையில எல்லோரும் அழுதாங்க. சுட்டிப்பசங்களும் அழுற மாதிரி நடிச்சாங்க. விஷயம் தெரிஞ்சதும் ராஜா குடுகுடுன்னு ஓடி வந்தாரு. ராணி மேல புரண்டு, புரண்டு அழுதாரு. "ராணி, என்னை விட்டுட்டு போயிட்டியே? நீயில்லாம நான் மட்டும் ஏன் உயிரோட இருக்கணும்?"னு புலம்பி பக்கத்துல இருந்த கத்தியை எடுத்துக் குத்திக்கப் போனாரு. அதுவரை எழுந்து நடமாடாத ராணி ஓடிப் போய் ராஜாவே புடிச்சிக்கிட்டாங்க!

"இதெல்லாம் சும்மா நடிப்பு ராஜா! இன்னியோட என் மனபயம் போயிடுச்சி ராஜா" என்று சிரிச்சாங்க.

ராஜாவுக்கு ரொம்ப சந்தோஷம் தன்னோட சுட்டிப் பசங்கள பார்த்து சிரிச்சாரு. அவங்க சொன்ன யோசனை தானே இது? ரொம்ப நாளைக்கு ராஜா, ராணி பசங்க எல்லோரும் சந்தோஷமாக இருந்தாங்க.

நீங்களும் ராணி மாதிரி மனபயம் இல்லாம சுட்டிப்பசங்க மாதிரி சமயோசிதமா இருக்கணும். எனக்குத் தெரியாதா? . கண்டிப்பா நீங்க இருப்பீங்களே!

பெ. ஆண்டாள் பெத்தண்ணன்.

பணிவின் உயர்வு



ஒரு தடவை சமுத்திர ராஜன் எல்லா நதிகளையும் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.


"நதி தேவதைகளே! உங்கள் நதிகளிலே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது, நீங்கள் எத்தனை பெரிய மரமாக இருந்தாலும் மிக எளிதாக வேரோடு பெயர்த்தெடுத்து, உங்கள் வெள்ளத்தில் மிதக்கவிட்டு, எனக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்து கொடுக்கிறீர்கள். எத்தனையோ வித மரங்களைக் கொண்டு வந்து கொடுத்துள்ளீர்கள். ஆனால், இதுவரை நீங்கள் ஒருவராவது மூங்கிலைக் கொண்டு வந்தது இல்லையே! ஏன்? ஒருவேளை உங்களால் மூங்கில்களைப் பெயர்க்க முடிய வில்லையோ?"

அப்பொழுது கங்கை சொன்னாள், "நதிகளின் தலைவரே! நாங்கள் கொண்டு வரும் எல்லா மரங்களும் எங்கள் பிரவாகத்தைக் கண்டு துளியும் அஞ்சாமல் தலைநிமிர்ந்து வெகு கர்வமாக நிற்கின்றன. அதனால் அவற்றின் கர்வத்தைப் போக்க அவற்றை வேரோடு பெயர்த்து உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். ஆனால் மூங்கிலோ, எங்கள் பிரவாகத்தைக் கண்டதும், எங்களுக்கு மரியாதை செய்வது போல், குனிந்து தாழ்ந்து விடுகின்றன; பணிகின்றன. அவற்றுக்கு அகம்பாவம் கிடையாது. அதனால் நாங்கள் அவற்றைப் பெயர்க்காமல் அப்படியே விட்டு விடுகிறோம்."

பணிவும் அடக்கமும் அளவில்லாத நன்மைகளையும் சிறப்பையும் கொண்டு வந்து சேர்க்கும்."

- அ.சு. கிருஷ்ணன்

உரக்கப் படிக்க உன்னதக் கதைகள்



கொடைவள்ளல் என்றதுமே நமது நினைவுக்கு வருவது கர்ணனின் பெயர்தான். தன் காதில் கர்ணன் அணிந்திருந்த குண்டலங்கள் உயிர்காக்கும் கவசங்கள். அவைகளைக் கர்ணன் அணிந்திருக்கும் வரை யாரும் அவனை வெல்ல முடியாது. “எனக்கு வேண்டும்” என்று யாராவது ஒரு பொருளைக் கேட்டு விட்டால், கர்ணன் உடனே அதைத் தந்து விடுவான். இந்திரன் கிழவனாக உருமாறி கர்ணனிடம் வந்தான். அவனுடைய குண்டலங்களைக் கேட்டான். அவற்றைத் தருவது தனது உயிருக்கு ஆபத்து என்பதைக் கர்ணன் அறிவான். இருந்தாலும் அவன், கேட்டதைத் தருபவன். அதனால், தன் உயிர் காக்கும் குண்டலங்களைக் கிழவனாக வந்த இந்திரனுக்கு அளித்து விட்டான்.

கர்ணனைப் போலவே தமிழ்நாட்டிலும் ஒரு வள்ளல் இருந்தான். அவன் பெயர் பாரி. இவனை வேள் பாரி என்றும் கூறுவார்கள். பாரி, பறம்பு மலையைச் சேர்ந்த பகுதிகளுக்கு மன்னன். இவனுடைய நாட்டில் முன்னூறு ஊர்கள் இருந்தன. இவைகளையெல்லாம் சேர்த்து பறம்பு நாடு என்பார்கள்.

பாரி, மிகவும் இரக்க குணமுடையவன். 'இல்லை' என்று வந்து கேட்பவர்களுக்கு, அவர்கள் கேட்பதைத் தரும் ஒப்பற்ற மனமுடையவன். இவனுடைய புகழைக் கேட்டு மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் இவன் மேல் பொறாமை கொண்டனர். ஒன்றுகூடி, பாரியை அழிக்கத் திட்டம் போட்டனர். அதன்படி மூவேந்தர்களும் பாரியின் பறம்பு நாட்டின் மேல் பெரும் படையுடன் படையெடுத்தனர்.

பாரியின் பறம்பு நாடு மலைப் பகுதிகள் நிறைந்தது. எல்லா வளங்களும் கொண்டது. மூவேந்தர்களும்

பறம்பு மலையை வளைத்துக் கொண்டு முற்றுகை இட்டனர். வெளியில் இருந்து எந்த உதவியும் கிடைக்காதபடி எல்லா வழிகளையும் அடைத்தனர். முற்றுகையைத் தாக்குப் பிடிக்க முடியாமல் பாரி சரணடைந்து விடுவான் என்று மூவேந்தர்களும் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். ஆனால், அவர்கள் நம்பியது போல் நடக்கவில்லை.

பாரியின் அரண்மனையிலும், அதைச் சேர்ந்த மலைப் பகுதிகளிலும் ஏராளமான கிளிகள் வசித்து வந்தன. அவையாவும் நன்கு பழக்கப்பட்ட கிளிகள். பொழுது விடிந்ததும் அவை பறந்து சென்று நெற்கதிர்களைக் கொத்திக் கொண்டு திரும்பும். ஒரு நாளைக்கு இப்படிப் பலமுறை சென்று திரும்பும். ஒவ்வொருமுறை திரும்பும் போதும், முற்றிய நெல் கதிர் இருக்கும். இப்படி நூற்றுக் கணக்கான கிளிகள் தானிய இருப்பைக் குறையாமல் கவனித்து வந்தன. இதனால் உணவுத் தட்டுப்பாடு இல்லாது, பறம்பு மலை முற்றுகை மாதக்கணக்கில் நீடித்தது. முற்றுகை இட்டிருந்த மூவேந்தர்களும் திகைத்துப் போனார்கள்; ஏமாமற்றமடைந்தார்கள்.

முற்றுகையைத் திரும்பப் பெறவும் அவர்களது பெருமை தடுத்தது. பாரி ஒரு சாதாரணமான சிற்றரசன். வலிமைமிக்க மூவேந்தர்களின் படையாலும் பாரியை வெல்ல முடியவில்லை என்பது எத்தனை பெரிய அவமானம்! மக்களும் மற்ற மன்னர்களும் பழிப்பார்களே; சிரிப்பார்களே என்று மூவேந்தர்களும் கவலை கொண்டனர். படைகளால் வெல்ல முடியாத பாரியை வெல்வதற்குக் குறுக்கு வழி ஏதாவது இருக்கிறதா என்று யோசித்தனர்.

அப்பொழுது, பறம்பு மலை அரணில் இருந்து ஒரு புலவர் வந்தார். அவர், பாரியின் அரண்மனையில் இருந்து தான் திரும்பிக் கொண்டிருந்தார். அவர் பெயர் கபிலர். மூவேந்



தர்களுக்கும் நன்கு அறிமுகமான பெரும் புலவர். அதோடு பாரிக்கும் மிக நெருக்கமான நண்பர்.


கபிலரைக் கண்டதும் மூவேந்தர் களும் வணங்கினர். நலம் கேட்டனர்.

"மூவரும் ஒன்றுசேர்ந்து படை யெடுத்து வந்து விட்டோம். முற்றுகை நீடிக்கிறது. பாரி, பணியும் வழியைக் காணோம். என்ன செய்தால் பாரி யைப் பணியவைக்க முடியும்?" என்று கபிலரிடமே யோசனை கேட்டனர். அவர்தான் பாரியின் உயிர்நண்பர் ஆயிற்றே?

கபிலர் சிரித்தார்.

"படை பலத்தைக் காட்டி, முற்றுகை இட்டு எங்கள் பாரியைப் பணிய வைக்க முடியாது. அவனை மன்னன் என்பதை விடக் கேட்டதைத் தரும் வள்ளல் என்பதே பொருத்தம். பாட்டுப் பாடி, ஆட்டம் ஆடி மகிழ்விக்கும் கலைஞர்களைப் போல வேடமணிந்து பாரியைக் காணப் போங்கள். தடை இருக்காது. பாரி, உங்களை வரவேற் பான். உங்கள் ஆடல் பாடல்களால் பாரியை மகிழச் செய்யுங்கள். உங் களுக்கு என்ன பரிசு வேண்டும்?





''மழையைப் பார்த்ததும் இப்படி பர வசப்பட்டு நடுரோட்ல போய் நின்னுக் கிட்டு டான்ஸ் ஆடறாங்களே, யார் அந்தப் பசங்க?''

''பால்காரர் பரமசிவத்தோட வாரிசுகள் தான்!''

— சீர்காழி வி. ரேவதி

என்று பாரி கேட்பான். இந்தப் பறம்பு மலையும், பாரியின் உயிரும்தான் வேண்டும் என்று கேளுங்கள். பாரி தடையேதும் சொல்லாமல் மகிழ்ச்சி யாக உங்கள் விருப்பத்தை நிறை வேற்றி வைப்பான். வலிமையால்; படை பலத்தால்; வீரத்தால் அவனை வெல் லவே முடியாது" என்றார் கபிலர்.

மூவேந்தர்களும் தங்கள் பெருமை களை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு கலைஞர்களாக வேடமிட்டு எங்கே போகப் போகிறார்கள் என்று கபிலர் எண்ணினார். அதனால்தான் இந்தக் குறுக்கு வழியைக் கூறி விட்டுப் போனார்.

ஆனால் மூவேந்தர்களின் மன நிலை வேறு மாதிரி இருந்தது. எங்கே தோற்றுத் திரும்பப் போகும் நிலை வந்து விடுமோ என்ற அச்சம் அவர் களுக்கு. பாரியை வீழ்த்த, எந்த வழி யையும் அவர்கள் பயன்படுத்தத் தயா ராக இருந்தார்கள். அதனால், மூவேந் தர்களான நாம் கலைஞர்களைப் போல் வேடம் போட்டுச் செல்வது நம் பெருமைக்கு ஏற்ற செயல் அல்ல என்ற எண்ணத்தை மூட்டை கட்டி வைத்தார்கள். கிளம்பி விட்டார்கள்!

இசைவாணர்களாகவும், ஆடல் கலைஞர்களாகவும் வேடமிட்டு வந்த மூவேந்தர்களையும் பாரி அன்புடன் வரவேற்றான். அவர்களுடைய ஆட லையும் பாடலையும் கண்டு மன மகிழ்ந்தான். புகழ்ந்தான். ''உங் களுக்கு என்ன பரிசு வேண்டும்? கேளுங்கள்?" என்று கேட்டான்.

"கேட்பதைத் தவறாது தரும் வள் ளல் என்று மக்கள் உங்களைப் புகழ் கிறார்கள். இந்தப் புகழ்ச்சி உண்மை யானால், எங்களுக்கு உங்கள் பறம்பு மலையையும், உங்கள் உயிரையும் தாருங்கள். இதுவே நாங்கள் விரும் பும் பரிசு" என்று துளியும் கூசாமல் கேட்டனர் மாறுவேடத்தில் வந்திருந்த மூவேந்தர்களும்.

வந்திருக்கும் கலைஞர்கள் யார் என்ற உண்மை எல்லோருக்கும் தெரிந்து விட்டது. அவையோர், மூவேந்தர்களையும் தாக்க வாளை உருவினர். ஆனால் பாரி, அவர் களைத் தடுத்தான்.


"தாருங்கள் என்று கேட்டதைத் தட் டாமல் தருபவன் நான். நீங்கள் கேட் டதைத் தந்தேன். உடனே எடுத்துக் கொள்ளுங்கள்" என்று மகிழ்ச்சியோ டும் பெருமையோடும் எழுந்தான் பாரி மன்னன்.

பாரிக்குப் புகழ், முல்லைக்குத் தேர் கொடுத்ததால் மட்டுமல்ல. மாறு வேடத்தில் மூவேந்தர்களும் ஒற்று மையாக வந்து கேட்ட தன் உயிரை, மறுக்காது மகிழ்ச்சியோடு தந்த நிகரற்ற வாக்குமீறா செயலுக்காகவும் தான்!

ஒப்புரவினால் வரும் கேடு எனின்
அஃது ஒருவன்
விற்றுக்கொள் தக்கது உடைத்து
(குறள் 220)




எங்கள் ஊரில் நடந்தது!



கறுப்பு லட்டு

ஒருமுறை 'ரவாலட்டு' செய்ய ஆசை வந்தது. யாரும் இல்லாத சமயமா பார்த்து சமையலறைக்குள் நுழைந்தேன். முதலில் ரவையைப் வறுப்பதற்காக வாணலியில் ரவையை போட்டு சூடுபடுத்திக் கொண்டிருந்தேன். அப்ப பாத்து எங்க அண்ணன் டீவிய போட்டுட்டான். அதில எனக்கு பிடிச்ச "கார்டூன் படம்" ஓடிக்கிட்டு இருந்தது. ஆர்வத்துல அப்படியே பார்க்கப் போயிட்டேன். இருபது நிமிடம் கழித்து வந்து பார்த்தேன். வாணிலியில் ரவையில்லை! ஏதோ கறுப்பா தீஞ்சிக்கிட்டிருந்தது. எல்லாரும் வந்ததும் அண்ணன் விஷயத்தைச் சொன்னான். எல்லோரும் சிரிச்சுட்டாங்க. கடைசியில எல்லாருமா சேர்ந்து அதுக்கு "கறுப்பு ரவாலட்டு"னு பெயர் சூட்டிட்டாங்க.

அருப்புக்கோட்டை, ம. இராஜ்குமார்.




பிளாஸ்கில் வெந்நீர்!

ஒருநாள் எங்கள் வகுப்பில் அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டு இருந்தார். அப்பொழுது மாணவிகளுக்குக் காண்பிப்பதற்காக ஒரு மாணவியை அழைத்து ஆய்வுக் கூடத்தில் இருந்து பிளாஸ்டிக் வெர்னியர் அளவுகோலை வாங்கிவரச் சொன்னார். நீண்ட நேரம் கழித்து அம்மாணவி கையில் பிளாஸ்க்குடன் வந்தாள். ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன?" என்று கேட்டார். உடனே அந்த மாணவி, "நீங்கள்தானே பிளாஸ்கில் வெந்நீர் வாங்கி வரச் சொன்னீர்கள்?" என்று கேட்டாள். பிறகுதான்

புரிந்தது. பிளாஸ்டிக் வெர்னியரை "பிளாஸ்கில் வெந்நீர்" என்று அவள் புரிந்து கொண்டிருக்கிறாள் என்பதை! இது தெரிந்தவுடன் ஆசிரியர் உட்பட வகுப் பில் அனைவரும் சிரித்தோம்.

மன்னார்குடி, கா. சசிகலா.



குடை கறுப்பு!

வகுப்பில் ஆசிரியர் குடையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அதைப் பற்றிய செய்திகளைக் கூறினார். கூறிய கையுடன் எங்களைப் பார்த்து "குடை குட்டையாக இருப்பது நல்லதா? நீளமாக இருப்பது நல்லதா?" எனக் கேட்டார். எங்கள் பேச்சை சரியாகக் கவனிக்காத என் நண்பன், "சார் குடை கறுப்பாத்தான் சார் இருக்கும்" எனக் கூறினான். இதைக் கேட்ட எங்கள் வகுப்பே சிரிப்பில் அதிர்ந்தது.

வரிக்கல், ஆ. குமார்.

சூடி

"நான் சாத்தப்பா அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது எங்கள் ஆசிரியர்



அடிக்க வரும்போதே, அதாவது அடிக்கக் கையை ஓங்குமுன்பே, ஒரு மாணவி.. "ஆத்தி..!" என்று கத்தி விடுவாள். இதனால் ஆசிரியர் பேசாமல் அவளை அடிக்காமல் விட்டு விடுவார்! இப்படி அடிக்குத் தப்பிவிடுவாள் அவள். ஒருநாள் அந்த மாணவி, "ஆத்தி!" என்று சொல்லும் போது ஒரு குறும்புக்கார மணவன் எழுந்து "(ஆத்தி) சூடி அறஞ்செய விரும்பு..." என்று உரக்கச் சொல்ல, வகுப்பறையே சிரிப்பில் ஆழ்ந்தது.

நெற்குப்பை, கி. மனோகரன்.



எங்கே போறே?

ஒருமுறை நாங்கள் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தோம். அது ஒரு நிறுத்தத்தில் நின்றது. பயணிகள் அனைவரும் பேருந்தில் ஏறிய பின்னர் ஒரு பெண்மணி மிக வேகமாகப் பேருந்தை நோக்கி வந்தாள். பஸ்ஸுக்காகத்தான் அப்படி ஓடி வருகிறார் என்று எண்ணிய கண்டக்டர் "எங்கே போற?" என்று கேட்டார். அப்பெண்மணி "கடைக்கு" என்று கூறி, பக்கத்தில் உள்ள கடைக்குச் செல்ல பேருந்து முழுவதும் சிரிப்பலை பரவியது.

காவேரிப்பாக்கம், கே. பாலசுந்தர்.


பச்சை காய்

அம்மா சாலையில் போகும் பெண்ணிடம் காய் வாங்குவார். அன்றும் வழக்கம் போல் காய் வாங்கும் பொழுது என் தம்பியும் அருகே நின்று கொண்டி



ருந்தான். அம்மா கறிகாய்ப் பெண்ணிடம், "என்ன காய்கள் முத்தலாக இருக்கு?" என்று கேட்டாள். அதற்கு அவள் "எல்லாம் பச்சைக் காய்ம்மா" என்றாள். உடனே என் தம்பி "எங்கே எல்லாம் பச்சைக் காய்/ கேரட், பீட்ரூட் சேனைக் கிழங்கு, உருளைக்கிழங்கு எல்லாம் பச்சையாவா இருக்கு?" என்றானே பார்க்கலாம். ஒரே சிரிப்புதான்!

ஸ்ரீரங்கம், எல். சேகர்.



விளக்கம்

ஒருநாள் கோல்ஃப் விளையாட்டைப் பற்றிய பேச்சு எழுந்தது. அப்போது டீ.வி. பார்த்துக் கொண்டிருந்த எங்கள் வீட்டு சின்னத்தம்பியிடம், "அது என்ன விளையாட்டு?" என்று கூறும்படி கேட்டேன். அவனும் ஒவ்வொரு விளையாட்டுப் பெயராகக் கூறினான். கோல்ஃப் என்ற பெயரைத் தவிர! அப்போது அங்கு நின்று கொண்டிருந்த பணிப்பெண் 'அதாம்ப்பா, சாக்கடை சொரண்டி மாதிரி வச்சிகிட்டு ஆடுவானுங்களே!" என்று கூறியவுடன் சின்னத்தம்பி பிடித்துக் கொண்டான். உடனே "ஆங் கோல்ஃப்" என்று கூறவே அனைவரும் சிரித்து விட்டோம்.

மன்னார்குடி, மு. தனகோபாலன்.




மகாராணி

என் பெயர் துரை. எங்கள் ஊர் ஓர் சிற்றூர். ஆகையால் எங்கள் ஊருக்கு அருகில் உள்ள அனந்தபுரத்தில் சென்று படிக்கிறேன். ஆசிரியர் வகுப்புக்கு வந்து மாதத் தேர்வுத் தாள்களைக் கொடுத்தார். 35 மதிப்பெண் பெறாதவர்களை எல்லாம் அழைத்துக் கண்டித்தார். ஒரு மாணவியை அழைத்து, "நீ எந்த ஊர் மகாராணி?" என்றார். அதற்கு அந்த மாணவி "அனந்தபுரத்து மகாராணி", என்றவுடன் ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

வெள்ளையாம்பட்டு, ந. துரை

பிச்சை


நானும் என் நண்பர்களும் வழக்கமாக இரவு 11 மணி வரை எங்கள் தெருவில் விளையாடிக் கொண்டிருப்போம். ஒருநாள் நாங்கள் விளையாடிக்



கொண்டிருக்கையில், என் நண்பனின் உறவுக்காரர் ஒருவர் வந்தார். அவர் பெயர் பிச்சை. அவர் என் நண்பனின் வீட்டுக் கதவைத் தட்டினார். அப்போது நேரம் இரவு 10-45 இருக்கும். என் நண்பனின் அம்மா "யாரது கதவைத் தட்டுவது?" என்று கேட்டார். உடனே அந்த உறவுக்காரர், "நான்தான் பிச்சை வந்திருக்கிறேன்" என்றதும், என் நண்பனின் அம்மா "இந்நேரத்தில் வந்திருக்கிறீர்களே! வீட்டில் சாப்பாடு ஆகி எல்லோரும் சாப்பிட்டுக்கூட விட்டோமே? வேறு வீட்டில் போய்ப் பாருங்கள்" என்றார்கள்.

"பிச்சைக்காரன் இல்லைம்மா. உங்க உறவுக்காரப் பிச்சை" என்று அவர் குரல் கொடுத்ததும் அம்மா தவித்துப் போனார்!


செஞ்சி, டி. பழனி.



மொசைக்!

எங்கள் அறிவியல் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். அவர் வகுப்பில் யாராவது வேடிக்கை பார்த்தால் உடனே அவனை எழுப்பி ஏதாவது பாடசம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்பார். இதனாலேயே அவரது வகுப்பில் அனைவரும் பாடத்தை நன்றாகக் கவனிப்பார்கள். ஒரு குறும்பு மாணவன் இவர் வகுப்பில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அதைக் கவனித்து விட்ட ஆசிரியர் அவனை எழுப்பி, "கப்பி ரோடுகளில் வழவழப்பாக இருக்க என்ன போடுவார்கள்?" என்றார். பாடத்தை சரியாகக் கவனிக்காததால் அவன் "மொசைக் சார்!" என்றானே பார்க்கலாம். கண்டிப்பான ஆசிரியர் கூடச் சிரித்து விட்டார் என்றால் பாருங்களேன்!


சோழன் மாளிகை, கோ. ஆனந்தன்.



சொர்க்கம் - நரகம்

தமிழாசிரியர் பொதுவான சில கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். சொர்க்கம், நரகம் என்றால் எவ்வாறு இருக்கும் என்று கேட்டார். அப்போது ஒரு குறும்புக்கார மாணவன், "சொர்க்கம்னா ஞாயிற்றுக்கிழமை மாதிரி இருக்கும். நரகம்னா திங்கட்கிழமை மாதிரி இருக்கும்" என்றதும் ஆசிரியர் தன்னையும் அறியாமல் சிரித்துவிட மாணவர்களும் அதில் கலந்து கொண்டனர்.

வந்தவாசி, பா. ஜெயக்குமார்.




பாட'நூல்'

நான் எங்கள் ஊருக்கு அருகிலுள்ள பள்ளியில் படிக்கிறேன். எங்கள் ஊரிலுள்ள சிலர் படிப்பறிவில்லாதவர்கள். ஒருமுறை எங்கள் பள்ளியில் தன் பையனைச் சேர்த்துவிட்டுப் புத்தகம் வாங்கிக் கொடுத்து'வகுப்பிற்குக் கொண்டு விட்டுச் செல்ல ஒருவர் வந்தார். முதல் வகுப்பு தமிழ் வகுப்பாதலால் தமிழாசிரி

யர் தமிழ்ப் பாடநூலை எடுக்கச் சொன்னார். சிறுவனின் தந்தை பாமரர் ஆதலால் "நான் தமிழ்ப் புத்தகம்தானே வாங்கிக் கொடுத்தேன்; நூல் வாங்கவில்லையே!" என்று பரிதாபமாகக் கூறினார். அவருக்கு விளங்க வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

ஐயம்பாளையம், எஸ். எதிராஜன்.





பாதிப்பழம்

எங்கள் தந்தையின் நண்பரொருவர் ஒரு மாதுளம் செடியை எங்களுக்குப் பரிசாகக் கொடுத்தார். என் தங்கை அதற்கு தினமும் தண்ணீர் ஊற்றி எருப்போட்டு வளர்த்து வந்தாள்.


இம்முறை நண்பர் வந்தபோது அந்த மாதுளம் செடியில் சில பழங்கள் இருக்கக் கண்டார். "நான்தானே செடி கொடுத்தேன்? அதில் பாதிப் பழத்தை எனக்குத் தா" என்று என் தங்கையிடம் கேட்டார். என் தங்கை ஒரு பழத்தைப் பறித்து அதில் பாதியை அறுத்து அவரிடம் நீட்டினாள். என் தங்கையின் சாமர்த்தியத்தைப் பார்த்து அவர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

மிட்டூர், எம். அச்சுதானந்தம்.

தலைக்குமேல் வேலை!

நான் இருக்கும் கிராமத்தில் ஒரு மளிகைக் கடை உள்ளது. அந்தக் கடையில் எப்பொழுதுமே கூட்டம் நிரம்பி வழியும். கூட்டம் அதிகமாக இருக்கும். அவசரத் திற்கு சாமான் வாங்க முடியாது. அன்று, ஓர் அவசரக் குடுக்கை ஆள் ஒருவர் வந்து நின்று சாமான் கேட்டார். மளிகைக் கடைக்காரர் வேறு ஒருவருக்கு சாமான் போட்டுக் கொண்டிருந்தார். உடனே வந்தவர் "யோவ், எனக்கு தலைக்கு மேல் வேலை இருக்கு. சாமானை வேகமாகப் போட்டுத்தாய்யா'' என்றார். அதற்கு மளிகை கடைக்காரர், "தலைக்கு மேல் வேலையிருந்தால் சலூன் கடைக்குப் போக வேண்டியதுதானே'' என்றாரே பார்க்கலாம். வந்தவர் 100% அசடுவழிந்தார். கடையில் ஒரே சிரிப்புத்தான்.

நீர்வளங்குளம், ப. காளிதாசன்.



பின்னால் போகும்!

நாங்கள் ஒருமுறை பள்ளி மூலம் சுற்றுலா சென்றிருந்தோம். நாங்கள் சென்ற பேருந்தின் ஓட்டுநர் நகைச்சுவை உணர்வுமிக்கவர். செல்லும்போது அவர் எங்களிடம், ''பஸ்ஸை பின்னால தள்ளினா என்ன ஆகும்?'' எனக் கேட்டார். நாங்கள் "பஸ்ஸு முன்னாடி போகும்'' என்றோம். அதற்கு அவர், (pin)னால தள்ளினா பின் உடைந்து விடும்'' என்றார். சிரிப்பிற்குக் கேட்கவா வேண்டும்?

ஆலங்குளம், சி. சதீஸ்குமார்.

கலைப் பொருள் செய்யுவோம்-3

கிறிஸ்மஸ்

டிசம்பர் மாதம் நெருங்கிக் கொண்டிருக்கிறது இல்லையா? அதற்கு அலங்காரம் செய்ய இந்த கிறிஸ்மஸ் தாத்தா மிகவும் உதவியாக இருப்பார்.

தேவையான பொருள்கள்


1. உபயோகப் படுத்திய முட்டை ஓடு.
2. பஞ்சு
3. வண்ணக் காகிதம்
4. வாட்டர் கலர் செட், அல்லது கலர் பென்சில்கள்.
5. பெவிகால்



1



2



3

செய்யும் முறை

உபயோகப் படுத்திய முட்டையை, அதிகமாக அழுத்தி உடைந்து விடாமல், சோப்புத்தூள் போட்டு, நன்கு சுத்தம் செய்து கொள்ளவும். பஞ்சால், கொஞ்சம்கூட நீர் இல்லாமல் துடைத்து நன்கு உலர வைக்கவும். வெயிலில் வைக்க வேண்டாம். வெயிலில் வைத்து உலர விட்டால் தொட்டாலே பொடிந்து விடும். உலர்ந்த பிறகு, ஓட்டையை மூடும் அளவுக்குக் காகிதத்தைக் கத்தரித்து எடுத்து, இந்த காகிதத் துண்டில் பெவி கால் தடவி, அப்படியே ஓட்டை மேல் ஒட்டி மூடுங்கள். இதுதான் கிறிஸ்மஸ் தாத்தாவின் தலையாக அமைய வுள்ள பகுதி.

இனி, முகம் அமையக்கூடிய அளவுக்கு முட்டையில் பென்சிலால் வரைந்து கொள்ளுங்கள். (படம் 1) இரு கண்களும் மூக்கும் மட்டும் போதும்.

காதுகளுக்கு இருபுறமும், நெற்றியிலும் கிறிஸ்மஸ் தாத்தாவுக்கு பனி போன்ற வெண்முடி இருக்கும் அல்லவா? அதே போல், இரண்டு காதுப் பக்கமும், நெற்றியிலும் வரக்கூடிய அளவுக்கு பஞ்சை எடுத்து, மடக்கி சுருட்டி, குறுக்கி, (படம்-2) தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும். பெவிகாலை தலைப் பகுதியில் தடவி, இந்தப் பஞ்சை ஒட்டி விடவும். இதேபோல் தாடிப் பகுதியை அளந்து தயார் பண்ணி வைத்துக் கொண்டு (படம் 3) பெவிகால் தடவி ஒட்டி விடவும். பிறகு மீசைப் பகுதியைத் தயார் பண்ணிக்

தாத்தா பொம்மை



கொண்டு, (படம் 4) மூக்குக் கீழே பெவிகால் தடவி ஒட்டி விடவும். மீசை, கட்டையாக (பருத்து நீண்டதாக) வந்து விடும் என்பதால் வாய் அவசியம் இல்லை.

இனி, கிறிஸ்மஸ் தாத்தாவுக்குத் தொப்பி தயாரிக்க வேண்டும். மளிகைக் கடையில், சாமான் கட்டுபவர் காகிதத்தைச் சுருட்டி கூம்பு வடிவத்தைத் தயார் செய்வதைக் கவனித்திருப்பீர்கள். அதேபோல் ஒரு வண்ணக் காகிதத்தைச் சின்னதாக வெட்டிக் கொண்டு, கூம்பு செய்து, தாத்தாவின் தலையில் உட்காரும் அளவுக்கு வெட்டி ஒட்டிக் கொண்டு, முட்டைப் பகுதியில் (தலைப் பகுதியில்) பெவிகால் தடவி தொப்பியைக் கவிழ்த்து ஒட்டி விடவும். தொப்பியின் கூர் முனையில், பறப்பது போல் கொஞ்சம் பஞ்சை ஒட்டி விடவும்.



4

இந்த கிறிஸ்துமஸ் தாத்தாவை டப்பாவின் விளிம்பில் கீழே பெவிகால் தடவி ஒட்டி வைத்து விடலாம்.

இந்த மாதிரி நிறையச் செய்து, கிறிஸ்மஸ் மரத்தின் இலைகளில் மறைந்து எட்டிப் பார்ப்பது போல் வைக்கலாம். தொப்பியை விதம் விதமாக உங்கள் கற்பனைக்கு ஏற்ப ஜிகினா பொட்டு ஒட்டிக்கூட அழகு படுத்தலாம். தொப்பியின் கூம்பு நுனியில் (உள்ளே நூலைக் கொடுத்து) இழுத்து மேலிருந்து தொங்க விடலாம். இப்படி மாட்டும்போது, முட்டையின் பின் தலைப் பகுதி தெரியாமல், பஞ்சை ஒட்டி மறைத்து விட வேண்டும். கிறிஸ்மஸ் பரிசுப் பொருளைத் தரும்போது உங்கள் அன்பளிப்பாக இந்த கைக்கு அடக்கமான கிறிஸ்துமஸ் தாத்தாவையும் தரலாம்.

முட்டையையா?" என்று முகம் சுளுக்க வேண்டாம். கூம்பிய ஓவல் (நீள் வட்டம்) வடிவ தேங்காயைக் கொண்டும் இதைச் செய்யலாம். தேங்காய் மூடி காலியான பிறகு, பொருத்தமாகத் தரையில் தேய்த்து இரண்டு பகுதிகளையும் ஒட்டிக் கொள்ளுங்கள். உப்புக் காகிதத்தைக் கொண்டு, மேல் பகுதியைத் தேய்த்து வழுவழுப் பாக்கிக் கொள்ளுங்கள். மற்ற எல்லாம் இதே மாதிரித்தான்.

கே.குப்புராஜ், கைவினைப் பயிற்சியாளர், ஜவஹர் சிறுவர் இல்லம், காந்தி இல்லம், அரசினர்தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002.



பிரார்த்தனை.....

என்றும்நான் நல்லதையே எண்ண வேண்டும் - இறைவா
என்றும்நான் நல்லதையே பேசவேண்டும்
என்றும்நான் நல்லதையே செய்யவேண்டும் - அதற்கு
என்றும்நீ இன்னருளை வழங்கவேண்டும்.

என்றும்நான் நல்லதையே படிக்கவேண்டும் - இறைவா
என்றும்நான் நல்லதையே படைக்கவேண்டும்.
என்றும்நான் நல்வழியில் நடக்கவேண்டும் - அதற்கு
என்றும்நீ இன்னருளை வழங்கவேண்டும்.

உண்மையான உழைப்பினை நான் மதிக்கவேண்டும் - இறைவா
ஓசிகளை முடியும்மட்டும் தவிர்க்க வேண்டும்
நன்மையான கலைகளில்நான் சிறக்க வேண்டும் - இந்த
நானிலமே புகழநானும் ஜொலிக்க வேண்டும்!

இந்தவரம் எனக்கு வேண்டும் இறைவா இறைவா - அதை
எனக்கருள என்னதடை இறைவா இறைவா
உன்னையேநான் சரண் அடைந்தேன் இறைவா இறைவா - என்
உள்ளிருந்தே வழிநடத்தேன் இறைவா இறைவா!

— அனுஷா, முத்துராமலிங்கபுரம்.

மலரட்டும்!


எங்கள் தென்னை மரங்களில்
எக்கச் சக்க இளநீர்கள்!
உங்கள் வீட்டுத் தோட்டத்தில்
உள்ள தென்னை எத்தனை?

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இரண்டு பெரும் மாமரம்
உங்கள் வீட்டுத் தோட்டத்தில்
உள்ள மா எத்தனை?

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
ஏழு எட்டு வாழைகள்!
உங்கள் வீட்டுத் தோட்டத்தில்
உள்ள வாழை எத்தனை?

மரங்கள் எல்லாம் இயற்கையின்
வரங்கள் என்னும் உண்மையைப்
புரிந்து கொண்டால் உலகிலே
புதிய இன்பம் மலருமே!

— வி.ஜ. அசோக்குமார்,
முத்துராமலிங்கபுரம்.





படமாக எடுக்க வேண்டியவை!



✉ 'காட்டிலும் அறிவொளி இயக்கம்' - அரசாங்கம் படமாக எடுத்துச் செய்ய வேண்டிய பணி! கல்லாமையின் கொடுமையை; அவசியத்தை இதைவிட யாராலும் உணர்த்த முடியாது. ஆசிரியர் பெயரை வெளியிடவில்லையே சார்! - பெரியபாளையம் சி. கண்ணப்பன், செம்பனார் கோயில் ஜெ.ஜெம்மு, கல்தான் பேட்டை கமால் பாட்சா, கின்னியாக்குறிச்சி கே.ஆர். பரமேஸ்வரன், அருப்புக்கோட்டை ம. இராஜ்குமார், பரங்கிப்பேட்டை காசி, நடராஜன், கபிஸ்தலம் என். வினோத் பாபு.

✉ சின்ன பாபுவின் திக் திக்திக் கதைகள் இதுவரை சிறுவர்க்காக யாருமே செய்யாத முயற்சி! எத்தனை பாராட்டினாலும் தகும்! - விருதுநகர் மா. சுந்தரபாண்டி, ஏனாத்தூர் வா. செங்கோடன், மாயூரம் சு. சீத்தம்மா, விருத்தாசலம் வி. பிரபாகர், ஆர். ரவிவர்மன், கள்ளிக்கரடு எஸ். மூர்த்தி, கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு.

✉ மாதா மாதம் வித்தியாசமான நாடகத்தை வழங்கும் எஸ்.ஆர்.ஜி. சுந்தரத்தின் பணி நல்ல பணி. எல்லாமே அருமைதான்! - தாராபுரம் வி. சக்திமுருகன், சிதம்பரம் மா. பொன்னம்மாள், சின்னசேலம் ஆர். பிரசன்னா, பிரபாகர், கருமத்தம்பட்டி அ. இராஜப்பன், வடக்கந்தாங்கல் எஸ். வெங்கடேசன், தலைஞாயிறு என். முத்துக்குமரன், கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு.

✉ 'கண்மணி கேட்ட வரம்!' - படம் கருத்து இரண்டுமே மனதைக் கவர்ந்தது. கோகுலத்திற்கு நிகர் கோகுலமே என்பதை உறுப்படுத்தியது! - பாலக்காடு வி. மகேந்திரன், நெய்வேலி எஸ். இந்துமதி, பொன்னேரி சத்யா நித்யா, சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார், வெள்ளாளன்விளை பி. நெல்சன், செம்பனார்கோயில் ஜே. தேவி விநோதா, கல்தான்பேட்டை கமால் பாட்சா, கபிஸ்தலம் ஆர். இரவிவர்மன், கள்ளிக்கரடு எஸ். மூர்த்தி, அருப்புக்கோட்டை ம. இராஜ்குமார், பரங்கிப்பேட்டை காசி நடராஜன், கருமத்தம்பட்டி இரா. அனிதா, கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு.

✉ "காசு சேர்ப்போம் முன்னாலே; கவலை இல்லை பின்னாலே" - அட்டைப் படம், கட்டுரை, இரண்டுமே சேமிப்பின் முக்கியத்துவத்தை நன்றாக மனத்தில் பதிய வைத்து விட்டன! - திண்டிவனம் சாந்தா, நாராயணி, விபீஷணபுரம் ஜி.ஜி. கிருஷ்ணன், செம்பனார்கோயில் எம். ஜெயபாலன், திருச்செங்கோடு இரா.அ. தென்றல் நிலவன், கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், பணைக்குளம் ச. அமீர்நிஸ்லாம், மேலப்பாதி எஸ். நாகராஜன், பரங்கிப்பேட்டை காசி நடராஜன், திருவெற்றியூர் என். ஸ்ரீதர்.

✉ தாமரைக் கோழியை அறிவியல் அடிப்படையில் அறிமுகப்படுத்திய விதம் மனதை அள்ளுகிறது! மகத்தான பணி! - நெய்வேலி வா. சின்னமௌலானா, விருத்தாசலம் ஆர். பிரபாகர், விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், செம்பனார்கோயில் ஜெ. ஜெம்மு, கருமத்தம்பட்டி இரா. அருண் பிரகாஷ், திருவண்ணாமலை ஆர் வானதி, ஆர். தியாகு.

✉ நகர வாழ்க்கையையும் கிராம வாழ்க்கையின் அருமையையும் படம்பிடித்துக் காட்டியது "எங்கூர்தான் எங்கூர்தான்!" - மேட்டுப்பாளையம் வா. அடைக்கலம், சைதை ஜி.கே. வெண்ணிலா, கன்னியாக்குறிச்சி கே.ஆர். பரமேஸ்வரன், கருமத்தம்பட்டி அ. இராஜப்பன்.

✉ 'மகனுக்காக' கட்டுரை தந்தை மகன்; காந்தி, தேவதாஸ் காந்தி பாசத்தை விண்டு காட்டிக் கண்களைக் கலங்க வைத்தது. - சாத்தூர் மா. இருளாண்டி, பொன்நீலம்நாயகி வி. ராச்சியம்மாள், விருத்தாசலம் மு. பொன்முடி, செம்பனார்கோயில் ஜெ. தேவி வினோதா, ஆலப்பாக்கம் கி. சிவா.

✉ 'காந்தி பாடல்' மனதை நிறைத்தது. - மதுரை சு. தேம்பவாணன், சாலாமேடு பி. ஜெயசிங், அருப்புக்கோட்டை ம. இராஜ்குமார்.

✉ ஒலிம்பிக் நெகிழ்வுகள், உண்மையாகவே நெகிழவைத்தன! - சின்னபாளையம் கா. முத்து, முருகன், விருத்தாசலம் வி. பிரபாகர், செம்பனார்கோயில் எம். ஜெயபாலன், ஜெ. ஜெம்மு, கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், மேலப்பாதி என். ராஜலட்சுமி.

சாட்சிக்கு வந்தவர்

பல்வீர்சிங் டில்லியில் ஒரு டாக்சி டிரைவர். தேசப்பற்று மிக்கவர். அவர் டாக்சி கொஞ்சம் பழசு. அதுவும் கூட அவர் வாடகைக்கு எடுத்து ஓட்டி வந்ததுதான். டாக்சி பழசாக இருந்தாலும் அதை சுத்தமாகத் துடைத்து பராமரித்து வந்தார். பல்வீர்சிங் எப்போதும் மலர்ந்த முகத்தோடு இருப்பார். எல்லோரிடமும் பணிவாக, அன்பாக, நட்புடன் பழகுவார். அவருடைய இனிய குணமே, அவருக்கு ஏகப்பட்ட வாடிக்கையாளர்களை அளித்தது. பலரும் அவர் டாக்சியையே தேடி வருவார்கள்.

பலவீர்சிங்கிடம் ஒரு தனியான பழக்கம் இருந்தது. காலையில் எழுந்ததும் முதல் வேலையாகத் தனது டாக்சியை டெல்லியில் இருந்த ஒரு புகழ் பெற்ற தலைவரின் வீட்டு வாசலில் கொண்டு போய் நிறுத்துவார். பொறுமையாகக் காத்திருப்பார். தனது அன்புக்குரிய அந்தத் தலைவர் வெளியே வந்ததும் இவர் அவருக்கு வணக்கம் செலுத்திவிட்டு அதற்குப் பிறகு தான் தொழில் செய்யப் புறப்படுவார்.

ஒருநாள் பல்வீர்சிங்கின் டாக்சி மீது ஒரு லாரி மோதி விட்டது. டாக்சியின் பல பாகங்கள் சேதமடைந்து விட்டன. ரிப்பேர் செய்ய நிறையப் பணம் தேவைப்பட்டது. கடனை வாங்கி, பாத்திரம் பண்டம் விற்று, எப்படியோ ரிப்பேர் செய்தார். அப்படி ரிப்பேர் செய்த பிறகும் கூட அந்த டாக்சி முன்போல் நன்றாக ஓடவில்லை. அவரது டாக்சியின் நிலையைப் பார்த்து வாடிக்கையாளர்கள் விலகிக் கொண்டனர். எவரும் பக்கத்தில் கூட வருவதில்லை! அதனால் வரவர அவருக்கு வருவாய் குறைந்து விட்டது. அவரிடம் இருந்த சேமிப்பு, பாத்திரம் பண்டம் எல்லாம் டாக்சியை ரிப்பேர் செய்வதிலேயே தீர்ந்து விட்டது. பல்வீர்சிங் வறுமையின் பிடியில் சிக்கினார்.

நாளுக்கு நாள் பல்வீர்சிங்கிற்குப் பிழைப்பே கஷ்டமாகி விட்டது. இருந்தாலும் அவர் தன் பழக்கத்தை மட்டும் விடவில்லை. எப்போதும் போலவே தனக்குப் பிடித்த அந்த அன்புத் தலைவரின் வீட்டு வாசலுக்குச் சென்று அவர் வரும்வரை காத்திருந்து வணக்கம் செலுத்தி விட்டுத்தான் புறப்படுவார்.

ஒரு நாள் அந்தத் தலைவர் பல்வீர்சிங்கை கூப்பிட்டு, "தினமும் வந்து எனக்காகக் காத்திருக்கிறீர்களே! எதற்காக?" என்று கேட்டார்.

"உங்களைப் பார்த்தால் மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. பாரத அன்னையையே தரிசித்தது போல் உணர்கிறேன். அதனால்தான் தினமும் வருகிறேன்" என்றார் பல்வீர்சிங்.

இதைக் கேட்டுச் சிரித்த தலைவர், "என்னைப் பார்த்தால் வயிறு நிரம்பிவிடுமா? இந்த டாக்சியை வைத்துக் கொண்டு தினமும் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அத்தனை ஆண்டுகளில், தலைவர் அவரைப் பற்றி விசாரிப்பது அதுவே முதல் முறை!

"விபத்து நடப்பதற்கு முன்னால், குடும்பத்தைக் காப்பாற்றுகிற அளவுக்குப் பணம் கிடைத்தது. ஆனால் விபத்துக்குப் பிறகு எவருமே என் வண்டியை நாடாததால் பிழைப்பே கஷ்டமாகி விட்டது" என்று தன் நிலையைக் கூச்சத்துடன் தயங்கித் தயங்கி விவரித்தார் பல்வீர்சிங்.

"அப்படியானால் புது டாக்சி வாங்கிக் கொள்ளுங்களேன்? அதிகம் சம்பாதிக்கலாமே?" என்றார் தலைவர்.

"என்னிடம் பணமே கிடையாது. சேமிப்பு எல்லாம் செலவழிந்து விட்டது. பாங்கில் கடனாகப் பணம் கேட்டேன். யாராவது ஒருவர் சாட்சிக் கையெழுத்துப் போட வேண்டும் என்கிறார்கள். என்னை மாதிரி உள்ளவர்களுக்கு யார் சாட்சிக் கையெழுத்துப் போடுவார்கள்?" என்று கேட்டார் பல்வீர்சிங்.

சற்று யோசித்த தலைவர், "ஏன், நானில்லையா? பாங்கில் கடன் கேட்டு விண்ணப்பக் கடிதம் கொடுங்கள். சாட்சிக் கையெழுத்துப் போட, நானே நாளை பகல் பன்னிரெண்டு

மணிக்கு நேரில் வருகிறேன் என்று பாங்க் அதிகாரியிடம் சொல்லுங்கள்" என்று சொன்னார்.

அதன்படியே பல்வீர்சிங் பாங்கிற்குச் சென்று விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, 'சாட்சி' என்ற இடத்தில், அந்த தலைவரின் பெயரை எழுதிக் கொடுத்தார்.

"தலைவரின் பெயரைக் காட்டி எங்களைப் பயப்படுத்தி ஏமாற்றப் பார்க்கிறாயா?" என்று அதட்டி பல்வீர்சிங்கை பாங்கிலிருந்து துரத்தி விட்டார் அந்த பாங்க் அதிகாரி.

ஆனாலும் மறுநாள் பகல் பன்னிரண்டு மணிக்கு தலைவரை எதிர்பார்த்து பாங்க் வாசலிலேயே காத்திருந்தார் பல்வீர்சிங். குறித்த நேரத்தில் தலைவரும் வந்து விட்டார். அவர் பல்வீர்சிங்கிடம், "விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து விட்டீர்கள் அல்லவா? கையெழுத்துப் போட்டு விட்டு நான் அவசர வேலையாகப் போக வேண்டும்" என்றார்.

பல்வீர்சிங், முன்தினம் பாங்க்கில் நடந்ததையெல்லாம் சொன்னார். தலைவர் பல்வீர்சிங்குடன் பாங்கினுள் நுழைந்தார். அவரைப் பார்த்த எல்லோருக்கும் ஒரே அதிர்ச்சி! பாங்க் அதிகாரி பரபரத்துப் போனார். ஓடோடி வந்து, "டெலிபோனில் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நானே வந்திருப்பேனே? நீங்கள் இவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டாமே!" என்று பணிவோடு கேட்டார்.


லீலாவதி

"நான் பல்வீர்சிங்கிற்கு சாட்சிக் கையெழுத்துப் போட வந்திருக்கிறேன். எங்கெங்கே கையெழுத்துப் போட வேண்டும் என்பதை சீக்கிரம் சொல்லுங்கள். இன்னொரு அவசர வேலைக்குப் போக வேண்டும்" என்றார் தலைவர்.

அதிகாரி அடுத்த நிமிடமே, கையெழுத்துப் போட வேண்டிய படிவங்களைக் கொடுத்துத் தலைவரிடம் கையெழுத்தைப் பெற்றுக் கொண்டு பல்வீர்சிங்கிற்கு கடன் தொகையை வழங்கினார்.

அந்த பணத்தைக் கொண்டு புதிய டாக்சி வாங்கி இனிதே வாழத் தொடங்கினார் பல்வீர்சிங். அதன் பிறகும் கூட தலைவர் மாதாமாதம் சிறிய தவணைகளில் பல்வீர்சிங்கின் பெயரில் தானே பணம் கட்டி வந்து அந்தக் கடனை அடைத்தார். பல்வீர்சிங் தானே கடனை அடைக்க விரும்பியும் தலைவர் அவரை அனுமதிக்கவில்லை.

ஒரு சாதாரண டாக்சி டிரைவருக்கு, வங்கியில் சாட்சிக் கையெழுத்திடத் தானே வந்த அந்தத் தலைவர் நமது ஒப்பற்ற நேருஜிதான்!







உயர்ந்து வாழ்பவர்!

அம்மா ஒருநாள் அலமுவிடம்
அவசர வேலை சொன்னவுடன்
சும்மா உனக்கு வேலைதான்
செய்து கொண்டா இருக்கணும்?

என்றே அலமு சிடுசிடுத்தாள்
எதிர்த்தே கேள்வி கேட்டிட்டாள்
அம்மா வருத்தம் கொண்டனளே
அலமு திருந்த வேண்டினளே.

அப்பா அவளைக் கூப்பிட்டு
அன்பாய் வேலை சொன்னதும்
சுப்பன் இடமே சொல்லுங்கள்
சுந்தரி இல்லம் செல்லணும்!

என்றே அலமு சிடுசிடுத்தாள்
எதிர்த்தே கேள்வி கேட்டிட்டாள்
அப்பா வருத்தம் கொண்டனரே
அலமு திருந்த வேண்டினரே.

அண்ணன் குரலைக் கேட்டுவிட்ட
அவசரத் தோடு அலமுவுமே
சொன்ன வேலை செய்யாமல்
சென்று விட்டாள் வெளியினிலே!

அன்பாய்ப் பெரியோர் இடும்பணியை
ஆர்வ முடனே செய்கின்ற
பண்பு உள்ளம் கொண்டவரே
பாரில் உயர்ந்து வாழ்பவர்!

— எஸ். வஜ்ரவேலு



பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.



HAVE A WILD, COLOURFUL TIME IN THE JUNGLE... WITH KORES!
ALL ABOARD FOR THE KORES COLOUR SAFARI!
Bring out your happy-go-lucky Kores Students' Art Materials.
Water Colours, Wax Crayons and Plasticrayons.
Use them all... Make your animal friends come alive!
Hear the lion roar... the elephant trumpet...
the monkeys chatter....Go ahead! It's g-r-r-eat fun!
kores
NON TOXIC
16 CRAYONS
kores
WAX CRAYONS
kores
STUDENTS'
CAKES
kores
PLASTICRAYONS
12
ORES STUDENTS' ART MATERIALS
kores
Quality You Always Trust

AKA/789-C (GOK)

under PMG's Licence No. TN/MS/(S) 14" Registered as a Newspaper in Sri Lanka